# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 30
பக்கங்கள்: 28

சுடர் 33 கதிர் 264 ஆவணி 01ஆம் நாள் வெள்ளிக்கிழமை 17 ஒகஸ்ட் 2018 வள்ளுவர் ஆண்டு 2049


## பொன்னாலை வரதராஜர் கொடி இன்று

பொன்னாலை, ஓக. 17
வரலாற்றுச் சிறப்பு மிக்க பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்தின் வருடாந்தப் பெருந் திருவிழா இன்று >> 25

# அரசமைப்பு உருவாக்கம் இலகுவான விடயமல்ல

### யாழ்ப்பாணத்தில் கூறினார் அமைச்சர் ராஜித சேனாரட்ன

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 17
இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு அனைத்துத் தரப்புக்களும் இணங்கியுள்ளன. அதற்காகப் புதிய அரசமைப்பு உருவாக்குவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. அந்த முயற்சி அவ்வளவு இலகுவானது அல்ல. அதனை நிறைவேற்றுவது இலேசான காரியமும் அல்ல.
இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான ராஜித சேனாரட்ன தெரிவித் >> 25

## அலங்காரக் கந்தனுக்கு நேற்றுக் கொடியேற்றம்



யாழ்ப்பாணம், ஓக.17
வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தன் ஆலய வருடாந்தத் திருவிழா நேற்றுக் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. >> 25

## விடுதியில் தங்கியோரிடம் ரூ. 3 லட்சம் பணம் திருட்டு

### விடுதி உரிமையாளர் கைது

யாழ்ப்பாணம், ஓக.17
யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் உள்ள விடுதி ஒன்றில் தங்கியிருந்தபோது பணமும், நகைகளும் திருடப்பட்டன என்று யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய விடுதி உரிமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
யாழ்ப்பாணம், நகரில் விக்ரோரியா வீதியில் உள்ள விடுதி ஒன்றிலேயே இந்தச் சம்பவம் நடந்துள்ளது.
பெரும்பான்மையினக் குடும்பத்தைச் சேர்ந்த குடும்பம் ஒன்று சுற்று >> 25

## உலங்குவானூர்தியில் ஏ.எல். வினாத்தாள்கள்

### நெடுந்தீவு மாணவர்களுக்காக

யாழ்ப்பாணம், ஓக. 17
கடும் கடற்கொந்தளிப்புக் காரணமாக நெடுந்தீவுக்கான படகுச் சேவை இடம்பெறவில்லை. அங்கு உயர்தரப் பரீட்சை எழுதும் 33 மாணவர்களுக்கான வினாத்தாள்கள் வான் படையினரின் உலங்குவானூர்தியில் நேற்று எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.
கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை நாடு முழுவதிலும் இடம்பெற்று வருகின்றது. கடந்த சில தினங்களாக காலநிலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. கடும் காற்றுடன் கூடிய காலநிலை குடா நாட்டிலும் நிலவுகின்றது. >> 25



## ரவிராஜுக்கு அஞ்சலி செலுத்தினார் ராஜித

யாழ்ப்பாணம், ஓக. 17
சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் அமைக்கப்பட்ட குருதி சுத்திகரிப்பு நிலையத்தை >> 24

## மக்கள் பற்றிச் சிந்தித்தால் ராணுவத்துக்கு இழப்பாம்!

### இப்படிச் சொல்கிறார் மகிந்த

கொழும்பு, ஓக. 17
இராணுவம் பொதுமக்களை இலக்குவைத்து ஒரு போதும் போரை முன்னெடுக்கவில்லை. பொதுமக்களை பாதுகாத்து புலிகளை மட்டுமே இலக்கு வைத்து போரை >> 25

## வாஜ்பாய் காலமானார்

கொழும்பு, ஓக. 17
நீண்ட காலமாக நோய் வாய்ப்பட்டிருந்த இந்தியாவின் முன்னாள் தலைமை அமைச்சர் அடல்பிகாரி வாஜ்பாய் (வயது-93) புதுடில்லியில் நேற்றுக் காலமானார்.
உடல்நலக்குறைவு காரணமாக வாஜ்பாய். >> 25

## அனைத்தையும் எதிர்ப்பதே எதிர்க்கட்சியின் பணியல்ல

### அமைச்சர் அஜித் விளக்கம்

கொழும்பு, ஓக. 17
அரசின் அனைத்து வேலைகளுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் மக்கள் விடுதலை முன்னணியும் ஆதரவு வழங்குவதில்லை. எதிர்க்க வேண்டியதை எதிர்க்கின்றனர். தெற்கு மக்களின் பிரச்சினை குறித்து குரல் கொடுக்காமல் இருப்பது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பிரதான குறைபாடாகும்.
இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தொழிற்சங்க செயலரும், இராஜாங்க அமைச்சருமான அஜித் பீ பெரேரா தெரிவித்தார்.
ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். >> 25

## தமிழ் அமைப்புகளுக்கு ஐ.நாவில் சவாலாவோம்

### தேசப்பற்றுள்ள இலங்கையர் ஒன்றியம் கூறுகின்றது

கொழும்பு, ஓக. 17
ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 39ஆவது கூட்டத் தொடர் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 19 ஆம் திகதி ஜெனிவாவில் நடைபெறவுள்ளது. புலம்பெயர் தமிழ் அமைப்புகளுக்கு நாம் >> 22

## தென்னிலங்கை மீனவர்கள் நாயாறிலிருந்து அகன்றனர்

### முறுகல் நிலை ஏற்படாதவாறு பொலிஸார் கடும் பாதுகாப்பு

முல்லைத்தீவு, ஓக. 17
முல்லைத்தீவு மாவட்டத்தின் நாயாற்றில் தங்கியிருந்து தொழில் நடவடிக்கைகளை முன்னெடுத்த தென்னிலங்கை மீனவர்கள், பொலிஸ் பாதுகாப்புடன் நேற்று மாலை அங்கிருந்து வெளியேறினர். >> 24



### ஊடகவியலாளர்களுக்கு எதிரான சம்பவங்கள்

## ஐந்து விசாரணைகளே தற்போது; தமிழர்கள் தொடர்பில் விரைவில்

### சட்டம் ஒழுங்கு அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 17
கடந்த ஆட்சிக் காலத்தில் ஊடகவியலாளர்கள் கடத்தப்பட்ட, தாக்கப்பட்ட, கொலை செய்யப்பட்ட சம்பவங்களில், 5 சம்பவங்கள் தொடர்பிலேயே விசாரணைகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுகின்றன. >> 25

## சமையல் எரிவாயுவுக்கும் புதிய விலைச் சூத்திரம்

கொழும்பு, ஓக. 17
சமையல் எரிவாயு விலை குறித்து புதிய விலைச் சூத்திரத்தை அறிமுகப்படுத்துவதற்கு வாழ்க்கைச் செலவு தொடர்பில் ஆராயும் குழு தீர்மானித்துள்ளது.
சூத்திரம் தயாரிக்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள் >> 25




மாகாணசபைத் தேர்தல்

## இழுத்தடிக்கப்படுவது தொடர்பில் ஜெனிவாவில் முறைப்பாடு

கொழும்பு, ஓக. 17

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள்சபையின்39ஆவது அமர்வில் இலங்கையில் மக்களின் வாக்களிக்கும் உரிமை மீறப்படும் விவகாரம் தொடர்பில் முறையிடவுள்ளதாக உலகளாவிய தேசப்பற்றுள்ள இலங்கையர் ஒன்றியத்தின் உறுப்பினர் துசாந்தி ஹபுகொட தெரிவித்தார்.

பொரளை என்.எம்.பெரேரா நிலையத்தில் உலகளாவிய தேசப்பற்றுள்ள இலங்கையர் ஒன்றியம் ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் தற்போது ஜனநாயகம் பேணப்படுகின்றதா என்கின்ற சந்தேகம் எமக்குள்ளது. ஏனெனில் மூன்று மாகாண சபைகளின் பதவிக்காலம் நிறைவடைந்துள்ளது. இன்னும் தேர்தல் நடத்தப்படவில்லை. மக்களின் வாக்களிக்கும் உரிமையை கூட்டரசு இல்லாது செய்துள்ளது.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 19ஆம் திகதி நடைபெறவுள்ள மனித உரிமைகள் சபையின் 39ஆவது அமர்வில் இலங்கையில் தற்போது மீறப்படும் உரிமைகள் குறித்த வரைபுகளை முன்வைக்கவுள்ளோம் - என்றார். (5.61)

## சபையின் நிதியில் வீதி மறுசீரமைப்பு

வலி. வடக்கு அமர்வில் முடிவு

யாழ்ப்பாணம், ஓக.17

அளவெட்டி அருணோதயக் கல்லூரிக்குப்பின்பாகவுள்ள வீதி சபை நிதியில் சீரமைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

வலி.வடக்குப் பிரதேச சபை அமர்வு நேற்றுத் தவிசாளர் சோ.சுகிர்தன் தலைமையில் நடைபெற்றது.

அளவெட்டி அருணோதய கல்லூரியின் பின் பக்க வீதி நீண்ட காலம் சீரமைக்க முடியாமல் இருந்தது. மழை காலங்களில் இந்த வீதியால் பாடசாலை மாணவர்கள் செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது. 80 மீற்றர் நீளமான இந்த வீதியைச் சீரமைக்க வேண்டும் என்று வட்டார உறுப்பினர் வ.பிரபாகரன் கோரினார். அந்த வீதி சபை நிதியில் சீரமைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

சுற்றாடல் பொது வசதி குழு ஆரம்பிக்கப்பட்டுள்ளபோதும், அதன் செயற்பாடு இன்றுவரை நடைபெறவில்லை என்று அமர்வில் சுட்டிக்காட்டப்பட்டது.

**குழு அமைத்தும் செயற்படவில்லை**

10 வட்டாரங்களை உள்ளடக்கிய 13 பேர் கொண்ட சுற்றாடல் பொது வசதி குழு மக்களின் சூழல் சார்ந்த பிரச்சினைகளை தீர்ப்பதற்கு உருவாக்கப்பட்டது. இன்று வரை அதற்கான அதிகாரங்கள் தரப்படவில்லை. வேலைகள் நடைபெறவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

வட்டாரங்களில் சூழல் சார்ந்த பிரச்சினைகளை இனம் காணுங்கள். சபை ஊழியர்களுடன் சேர்ந்து கிழமையில் ஒரு நாள் சுற்றாடல் சார்ந்த வேலை திட்டங்களை முன்னெடுப் போம். பிரச்சினைகளை இனம் காணுங்கள் என்று சபையின் தவிசாளர் தெரிவித்தார்.

**வலி. தெற்கு கழிவுகளை கொட்டுவதற்கு கண்டனம்**

கழிவகற்றல் தொடர்பாகவும் அமர்வில் பேசப்பட்டது. வலிகாமம் தெற்குப் பிரதேச சபைக் கழிவுகளை. வலி.வடக்குப் பிரதேச சபைக் குவாரிக்குள் கொட்டுவதற்கு யார் அனுமதி கொடுத்தது என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் பொ.ஆதவன் கேள்வி எழுப்பினார்.

அதற்குச் சபையின் அனுமதி பெறப்படவில்லை. பொது இடத்தில் தனிநபர் குப்பை போட்டால் அதற்குச் சட்ட ஏற்பாடுகள் உண்டு. எமது பிரதேசம் குப்பை மேடா? இதற்கு யார் அனுமதி கொடுத்தது? என்றும் அவர் கேள்வியெழுப்பினார்.


புரிந்துணர்வு அடிப்படையில் அந்த அனுமதியை வழங்கியிருந்தேன். இனி அவ்வாறான செயற்பாடுகள் நடைபெறாது என்று சபையின் தவிசாளர் தெரிவித்தார்.

**அடுத்த அமர்வில் தீர்மானம்**

பிரதேச சபைத் தவிசாளர் சபை வாகனத்தைப் பயன்படுத்துவது தொடர்பில் தீர்மானம் ஒன்றை அடுத்த சபை அமர்வில் கொண்டுவரவுள்ளோம் என்று அமர்வின் பின்னர் கருத்துத் தெரிவித்த ஐ.தே.கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

சபை வாகனம் தனிப்பட்ட தேவைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றது. வாகனம் சபையில் தரிப்பதில்லை என்று ஊடகங்கள் வாயிலாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. அடுத்த அமர்வில் இது தொடர்பில் தீர்மானம் ஒன்றை எடுக்கவுள்ளோம்.

இது தொடர்பான சட்ட முறைகளை ஆராய்வதற்காக மாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்குக் கடிதம் ஒன்றையும் அனுப்பியுள்ளோம். எமது தீர்மானத்துக்கு பெரும்பாலனவர்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர் என்றும் அவர்கள் தெரிவித்தனர். (ற-7)



## சமஷ்டித் தீர்வை நோக்கியே செல்கின்றது தமிழரசுக் கட்சி

வடமாகாண அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக.17

இலங்கைத்தமிழரசுக்கட்சி ஆரம்ப காலத்தில் இருந்து தற்போதுவரை கூட்டாட்சித்(சமஷ்டி) தீர்வை நோக்கியேபணிக்கின்றது. அதை எந்தச் சந்தர்ப்பத்திலும் நாம் கைவிடவில்லை.

இவ்வாறு தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம்.

தமிழரசுக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் வி.நாகநாதனின் நினைவுதின நிகழ்வுகள் நேற்று நடைபெற்றன. யாழ்ப்பாணம், மார்ட்டின் வீதியில் உள்ள தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றும்போதே வடக்கு மாகாண அவைத் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;

எந்த இடத்திலும் நாம் கூட்டாட்சித் தீர்வைக் கைவிடவில்லை. அவ்வாறு கூறவுமில்லை. எமது ஆரம்ப கால உறுப்பினர்கள் எம் இனத்தின் விடுதலைக்காகப் பல போராட்டங்களை ஜனநாயக ரீதியில் முன்னெடுத்தார்கள். அமரர் நாகநாதனும் பல அகிம்சைப் போராட்டங்களில் ஈடுபட்டவர் - என்றார்.

நிகழ்வில் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராசாவும் உரையாற்றினார்.

அவர் தெரிவித்ததாவது:

எமது இன விடுதலைக்காக நாம் போராடியபோது, தனிநாடு கோருகின்றோம் என்று அரசு எம்மைச் சிறையில் அடைத்தது. நீண்ட நாள்களாகப் பிணை வழங்கப்படாது விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தோம். அப்போது நீதிபதியாக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் இருந்தார். அவரால் எனக்கும், என்னுடன் இருந்த காசி ஆனந்தனுக்கும் பிணை கிடைத்தது. நாம் பல போராட்டங்களை இனத்துக்காக முன்னெடுள்ளோம், முன்னெடுத்து வருகின்றோம். கூட்டாட்சித் தீர்வுக்காக ஆரம்ப காலத்தில் இருந்து போராடும் கட்சி எமது கட்சி மட்டும் தான். நாம் தொடர்ந்து போராடுவோம் - என்றார்.

நிகழ்வில் யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வர் இ.ஆர்னோல்ட், கட்சி உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற-8)

## ராஜித வந்த நிகழ்வுகளை புறக்கணித்தார் குணசீலன்

உரியவாறு அழைக்கவில்லை என்றும் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஓக.17

யாழ்ப்பாணம் வந்த கொழும்பு சுகாதார அமைச்சர் ராஜித நேற்று சுகாதாரத திட்டங்களை ஆரம்பித்தார். அந்த நிகழ்வுகளில் வடக்கு சுகாதார அமைச்சர் ஞா.குணசீலன் கலந்துகொள்ளவில்லை.


மாகாண சுகாதார அமைச்சர் என்ற வகையில் ஏற்பாட்டுக் குழுவால் (போதனா மருத்துவனை, கொழும்பு சுகாதார அமைச்சு) தனிப்பட்ட வகையில் எந்த அழைப்பும் விடுக்கப்படவில்லை. அதனால் நிகழ்வுகளில் கலந்துகொள்ளவில்லை என்று வடக்கு சுகாதார அமைச்சர் தெரிவித்தார்.

தபால் மூலமாக எமக்கு அழைப்பு ஒன்று கொழும்பு அமைச்சில் இருந்து அனுப்பப்பட்டிருந்தது. அதை எனக்கான அழைப்பாக நான் கருதவில்லை. தொலைபேசி ஊடாகவோ நேரடியாகவோ மாகாண அமைச்சர் என்ற வகையில் உரிய அணுகுமுறையில் எனக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. அதனால் நிகழ்வுகளில் கலந்துகொள்ளவில்லை. மாகாண அமைச்சர்களுக்கு உரிய அணுகுமுறையில் அழைப்புக்கள் விடுக்கப்பட வேண்டும் என்றும் வடக்கு சுகாதார அமைச்சர் ஞா.குணசீலன் தெரிவித்தார். (ற-114.7)



காங்கேசன்துறை, வசாவிளானில் மோட்டார் குண்டு ஒன்றும், கைக்குண்டொன்றும் நேற்றுக் கண்டெடுக்கப்பட்டது. அங்குள்ள கிணறு ஒன்று துப்புரவாக்கப்பட்டபோது இவை கண்டுபிடிக்கப்பட்டன. இதுதொடர்பில் பலாலி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. (ற-26)

## வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தன் ஆலய கொடியேற்றத் திருவிழா அருட்காட்சிகள்



# 4 சுகாதாரத் திட்டங்களின் ஆரம்ப நிகழ்வுகள்

## யாழ்ப்பாணம் வந்த ராஜித திட்டங்களை ஆரம்பித்தார்

## சிறந்த திறனுள்ளவர்களை இங்கிருந்து மாற்றாதீர்கள்

### சுகாதார அமைச்சர் ராஜிதவிடம் வடக்கு முதலமைச்சர் கோரிக்கை

சிறந்த அறுவைச் சிகிச்சை நிபுணர் ஒருவரை இங்கிருந்துவேறுஇடத்துக்குமாற்ற நடவடிக்கைகள்எடுக்கப்பட்டுள்ளதுஎன்று நான் அறிகின்றேன். திறனுள்ளவர்களை இங்குவிட்டுவைக்கமாட்டார்கள்போன்று தெரிகின்றது. அமைச்சரிடம் நான் கேட்டுக்கொள்வது சிறந்த சேவை செய்பவர்களை தயவு செய்து இங்கு சேவை செய்ய விடுங்கள்.

இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன்.

யாழ்ப்பாணம் வந்த கொழும்பு சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன நேற்று சுகாதாரத் திட்டங்களை ஆரம்பித்தார். யாழ்ப்பாணம் போதனா மருத்துவனையில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதேவடக்குமுதலமைச்சர்மேற்கண்டவாறுகோரிக்கைவிடுத்தார்.

அவர் தெரிவித்தாவது

யாழ்ப்பாணம்போதனா மருத்துவமனை மிகக் குறைந்த வழங்களுடன் சேவையாற்றுகின்றது. ஆனால்அதன்சேவைகள் பெரியளவில்காணப்படுகின்றமைசிறப்பானதாகும். இருதய சத்திரசிகிச்சைகள் நடக்கின்ற நாடளாவிய அரச மருத்துவமனைகள் நான்கில் ஒரு இடத்தை யாழ்ப்பாணம் போதனா மருத்துவனை பெற்றுள்ளது. எமது இருதய அறுவைச் சிகிச்சை நிபுணர்களின் சிறப்பான சேவையை இது காட்டுகின்றது. இருதய அறுவைச்சிகிச்சைமேற்கொள்வதற்கான சிறப்புப் படுக்கை வசதி இரண்டைமட்டுமேகொண்டுஇயங்குகின்றபோதும். மருத்துவநிபுணர்கள்சிறப்பான சேவையை மேற்கொள்கின்றனர்.

சிறந்த அறுவைச் சிகிச்சை நிபுணரை இங்கிருந்து வேறு இடத்துக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்று நான் அறிகின்றேன். நல்லவர்களை. திறனுள்ளவர்களைஇங்குவிட்டுவைக்கமாட்டார்கள் என்றுஎண்ணத்தோன்றுகின்றது.

#### திறமையானோரை மாற்ற வேண்டாம்

பளிகக்கார என்ற சிறந்த ஆளுநர் இங்கு இருந்தார். அவரைஇங்கிருந்துஒருஆண்டுக்குள் மாற்றி ஒரு அரசியல்வாதியைக் கொண்டுவந்தனர். அவரின் நடவடிக்கை எம்மை நீதிமன்றம் வரை கொண்டுசென்றுள்ளது. முதலமைச்சரால் ஆளுநருக்கு கடந்தஆண்டு20ஆம்திகதிஅனுப்பப்பட்ட அமைச்சர்ஒருவரைப்பற்றியதீர்மானம்இது வரையில்அரசிதழில்பிரசுரிக்கப்படவில்லை. அமைச்சரிடம் நான் கேட்டுக்கொள்வது சிறந்த சேவை செய்பவர்களை தயவு செய்து தொடர்ந்து இங்கு சேவை செய்ய விடுங்கள். தற்போது இங்கிருக்கும் அறுவைச் சிகிச்சை நிபுணர் நான் பதவிக்கு வந்த பின்னரே இங்கு வந்தார். அவரை மாற்ற வேண்டிய அவசியம் என்ன என்று தெரியவில்லை. இரண்டு வருடங்களின் பின்னர் வடக்கு. கிழக்கு மருத்துவர்களை மாற்றம்செய்யும்முறைபோர் இடம்பெற்ற காலத்தில்இருந்தது. தற்போது அந்தமுறை தேவையில்லை. அமைச்சர் உரிய நடவடிக்கை எடுப்பார் என்று நம்புகின்றேன். அதைப்போன்றுஏனையதுறைசார்மருத்துவ நிபுணர்களும் தமது சேவைகளை இங்கு திறம்பட முன்னெடுக்கின்றனர். வளங்கள் குறைவாக இருந்தாலும் மருத்துவநிபுணர்களின்திறன்நிறைவாக இருக்கின்றமை எமது பாக்கியமே. இங்கு பணியாற்றும்மருத்துவநிபுணர்கள்தாயகத்தின் பீடும். இங்குள்ள மக்கள் மீதும் கொண்டுள்ள அன்பின் காரணமாகவே இங்கு கடமையாற்றுகின்றனர். அதைஎம்மக்கள் உணர வேண்டும்.

#### வளப்பற்றாக்குறை பிரதான தடை

வடக்குமருத்துவர்கள்தமதுகடமைகளை முன்னெடுத்துச்செல்வதற்குஅவர்களுக்கு இருக்கும் தேவைகளையும். பிரச்சினைகளையும் அறிந்து. தெரிந்து அமைச்சர் அவர்கள் உறுதுணையாக இருப்பார் என்று எண்ணுகின்றேன்.

அரச மருத்துவமனைகளில் உடனடியாக மேற்கொள்ளப்பட முடியாத பல அறுவைச் சிகிச்சைகளும் மற்றும் வேறு சிகிச்சைகளும்உடனடியாகவோஅல்லது மறு தினமோ தனியார் மருத்துவமனைகளில் மேற்கொள்ள முடிகின்றது. ஆனால் அரச மருத்துவ மனைகளில் இது முடிவதில்லை. போதிய மருத்துவநிபுணர்கள் இன்மை. அறுவைச் சிகிச்சைக்கான சத்திர கூட நிலைய வசதிகளின் குறைபாடுகள். நோயாளிகளுக்கான இடப்பற்றாக்குறை மற்றும் வளப் பற்றாக்குறைகள் என்பன அதற்குக் காரணம்.

நிதி நிலைமைகளில் நலிந்தவர்கள் தமது மருத்துவ சேவைகளை அரச மருத்துவமனைகளிலேயேபெற்றுக்கொள்ளமுடியும். நலிந்த மக்களுக்கும் எமது சேவைகள் கிடைக்கவேண்டும். அதற்கானவசதிவாய்ப்புக்கள்ஏற்படுத்திக்கொடுக்கப்படவேண்டும்.

#### பணத்தை மட்டும் நோக்காதீர்கள்

பிரத்தியேக மருத்துவமனைகளில் பணத்தைக்கறந்து எடுப்பதற்கென்றேசில உத்தியோகத்தர்கள் சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர் என்று பலரும் கூறக் கேள்விப்பட்டிருக்கின்றேன். அவர்களின் பெயர் விவரங்களைக் கூட பொது மக்கள் வெளியிடுகின்றார்கள். இவர்களின் செயற்பாடு பிரத்தியேக மருத்துவமனைகளின் நிர்வாகக்கட்டமைப்புக்கும்வருமானத்துக்குமாக சில வேளைகளில் ஏற்புடையதாக இருக்கலாம். ஆனால் அங்கு மாலை நேரங்களிலும் இரவு நேரங்களிலும் தமது தூக்கம். குடும்ப சூழல் எல்லாவற்றையும் மறந்து சேவையாற்றும் மருத்துவ நிபுணர்களின் பெயர்களுக்கு அவைகளங்கம்கற்பிக்கும் வகையில் நடக்கக்கூடாது.

#### மருத்துவர்களும் அறிவது அவசியம்

மருத்துவ நிபுணர்களுக்குக் கிடைக்கும் ஊதியம் மக்களிடம் அறவிடப்படும் பணத்தில்எட்டில்ஒருபங்குகூட இருக்குமோதெரியாது. கால்வாசி கூட இல்லை என்பது நிச்சயம். இந்த அட்டூழியங்கள் குறித்து மருத்துவ நிபுணர்களும் அறிந்து வைத்திருக்க வேண்டும். நீங்கள் இவ்வாறான மருத்துவமனைகளுக்குச்சிலஅறிவுறுத்தல்களை வழங்கமுடியும். இவ்வாறான மருத்துவமனைகளின் சேவைகள் பொதுவானதாகவும்எல்லா மக்களுக்கும்ஓரளவுக்கேனும் ஏற்புடையதாகவும்அமையாதவிடத்துஅம் மருத்துவமனைகளில் நீங்கள் வழங்குகின்ற சேவைகளை விலத்திக் கொள்ளப் போகின்றீர்கள்எனத்தெரிவியுங்கள். அவர்கள்வழிக்கு வருவார்கள்.

அரச மருத்துவமனைகளில் கூடுதல் கவனம் எடுத்து தற்போது நீங்கள் வழங்குகின்றஅர்ப்பணிப்புடனானசேவையைவிட ஒருபடிமேலாகச்சென்றுமுடிந்தளவுபொருளாதாரவசதியில்நலிந்தவர்களை அவர்களது நோய்களின் தன்மைகளிற்கேற்ப அவர்களுக்கானமருத்துவச்சேவைகளை வழங்குங்கள். உங்களைக் கடவுளுக்கு ஒப்பானவர்களாக இந்தச்சமூகம் நோக்கும். மருத்துவத் தொழில் மக்கள் சார்ந்ததாக மாற வேண்டும் - என்றார். (ற-114)

யாழ்ப்பாணம், ஓக.17

யாழ்ப்பாணத்துக்கு நேற்று வந்த கொழும்பு சுகாதார அமைச்சர்ராஜித சேனாரத்னநான்கு சுகாதாரத் திட்டங்களை நேற்று ஆரம்பித்தார். யாழ்ப்பாணம் அரச மருந்துக் கூட்டுத்தாபனக்கிளை. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை தாதியர் விடுதி. சாவகச்சேரி குருதி சுத்திகரிப்பு நிலையம் என்பவற்றைத் திறந்த அமைச்சர் ராஜித சேனாரத்ன. யாழ்ப்பாணம் போதனாமருத்துவனையில்மீள்வாழ்வுநிலையத்துக்கான அடிக்கல்லையும்நட்டார்.

இந்த நிகழ்வுகளில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன். பிரதி அமைச்சர்பைசல்காசிம். நாடாளுமன்றஉறுப்பினர்களான மாவை சோ. சேனாதிராசா. ஈ. சரவணபவன். விஜயகலா மகேஸ்வரன். வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள். சுகாதார அமைச்சின் அதிகாரிகள். மருத்துவர்கள். தாதியர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

#### அரச மருந்துக் கூட்டுத்தாபனம்

யாழ்ப்பாணம்போதனாமருத்துவமனையில் புதிதாக அமைக்கப்பட்ட இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் அரச மருந்துக் கூட்டுத்தாபனம்அமைச்சர்ராஜிதவால்திறக்கப்பட்டது. இந்தக் கட்டடம் சீரமைக்கப்பட்டு நேற்றுத் திறக்கப்பட்டது.

#### மீள்வாழ்வு நிலையம்

யாழ்ப்பாணம் போதனா மருத்துவனையில் அமைக்கப்படவுள்ள மீள்வாழ்வு நிலையத்துக்கான அடிக்கல் அமைச்சர் ராஜிதவால் நடப்பட்டது. இந்த நிலையம் குவைத் ரெட்கிரஸ்சண்ட் நிறுவனத்தின் உதவியுடன். 530 மில்லியன் ரூபா நிதிச் செலவில் அமைக்கப்படவுள்ளது. அமைச்சரைத்தொடர்ந்துபிரதி அமைச்சர்பைசல்காசிம். நாடாளுமன்றஉறுப்பினர்கள். வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள். குவைத் நிறுவன அதிகாரிகள். யாழ்ப்பாணம் போதனா மருத்துவனைப் பணிப்பாளர் சத்தியமூர்த்தி ஆகியோரும்அடிக்கல்நட்டனர். இந்த நிலையத்தின் கட்டுமானப் பணிகள் ஓராண்டுக்குள்முழுமைப்படுத்தப்படும்என்று தெரிவிக்கப்பட்டது.

#### தாதியர் விடுதி

யாழ்ப்பாணம் போதனா மருத்துவனையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள தாதியர் விடுதி அமைச்சர் ராஜிதவால் திறக்கப்பட்டது. இந்த விடுதி 60 மில்லியன் ரூபாநிதிச்செலவில் உருவாக்கப்பட்டுள்ளது. 200 தாதிகள் தங்கும் வகையில் இந்த விடுதி அமைக்கப்பட்டுள்ளது.

#### குருதி சுத்திகரிப்பு நிலையம்

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் அமைக்கப்பட்டகுருதிசுத்திகரிப்புநிலையத்தை அமைச்சர்ராஜிததிறந்தார். பதிவேட்டில்முதலாவது நோயாளரின் பெயரையும் அமைச்சர் பதிந்தார். அங்குள்ள நோயாளர்களுடனும் கலந்துரையாடினார்.

"தற்போது தாதியர்களுக்கான விடுதி வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. வடக்கில் தாதியர் பற்றாக்குறை உள்ளது. அதற்குப் பிரதான காரணம் விஞ்ஞான பாடத்தில் எமது இளையோர்கள்சித்தியடையாதமையே. பல்கலைக்கழகத்துக்கு அதிகமானவர்கள் கலைப்பீடத்துக்கே செல்கின்றனர். அதிகளவானோரைத் தாதியர் துறைக்கு அனுப்ப வேண்டிய தேவை உள்ளது.

சுகாதாரத் தொண்டர்களுக்கான வெற்றிடங்களைநிரப்புவதற்கான அனுமதியை வழங்குவது தொடர்பாக அமைச்சர் கவனம் செலுத்த வேண்டும். போரால் பாதிக்கப்பட்ட இடங்களில் உள்ள பல மருத்துவமனைகளில் மருத்துவர்கள். துறை சார்ந்த மருத்துவர்கள் குறைவாக உள்ளனர். அந்தவெற்றிடங்களையும் நிரப்பவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று நிகழ்வில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ. சேனாதிராசா தெரிவித்தார்.

"நாடுமுழுவதும்உள்ளமருத்துவமனைகளில் பல பிரச்சினைகள் உள்ளன. ஆண்டொன்றுக்குஆயிரத்து200மருத்துவர்கள்வெளிவந்தால்அவர்களில்200பேர்வெளிநாடுகளுக்குச் செல்கின்றனர். ஏனையோரையேஒவ்வொரு மருத்துவமனைகளுக்கும் பங்கிட வேண்டிய நிலமையுள்ளது. 150 மருத்துவனைகள் பல்துறைசார்மருத்துவர்கள்இன்றியே இயங்குகின்றன. மருத்துவ நிபுணர்கள் கூட வெளியேறிச் செல்கின்றனர். இதுகவலைதரும்விடயமாகும். யாழ்ப்பாணம் போதனா மருத்துவனையில் இனி அமைக்கப்படும் கட்டடங்களை 6 மாடிக் கட்டடங்களாக அமைக்க வேண்டும் என்று கூறியுள்ளேன். நாம் எதிர்வரும் 50 ஆண்டுகளைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். அதனால் தற்போது சிந்தித்துச்செயற்பட வேண்டும்.

போரால் பாதிக்கப்பட்ட பலர் நோய்களைக் குணப்படுத்த முடியாது மீள்வாழ்வு நிலையம் இன்றி உள்ளனர். விபத்துத் தீவிர சிகிச்சைப் பிரிவுக்கு 2 மாடிக் கட்டடம் தான் அனுமதிக்கப்பட்டது. அதை 6 மாடிக்கட்டடமாகக்கட்ட அமைச்சர் அனுமதித்திருந்தார். அந்தக் கட்டடத்துக்காக ஆயிரத்து 400 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது." என்றுநிகழ்வில்உரையாற்றியபிரதி அமைச்சர்பைசல்காசிம்தெரிவித்தார். (ற-114)


மீள்வாழ்வு நிலையம் அடிக்கல் நட்டுவைக்கப்பட்டது.


அரசமருந்தகக்கூட்டுத்தாபனம் திறந்துவைக்கப்பட்டது.


தாதியர் விடுதி திறந்துவைக்கப்பட்டது.


குருதிசுத்திகரிப்புநிலையம் ஆரம்பித்துவைக்கப்பட்டது



# சட்டவிரோத தொழில் புரிவோரை உடனே வெளியேற்ற வேண்டும்

நாயாறு மீனவர்கள் பொலிஸாருக்கு எடுத்துரைப்பு

**முல்லைத்தீவு, ஓக. 17**
**நாயாற்றுப் பகுதியில் சட்டவிரோத தொழில் புரிவோரை உடனடியாக வெளியேற்றவேண்டும். இந்த விடயத்தில் தீர்வு கிடைக்கும் வரையில் நாம் மீன்பிடியை முன்னெடுக்கமாட்டோம். இவ்வாறு நாயாறுப் பகுதி மீனவர்கள் நேற்றுத் தெரிவித்தனர்.**

வடக்கு மாகாண மூத்த பொலிஸ் அத்தியட்சகர் கணேசநாதன், நாயாற்றுப் பகுதிக்கு நேற்று வருகை தந்தார். நாயாற்றில் வாடி எரிக்கப்பட்டமையினால் பாதிக்கப்பட்ட மக்களை, நாயாற்றுப் பொதுநோக்கு மண்டபத்தில் சந்தித்தார். வடக்கு மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரனும் கலந்து கொண்டார்.
பாதிக்கப்பட்ட மக்கள் சந்திப்பில் தெரிவித்ததாவது,
சுனில் நிசாந்த என்பவர் 40 படகுகளைப் பயன்படுத்தி தொழில் செய்கின்றார். வெளிச்சம்போட்டு மீன்பிடிக்கும் செயற்பாட்டை அவர் முன்னெடுக்கின்றார். அது சட்டவிரோத தொழில்முறையாகும். கடந்ததிங்கட்கிழமையும் சட்டவிரோத தொழில் நடவடிக்கைக்கு அவர் புறப்பட்ட போது அதனை நாம் தடுத்து நிறுத்தினோம். அதன் பின்னரே எமது வாடிகள் எரிக்கப்பட்டன.
சுனில் நிசாந்தவும் அவரது உதவியாளரும் கடந்த ஜூன் மாதம் 6ஆம் திகதி மேற்கொண்ட சட்டவிரோத தொழில்நடவடிக்கைக்காக கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தினால்விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்கள். சுனில் நிசாந்த 21 நாள்களின் பின்னர் நிபந்தனைப் பிணையில் விடுவிக்கப்பட்டார். அவரை இந்தப் பகுதியிலிருந்து வெளியேற்ற வேண்டும். சட்டவிரோத தொழில் நடவடிக்கையைக் கட்டுப்படுத்துவதற்கான முடிவு எட்டப்படும் வரையில் நாம் தொழிலை மேற்கொள்ளமாட்டோம் என்றார்கள்.
சுனில் நிசாந்த காணி ஒன்று இங்கு கொள்வனவு செய்துள்ளார். அதில் தங்கியிருந்து தொழில் செய்வது தொடர்பில் பொலிஸாரால் மக்களின் கருத்துக் கேட்கப்பட்டது. நாயாற்று எல்லைப் பகுதிக்குள் தொழில் நடவடிக்கையில் ஈடுபடுவது என்றால், சட்டவிரோத முறைகளைப் பயன்படுத்த முடியாது என்று பதிலளித்தார்கள். (5)



கீரிமலை கருகம்பனை தமிழ்மன்ற சனசமூக நிலையத்துக்கும் கருகம்பனை இந்து இளைஞர் கழகத்துக்கும் 70 ஆயிரம் ரூபா பெறுமதியான ஒலிபெருக்கி சாதனங்கள் அண்மையில் வழங்கப்பட்டன. தனக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்து வடக்கு மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் இவற்றை வழங்கினார். வலி.வடக்குப் பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன் அதில் கலந்துகொண்டார். (4,114)

# கரவெட்டிச் சபை அமர்வில் நேற்றுக் காரசார விவாதம்

யாழ்ப்பாணம், ஓக. 17
யாழ்ப்பாணம் வடமராட்சியின் நெல்லியடி மீன் சந்தையை மீளமைப்பது தொடர்பாகக் கரவெட்டிப் பிரதேச சபையில் நேற்றுக் காரசாரமான விவாதங்கள் இடம்பெற்றன. உறுப்பினர் இராமநாதனுக்கும் தவிசாளர் ஐங்கரனுக்கும் இடையில் காரசார விவாதம் ஆரம்பித்து சபை குழம்பியது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஈ.பி.டி.பி ஆகியவற்றின் உறுப்பினர்கள் சபையில் நடப்பதைப் பார்த்து ரசித்துக்கொண்டிருந்தனர்.
கரவெட்டி பிரதேச சபையின் 5 ஆவது அமர்வு சபையில், நேற்று முற்பகல்10 மணிக்கு தவிசாளர் ஐங்கரன் தலைமையில் ஆரம்பமாகியது.
சபை நடவடிக்கைகள் சுமுகமாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. சுமார் ஒரு மணி நேரம் கழித்து சபையின் சுதந்திரக் கட்சி உறுப்பினர் ச.இராமநாதன் சபைக்கள் வந்து தனது ஆசனத்தில் அமர்ந்து நடவடிக்கைகளை அவதானித்து கொண்டிருந்தார்.
உறுப்பினர்களின் பிரேரணைகள் முன்வைக்கப்பட்ட போது ச.இராமநாதன் நெல்லியடிமீன்சந்தைமீளமைப்பு பற்றியும், அதற்குச்சபையின் நிரந்தர வைப்பிலிருந்து பணம்எடுத்தது, மகிளூர்ந்து வாங்குதல், உள்ளிட்ட சில விடயங்கள் தொடர்பில் இராமநாதன் கடுமையாக விமர்சித்தார்.
இதன்போது சபையின் நிரந்தர வைப்பிலிருந்து பணம் எதுவும் எடுக்கப்படவில்லை, முத்திரை வரி மூலமாகக் கிடைத்த நிதியில் இருந்தே மீன்சந்தை மீளமைப்பு மேற்கொள்ளப்பட்டது. மகிளூர்ந்து முடிந்தகதை. அதைச் சபை ஏற்றுக்கொள்ளாததால் கைவிடப்பட்டது. முடிந்த கதைகளையும் இல்லாத நடந்த விடயங்களையும் இங்கு கதைத்து நேரத்தை வீணடிக்க வேண்டாம். இந்தத் தீர்மானவரைபு ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்று தவிசாளர் தெரிவித்தார்.
இதற்காக நீதிமன்றை நாடுவோம் என்று உறுப்பினர் ச.இராமநாதன் கூற, தாராளமாக நீதிமன்றை நாடலாம். அதனை எல்லாம் எதிர்கொள்ள தயாராக இருக்கிறோம் என்று தவிசாளர் ஐங்கரனும் பதிலடி கொடுத்தார்.
இந்த வாதப்பிரதிவாதங்கள் அதிகரித்துப் பெரும் வாய்த்தர்க்கமாக மாறியது. தமிழ் அரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, ஐ.தே.க ஆகியவற்றின் உறுப்பினர்கள் தவிசாளருக்கு ஆதரவாகக் குரல் கொடுக்க த.தே.மு, ஈ.பி.டிபி கட்சிகளின் உறுப்பினர்கள் மௌனமாக இருந்து நடப்பதை ரசித்துக்கொண்டிருந்தனர்.
உறுப்பினர் கே. இரத்தினம், சபையின் நிரந்தர வைப்பிலிருந்து பணம் எடுக்கப்படவில்லை. எதிர்காலத்திலும் எடுக்கமாட்டோம் என்றார். உறுப்பினர் பரஞ்சோதி சந்தைக்குழுவின் அறிக்கையை நடைமுறைப்படுத்துங்கள் என்றார். மீன்சந்தை மீளமைப்புத் தொடர்பாகக் கொண்டுவந்த தீர்மான வரைவை ஏற்றுக்கொள்ள முடியாது எனத் தவிசாளர் தெரிவித்து மேலதிக தகவல்கள் தேவைப்படின் ஒரு மாத கால அவகாசத்தில் தங்களுக்குத்தரப்படும் எனக்கூறி இராமநாதனின் தீர்மான வரைவுக்கு முற்றுப்புள்ளி வைத்தார். (4.173.26)

## நல்லூரில் இன்று

யாழ்ப்பாணம் ஓக. 17
நல்லூர் ஆலய சூழலில் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இன்று திருமுறை அரங்கு இடம்பெறும். பாட்டு ஆர்.திருஞானசம்பந்தன், க.சித்திரா, வயலின் - அ.ஜெயராமன், ஆர்மோனியம் - ந.செல்வச்சந்திரன், மிருதங்கம் - சதா.வேல்மாறன், கடம் - அ.செல்வரத்தினம், கெஞ்சிரா - எஸ்.சிவமூர்த்தி. நிகழ்வு மாலை 6.45 தொடக்கம் 8.15வரை இடம்பெறும்.

நல்லூர் மனோன்மணி அம்மன் கோவிலில் 'பெரியபுராணம் காட்டும் பக்தி நெறி' எனும் தலைப்பில் சைவநெறிச் சன்மார்க்கர் காசிராஜா சொற்பொழிவாற்றுவார். நிகழ்வு மாலை 6.45 தொடக்கம் 7.45வரை இடம்பெறும். (4)

## செல்வச்சந்நிதியில்

தொண்டைமானாறு செல்வச் சந்நிதியில் இன்று செல்வச்சந்நிதி அறநெறி மாணவர்களின் பஜனையும், பிரான்ஸ் மாணவன் ஆதித்தியனின் பக்திப் பாடலும், நெல்லண்டை அம்மன் அறநெறிப் பாடசாலையின் ர.சாரங்கி முருகனின் பெருமை பேசுவோம் எனும் தலைப்பில் பேச்சு இடம்பெறும். அதனைத் தொடர்ந்து 'ஆற்றங்கரையான் அருள் செய்' எனும் தலைப்பில் பிரசங்கம் இடம்பெறும். கோப்பாய் ஆசிரிய கலாசாலைப் பிரதி அதிபர் ச.லலீசன் சொற்பொழிவாற்றுவார். மாலை 4 மணி தொடக்கம் இரவு 7 மணிவரை நிகழ்வுகள் இடம்பெறும். (4)

## கொடியேற்றம்

மண்டைதீவு திருவெண்காடு சித்தி விநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாள்கள் இடம்பெறும்.
எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.40 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

## பிள்ளையாருக்குக் கொடி

வடமராட்சி தம்பசிட்டி மாயக்கைப் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.
எதிர்வரும் 25ஆம் திகதி முற்பகல் 10 மணிக்குத் தேர்த்திருவிழாவும், மறுநாள் முற்பகல் 9 மணிக்கு நன்னீர்த் தீர்த்தத் திருவிழாவும், அதற்கடுத்த நாள் காலை 5.30 மணிக்கு சமுத்திரத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (4)

# கலை, கலாசாரங்களை வளர்த்தெடுக்க கரவெட்டிப் பிரதேச சபை விழா நடத்தும்

நேற்றைய அமர்வில் தீர்மானம் நிறைவேற்றம்

யாழ்ப்பாணம், ஓக. 17
கலை, கலாசாரங்கள், பண்பாடுகளை வளர்தெடுக்கும் நோக்கில் பாரம்பரியகலைகலாசாரவிழா ஒன்றை நடத்தக் கரவெட்டிப் பிரதேச சபை தீர்மானித்துள்ளது.
சபையின் அமர்வு சபைத் தவிசாளர் த.ஐங்கரன் தலைமையில் நேற்று இடம்பெற்றது. அதன்போது பாரம்பரிய கலைகலாசாரவிழா ஒன்றை கட்சிபேதம் இன்றி நடத்துவது தொடர்பில் தவிசாளர் சபையில் கருத்துரைத்தார்.
அதனைச் சகல உறுப்பினர்களும் வரவேற்றுச் சாதகமான கருத்துகளைக் கூறினர்.
உறுப்பினர் நிலாங்கதன், வருடாவருடம் மாட்டுவண்டிச் சவாரி நடத்தவேண்டும். அதற்கென்று கரவெட்டியில் சோனங்கத்தி என்ற இடம் உள்ளது. அதனைச் சரிவரப் பயன்படுத்தவேண்டும் என்றும் கூறினார்.
தமிழருடைய பாரம்பரியத்தை வளர்க்கும்பொருட்டு அடுத்த வருட ஆரம்பத்திலிருந்து இதனை நடத்த வேண்டும் என்று தவிசாளர் கூறினார். தை மாதத்தில் காலச் சூழ்நிலை ஏற்றதாக இருக்காது. அதனால் சித்திரை வருடப்பிறப்பை அண்மித்த நாள்களில் பாரம்பரியகலைகலாசாரவிழாவை நடத்தலாம் என்று கருத்து முன்வைக்கப்பட்டது. அவற்றைச் சபை ஏற்றுக் கொண்டு தீர்மானமாக நிறைவேறியது.
இதுதவிர, மண்டான் வீதியில் மக்கள் ஒத்துழைப்புடன் துப்புரவு செய்வதென்றும் நெல்லியடி பேருந்து நிலையம் மீளச் சீரமைப்புச் செய்வது என்றும் சபையில் கூறப்பட்டது. அதற்கு முன்னாள் தவிசாளர் வியாகேசு, தீர்மானங்கள் நிறைவேறுகின்றன. ஆனால் எந்த ஒரு வேலையும் நடைபெறுவதில்லை என்று குற்றஞ்சாட்டினார்.
உடுப்பிட்டிச் சந்தையில் சுகாதார சீர்கேடுகள் இடம்பெறுகின்றன. சந்தைக் குறைபாடுகள் இதுவரை நிவர்த்தி செய்யப்படவில்லை என்றும் அவர் கூறினார். அதற்கு நடவடிக்கை எடுப்பதாகத் தவிசாளர் கூறினார். மதியம் 1.30 அளவில் சபை நிறைவுபெற்றது. (4.26)

## தடைதாண்டல் பரீட்சைக்கான இலவச வழிகாட்டல்

யாழ்ப்பாணம், ஓக. 16
முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் III இற்கான வினைத்திறமை காண் தடைப் பரீட்சைக்குரிய இலவச வழிகாட்டல் வகுப்புக்கள் நாளை மறுதினம் சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.
யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலக கேட்போர்கூடத்தில் முற்பகல் 9மணிக்கு வகுப்புகள் நடைபெறும். விண்ணப்பித்த சகல முகாமைத்துவ உதவியாளர்களையும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு பொது முகாமைத் துவ உதவியாளர் சேவைச் சங்கத்தின் செயலாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (4)

## சீரற்ற காலநிலையால் கடற்றொழில் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 17
தற்போதைய சீரற்ற காலநிலை மற்றும் கடும் காற்றுக் காரணமாக யாழ்ப்பாணக் குடா கடற்பரப்பில் ஆழ்கடலுக்குச்சென்று மீன்பிடிக்கும் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

குருநகர் மற்றும் தீவுப்பகுதி மீனவர்கள் ஆழ்கடலுக்குச் சென்று மீன் பிடிக்கும் பணியைத் தவிர்த்துள்ளனர் என்று மீனவர்கள் தெரிவித்தனர். (4.17)

## காத்தவராயன் சிந்து நடைக் கூத்து

வடமராட்சி.ஓக 17
கற்கோவளம் வேணுகான சபா நாடக மன்றம் வழங்கும் "காத்தவராயன்" சிந்து நடைக் கூத்து தும்பளை நெல்லண்டை பத்திரகாளி அம்மன் ஆலய முன்றலில் இன்று இரவு 9 மணிக்கு இடம்பெறும்.

இந்தக் கூத்து நிகழ்வை அண்ணாவியார் கலைமாமணி வே.நந்தகோபாலன் நெறியாள்கை செய்துள்ளார். (173)

## 15 வாழைக் குலைகள் நீர்வேலியில் திருட்டு

யாழ்ப்பாணம், ஓக. 17
வலி. கிழக்குப் பிரதேசத்தில் வாழைக்குலைத் திருட்டு மீண்டும் அதிகரித்துள்ளது. நேற்றுமுன்தினமிரவு15க்கும் மேற்பட்ட வாழைக் குலைகள் திருடப்பட்டுள்ளன என்று பிரதேச விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இரவு நேரங்களில் வாழைத் தோட்டங்களுக்குச் சென்று வாழைக்குலைகளை வெட்டித் திருடிச் செல்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

அதனைவிட கறிவாழைகளின் விலையும் சடுதியாக அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. இவற்றின் விலை அதிகரிப்பைப் பயன்படுத்தித் திருடர்கள் கதலி, மொந்தன் குலைகளை திருடி வருகின்றனர்.

குறிப்பாக நீர்வேலி, கோப்பாய், மாரீசிவன், சிறுப்பிட்டிப் பகுதிகளில் உள்ள வாழைத் தோட்டங்களில் இவ்வாறு வாழைக்குலைகள் களவாடப்பட்டு வருகின்றன.

நீர்வேலி கிருஷ்ணன் கோவிலடிப் பிரதேசத்தில் உள்ள வாழைத் தோட்டம் ஒன்றில் நேற்றுமுன்தினமிரவு 15க்கும் மேற்பட்ட வாழைக் குலைகள் திருடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (4.17)





யாழ்ப்பாணம், பருத்தித்துறை கூவில் தீபஜோதி சனசமூக நிலைய 44ஆவது ஆண்டு விளையாட்டு விழா ஆடி அமாவாசை தினத்தன்று சிறப்பாக நடைபெற்றது. விவசாயப் பிரதி அமைச்சர் இ.அங்கஜன் முதன்மை விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார். மதிப்புறு விருந்தினராகச் சாரதிப் பயிற்சி நிலைய முகாமையாளர் கிருபாகரன், பிரதேச சபை உறுப்பினர் க.வைத்தியநாதன், பருத்தித்துறை பொலிஸ் நிலைய அதிகாரி சமன் ஜெயலத் மற்றும் சிறப்பு விருந்தினராகப் பருத்தித்துறை பிரதேச செயலக உத்தியோகத்தர் சத்யன், அபிவிருத்தி உத்தியோகத்தர் சேகரன் கஜந்தினி, கிராம அலுவலர் விமல்சினி நமல்ராஜ் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (4.124)

# விழிப்புக் குழுக்களாக ச.ச.நிலையங்கள் கட்டாயம் மாறவேண்டும்

*தவிசாளர் அரியகுமார் தெரிவிப்பு*

**யாழ்ப்பாணம், ஓக. 17**
**சனசமூக நிலையங்கள் தமது மக்களைப் பாதுகாத்து, மக்களுக்கு எந்தவிதப் பாதிப்பும் ஏற்படாமல் மக்களை வழிநடத்தும் ஒரு விழிப்புக்குழுவாகச் செயற்பட வேண்டும் என்று பருத்தித்துறைப் பிரதேச சபையின் தவிசாளர் அ.சா.அரியகுமார் தெரிவித்தார்.**

ஆடி அமாவாசைத் தினமன்று வடமராட்சி மந்திகை அறிவகம் சனசமூக நிலையத்தினர் விளையாட்டு நிகழ்வுகளை நடத்தினர். அதில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போது மேலும் தெரிவித்ததாவது:

சனசமூக நியைங்கள் உள்ளூராட்சி அமைச்சின் கீழ் வருகின்ற பிரதேச சபையின், நகரசபையின், மாநகர சபையின் முழுமையான அதிகாரத்துக்குள் இயங்கி வருகின்றன. சனசமூக நிலையமானது அன்று தொடக்கம் இன்றுவரை மக்களின் சமூக பண்பாட்டையும், விளையாட்டையும் கலை, கலாசாரத்தையும் வளர்த்து வருகின்றது. ஒரு கிராமத்தின் காவலனாக சனசமூக நிலையம்தான் இருக்கவேண்டும். சிலர் நினைக்கின்றார்கள் சனசமூக நிலையமானது வெறுமனே பத்திரிகை வாசிக்கும் இடம் என்று. ஆனால் அப்படியல்ல. ஒரு கிராமத்தில் சமூகத்தை ஒழுங்கமைத்துஒருகட்டமைப்புக்குள் வகுத்து அவற்றை நல்வழிப்படுத்துகின்ற அமைப்புதான் சனசமூக நிலையம் என்பதை மறந்து விடக்கூடாது.

மக்களுடைய பாதுகாப்பு, மக்களுடைய சேவைகள் எல்லாம் இந்தச் சனசமூக நிலையங்கள் ஊடாகத்தான் செய்ய வேண்டும். கிராமத்தின் அபிவிருத்தி வேலைகள்கூட ஒப்பந்த அடிப்படையில் சனசமூக நிலையம்தான் செய்ய வேண்டும் என்பதை நீங்கள் மறந்து விடக்கூடாது. எனவே இன்று வளர்ந்திருக்கின்ற சனசமூக நிலையம் எதிர்காலத்திலும் தொடர்ந்து வளரவேண்டும். நாம் சிறுவனாக இருக்கின்ற காலத்தில் கரப்பந்து, கிட்டிப்புள் உள்ளிட்ட விளையாட்டுகளைப் பார்த்திருக்கிறோம். அவற்றை விளையாடும் இளையோரையும் பார்த்துள்ளோம். இப்பொழுது நாம் நாடாளுமன்ற உறுப்பினரிடமும், மாகாண சபை உறுப்பினரிடமும் மைதானப் சீரமைப்புக்காகக் காசு கேட்கின்றோம். ஆனால் தற்போது மைதானம் வெறிச் சோடிக் கிடக்கின்றது.

இவை எல்லாவற்றையும் ஒழுங்கமைத்து, இளைஞர் எல்லோரையும் ஒருங்கிணைத்துக் கிராம மட்டத்தில் நல்லதொரு சமுதாயத்தை உருவாக்க வேண்டிய பொறுப்புச் சனசமூக நிலையங்களுக்கு உண்டு. அந்தக் காரியங்களைச் செய்வீர்கள் என்று நம்புகின்றேன் - என்றார். (4.124)

## ரூ.22 லட்சம் நிதி ஒதுக்கீட்டில் இரு வீதிகள் சீரமைகின்றன

*வலி.தென்மேற்கு சபை நடவடிக்கை*

யாழ்ப்பாணம், ஓக. 17
மக்களின் கோரிக்கையைத் தொடர்ந்து சாவற்கட்டுப் பகுதியிலுள்ள 100வீட்டுத்திட்ட வீதி, சுதுமலை தெற்கிலுள்ள வேலுச்சாமி கோயில் வீதி ஆகிய இரண்டும் சுமார் 22 இலட்சம் ரூபா செலவில் சீரமைக்கப்படவுள்ளன.

இவற்றுக்கான கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டமையைத் தொடர்ந்து வீதிகளின் வேலைகள் விரைவாக ஆரம்பிக்கப்படவுள்ளன.

வலி.தென்மேற்குப் பிரதேசத்திலுள்ள சாவற்கட்டு மீனவ கிராமத்தில் கடந்த 10வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட 100வீட்டுத்திட்டத்துக்கான பல வீதிகள் அபிவிருத்தி செய்யப்படாமல் உள்ளன. அந்தப் பகுதியில் வசிக்கும் மக்கள் மழை காலங்களில் பெரும் சிரமங்களுக்குள்ளாகிறார்கள். சுதுமலை தெற்கிலுள்ள வேலுச்சாமி கோயில் வீதியும் அபிவிருத்தி செய்யப்படாமையால் அந்தப் பகுதி மக்களும் பாதிக்கப்படுகிறார்கள்.

இந்த வீதிகளின் நிலை குறித்து அந்தப் பகுதி மக்கள் பிரதேச சபையின் கவனத்துக்குக் கொண்டுசென்றனர்.

அதனையடுத்து சபை நிதியிலிருந்து சாவல்கட்டு 100வீட்டுத்திட்ட வீதி 13 இலட்சம் ரூபா செலவிலும் சுதுமலை தெற்கு வேலுச்சாமி வீதி ரூபா 9இலட்சம் செலவிலும் சீரமைப்பதாகத் தவிசாளர் அ.ஜெபநேசன் கூறியுள்ளார். சீரமைப்பு வேலைகள் மிகவிரைவில் ஆரம்பிக்கப்பவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (4.115)

*சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில்*

## போக்குவரத்துப் பிரிவுக்கு தனியான கட்டடம் திறப்பு

சாவகச்சேரி, ஓக. 17
சாவகச்சேரி பொலிஸ் நிலைய வளாகத்தில் போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவுக்கெனப் புதிய கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது. அதனைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ.எம்.எஸ்.பி.விக்கிரமசிங்க நேற்றுத் திறந்து வைத்தார். சமய நடைமுறையின்படி கட்டடம் திறந்து வைக்கப்பட்டது.

இதுவரை காலமும் பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக உள்ள கட்டடத்தில் போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவு செயற்பட்டு வந்தது. (4.9)



மிருசுவில் வடக்கு பத்திரகாளி அம்மன் ஆலய வருடாந்த ஆடிச்செவ்வாய்ப் பொங்கல் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. அதில், பிரதேசத்தைச் சேர்ந்த வறுமைக்கோட்டுக்குட்பட்ட தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு ஆலய நிர்வாகத்தினரால் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன என்று பிரதேச சபை கொடிகாமம் வட்டார ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி உறுப்பினர் வை.ஜெகதாஸ் தெரிவித்தார். (4.159)

# யாழ்.நகரில் மலகூடங்கள் அமைக்கும் பணி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக. 17
யாழ்ப்பாண நகர்ப்பகுதியில் ஆறுமலசல கூடங்களை அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மாநகராட்சி மன்றில் தந்திரோ பாய நகர அபிவிருத்தி திட்டத்தில் கீழ் இந்த நவீன வசதிகளை கொண்ட மலசலகூடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன என்று மாநகர பிரதி முதல்வர் து.ஈசன் தெரிவித்தார்.

நவீன சந்தைக் கட்டடத் தொகுதியில் இந்த மலசல கூடங்கள் அமைக்கும் பணிகள் துரித கதியில் இடம்பெற்று வருகின்றன. நகர்ப்பகுதியில் உரிய பொதுமலசல கூட வசதிகள் போதியளவு இன்மையால் நகருக்குவரும் மக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் சிரமப்படுகின்றனர்.

தற்போது நவீன வசதிகளுடன் இந்த மலசல கூடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இதனால் நகருக்கு வருகைதரும் மக்கள் பயனடைவார்கள் என்று அவர் மேலும் தெரிவித்தார். (4.17)



யாழ்ப்பாணம் கைதடி மேற்கு இணுங்கித் தோட்டம் கந்தசுவாமி கோவில் வருடாந்தப் பெருந்திரு விழா கொடியேற்றத்துடன் நேற்று ஆரம்பமானது. (159)

## மாணவர்களுக்கான வழிகாட்டல் செயலமர்வு

முல்லைத்தீவு .ஓக 17

முல்லைத்தீவு மாவட்டம் பண்டாரவன்னியன் மகா வித்தியாலயத்தில் அருள் கல்வி வட்டம் ஊடாக சட்டத்தரணி தேவசேனாதிபதியின் நிதியீட்டத்தில் க.பொ.த. சாதாரணதர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் செயலமர்வு மற்றும் வினாவிடைத் தொகுப்பு வழங்கல் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்த நிகழ்வுக்கு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார். இதன்போது பெருமளவான மாணவர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (72)





அளவெட்டி தெற்கு வாணி முன்பள்ளி மாணவர்களின் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு கடந்த 12 ஆம் திகதி இடம்பெற்றது நிகழ்வின் சில பதிவுகள் . (36)

## இலவச கருத்தரங்கும் பாடநூல் வழங்கலும்

மன்னார் ,ஓக 17

எதிர்வரும் டிசம்பர் மாதத்தில் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக்கான, இலவசக்கருத்தரங்கும், கடந்தபாடத்திட்டங்களை உள்ளடக்கிய கணிதம், விஞ்ஞானம், தமிழ், ஆங்கிலம், வரலாறு போன்ற நூல்கள் இலவசமாக வழங்கும்நிகழ்வு நேற்றுமன்னார்நகரசபைமண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வை வன்னிநாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் ஆரம்பித்து வைத்தார்.

வடமாகாணம் முழுவதும் இருந்து தரம் 11 ஐச் சேர்ந்த பதினைந்தாயிரம் மாணவர்கள் பங்குபற்றினர். நேற்றைய தினம் மன்னார் மாவட்டத்தில் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் பங்குற்றினார்கள். இந்த இலவசக்கருத்தரங்குமற்றும் வழங்கப்படும் இலவச நூல்களுக்கான நிதிப்பங்களிப்பை மூத்த சட்டத்தரணி வேலாயுதம் தேவசேனாதிபதி வழங்கியுள்ளார். வடமாகாணம் முழுவதும் உள்ள மாணவர்களுக்கு வழங்குவதற்காக இருபத்தையாயிரம் நூல்களையும் ஒருகோடிரூபா பெறுமதியில் கொள்வனவு செய்துள்ளார்.

இந்த நிகழ்வில் ஒரு மாணவருக்கு அறுநூறு ரூபா பெறுமதியான புத்தகங்கள் வழங்கப்பட்டதோடு, மாணவ, மாணவியருக்கும் தனித்தனி அரங்கில் கருத்துரை வழங்கப்பட்டது. இந்த வருடம் கா.பொ.த. சாதாரண தரத்தில் வடமாகாணத்தில் பத்தொன்பதாயிரம்மாணவர்களும், மன்னார்மாவட்டத்தில் மூவாயிரம் மாணவர்களும் பரீட்சைக்குத் தோற்றவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மாணவர்களுக்கான கருத்தரங்கில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் கருத்துத் தெரிவிக்கையில்:

தரம் 11 மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை ஊக்குவிக்கவும், இந்தவருடம்டிசம்பரில்நடைபெற இருக்கும் க.பொ.த. சாதாரண தரப்பரீட்சையில் மாணவர்களின் சித்தி வீதத்தை அதிகப்படுத்தும் நோக்கிலும் இந்த இலவசக் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதோடு, பெறுமதிமிக்கநூல்களும் இலவசமாகவழங்கப்படுகிறது. இந்தசெயற்பாட்டிற்காகச் சட்டத்தரணிக்கு நன்றி தெரிவித்ததோடு கல்வியின் மூலமே மாணவர்கள் சிறந்த எதிர்காலத்தைப்பெறமுடியும்என்றும், முகநூல்போன்ற தேவையற்ற பொழுது போக்குகளில் நேரத்தைச் செலவிடாமல், மீதம் இருக்கும் மூன்று மாத காலத்தைகல்விக்காகச்செலவிட்டுமன்னார்மாவட்டத்தில் சென்ற வருடத்தின் க.பொ.த. சாதாரண தர சித்திவீதத்தை விடஅதிகமான சித்திகளைப்பெற்று மாவட்டத்துக்கும், உங்கள்பெற்றோருக்கும்பெருமை தேடித்தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டதோடு, பரீட்சைஎழுதவிருக்கும்மாணவ, மாணவியர்களுக்கு முற்கூட்டியே வாழ்த்துக்களையும் தெரிவித்தார். (231)

# தொடருந்துக் கடவை சமிக்ஞை சீராக இயங்குவது இல்லை

### கிளிநொச்சி 155ஆம் கட்டை மக்கள் விசனம்

*கிளிநொச்சி ,ஓக 17*

*கிளிநொச்சி 155 ஆம் கட்டை பாரதிபுரத்துக்குச் செல்லும் முதன்மை வீதியில் அமைக்கப்பட்டிருக்கும் தொடருந்துக் கடவைச் சமிக்ஞை சீராக இயங்குவதில்லை என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.*



விவேகானந்த நகர், பாரதிபுரம், கிருஸ்ணபுரம், மலையாளபுரம், விநாயகப்புரம், அம்பாள்குளம் போன்ற கிராமங்களுக்குச் செல்லும் மக்கள் இந்த வீதியைப் பயன்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இருப்பினும் குறித்த தொடருந்துக் கடவை சீராக இயங்குவதில்லை, எழுப்பப்படும்ஒலியும்சரியாகக்கேட்பதில்லை எனவும், கடவையை தொடருந்து அண்மிக்கும்போதே சமிக்ஞை விளக்குகள் ஒளிர்வதனால் விபத்துக்கள் ஏற்படுகின்றன எனவும் தெரிவிக்கின்றனர். இந்தக் கடவையில் ஊழியர் எவரும் இல்லை என்பதுடன், கடவையில் தொடருந்தில் மோதுண்டு பல விபத்துக்கள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. கிட்டத்தட்ட மூன்று வருடங்களாக இந்த சீரின்மை தொடர்வதாகக் கூறப்படுகிறது. கிளிநொச்சியில் ஏற்படும் தொடருந்து விபத்துக்கள் பல இந்த இடத்திலேயே நிகழ்ந்தமை இங்கு குறிப்பிடக்கூடிய விடயமாக உள்ளது . பழுதடைந்த இந்த சமிக்ஞை விளக்குகளை மீளச் சீர் செய்யாது. மக்களின் உயிர்களைக் கருத்தில் கொண்டு புதிய சமிக்ஞை விளக்கைப் பொருத்துவதோடு பாதுகாப்புக் கடமைக்கு ஊழியர் ஒருவரையும் நியமிக்குமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## தேசிய நல்லிணக்க செயலணியால் தம்பகாமம் – இன்னாசிக்குளம் சீரமைப்பு

*கிளிநொச்சி ,ஓக 17*

வன்னாங்கேணி ,தம்பகாமம் இன்னாசிக்குளத்தின் சீரமைப்புப் பணிகளைப் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சுரேன் பார்வையிட்டுள்ளார்.

தேசிய நல்லிணக்கச் செயலணியால் (ONUR ) 1.6 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு இந்தக்குளம் புனரமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இங்கு பச்சிலைப்பள்ளி பிரதேச சபை உபதவிசாளர் கஜன் உறுப்பினர் றமேஸ், கோகுல்ராஜ் மற்றும் கமக்கார அமைப்புக்களின் சம்மேளனத் தலைவர் செல்வராசா ஆகியோர் உடனிருந்தனர்.





## 8 ஆம் வாய்க்கால் சந்தையை இயக்க வியாபாரிகள் முன்வரவேண்டும்

### தவிசாளர் வேழமாலிகிதன் வேண்டுகோள்

கிளிநொச்சி ,ஓக.17

உருத்திரபுரம் 8 ஆம் வாய்க்கால் பகுதியில் அமைந்துள்ள சந்தையினை மீள ஆரம்பிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போதும் வியாபாரிகள் எவரும் முன்வரவில்லை எனத் தவிசாளர் வேழமாலிகிதன் கவலை வெளியிட்டுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேச சபைக்கு உட்பட்ட உருத்திரபுரம் 8 ஆம் வாய்க்கால் பகுதியில் சந்தைக் கட்டடம் ஒன்று நல்ல நிலையில் காணப்படுகின்றது.

அந்த கட்டடத்தில் ஆரம்பத்தில் சிலர் வியாபாரங்களை மேற்கொண்டனர். தற்போது இயங்காத நிலையில் கால்நடைகளின் தங்குமிடமாகக் காணப்படுகின்றது.

இங்கு உள்ள மக்கள் பொருட்களைக் கொள்வனவு செய்ய வேண்டும் எனில் ஜெயந்தி நகர் அல்லது கிளிநொச்சி பொதுச் சந்தையினை நாட வேண்டி உள்ளது.

இதனால் மக்கள் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டி உள்ளமை உண்மையான விடயம் ஆனால் அங்கே உள்ள சந்தையில் வியாபார நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கையை எடுக்க, வியாபாரம் செய்ய யாரும் முன்வர வில்லை.

பலதடவைகள் அறிவித்தல்களை சபை மேற்கொண்டும் பயன்ஏதும்கிடைக்கவில்லை. கிட்டத்தட்ட 350 குடும்பங்கள் அந்தக் கிராமத்தில் வாழ்கின்றனர்.

அவ்வாறு வியாபாரிகள்வியாபாரம் செய்ய முன்வரும் பட்சத்தில்அதனை இயங்கவைக்க நாம் எப்போதும் தயாராக இருப்பதாகத்தெரிவித்தார். (6)

## பண்டாரவன்னியன் சிலையடி வீதியைச் சீரமைக்க நடவடிக்கை

புதுக்குடியிருப்பு ,ஓக 17

ஒட்டுசுட்டான்- புதுக்குடியிருப்பு முதன்மை வீதியிலிருந்து கற்சிலைமடு பண்டாரவன்னியன் சிலையடி ஊடாகமுத்துஐயன்கட்டுமுதன்மை வீதியைச் சென்றடையும் வீதி மிக மோசமாகப்பாதிக்கப்பட்டு பயணஞ் செய்யமுடியாதநிலையில்உள்ளது. இதனைச்சீரமைக்கவேண்டுமென மக்கள் தெரிவித்துள்ளனர்.

மேற்படி வீதியானது பேருந்து மற்றும் விவசாயிகள் உள்ளீடுகள் கொண்டுசெல்வதுடன் பாடசாலை மாணவர்கள் செல்லும் முதன்மை வீதியாகவும் காணப்படுகின்றது.

இந்த வீதி பாவனைக்கு உதவாத நிலையில் உள்ளமையால் பேருந்து சேவை இடை நிறுத்தப்பட்டுள்ளது.

இதனால் பாடசாலை மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் குன்றுங் குழியுமாகக் காணப்படும் இந்த வீதி மீள்குடியமர்வின் பின்னர் இரு தடவைகள் சீரமைக்கப்பட்டமை அறிந்த விடயம் இந்தவீதியைசீரமைப்பதுதொடர்பில் புதுக்குடியிருப்புபிரதேசசபைத்தவிசாளரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, குறித்தவீதியை குன்று, குழிகள் அகற்றிசெப்பனிடுவதற்கான திட்டத்தயாரிப்புகளை ஏற்கனவேசெய்துவிட்டோம்.

வீதியின் ஆரம்பப்பகுதியின்100மீற்றர் தூரமான வீதி, நீர்ப்பாசனத் திணைக்களத்தின் ஆளுகைக்குட்பட்டது. அந்த100மீற்றர்தவிர்ந்தமீதி 1.700கி.மீ நீளமான வீதி இந்தமாதம் 24 ஆம்திகதிக்கு முன்னர் சீரமைக்கப்படும் எனத் தெரிவித்தார். (500)



## நரசிங்கர் கோவில் பெருந் திருவிழா

வவுனியா,ஓக17
வவுனியா பூந்தோட்டம் சிறிலக்சுமி இணையர் நரசிங்கர்கோவில் பெருந்திருவிழாநேற்றுமுன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, முதலாம் திருவிழாவிற்கான நிகழ்வுகள் நடைபெற்றது . தொடர்ந்து 12 நாட்கள் திருவிழா நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. அடியவர்கள் ஆலயத்திற்கு வருகைதந்து அபிசேகத்திற்கு தேவையான பால், பழம், இளநீர், பூமாலை போன்றவற்றைவழங்கி நரசிங்கபெருமானின்அருளை பெற்றுய்யுமாறு ஆலயபரிபாலனசபையினர் வேண்டிக்கொள்கிறார்கள். (110)

## இலவச சுயதொழில் பயிற்சி நெறிகள்

புதுக்குடியிருப்பு ,ஓக.17
சுயதொழில்முயற்சியாளர்களைஉருவாக்கும் நோக்கில் இலவசப் பயிற்சி நெறிகளான காகித மலர்உற்பத்தி,பொம்மைஉற்பத்திபோன்றவற்றுக்கான பயிற்சிநெறிகள் எதிர்வரும் 23ஆம் திகதிமற்றும்24ஆம்திகதிகளில்புதுக்குடியிருப்பு விதாதாவள நிலையத்தில் நடைபெறவுள்ளது. இந்தப்பயிற்சிநெறிகளில்பங்குகொள்ளவிரும்புபவர்கள்எதிர்வரும்21ஆம்திகதிக்குமுன்பாக புதுக்குடியிருப்புப்பிரதேசசெயலகவிதாதாவள நிலையத்தில் தமது பதவுகளை மேற்கொள்ள முடியுமென பிரதேச செயலர் அறியத்தந்துள்ளார். மேலதிகதகவல்களுக்கு0212290470, 0712187431, 0779903640 என்ற தொலைபேசி எண்களுடன் தொடர்புகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது .

## வருடாந்த அலங்கார திருவிழா

வவுனியா ,ஓக17
வவுனியா மன்னார் வீதி சிவபுரம் சிறி முத்துமாரிஅம்மன் ஆலைய வருடாந்த அலங்கார திருவிழா இன்று காலை 10 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்துநடைபெறும்திருவிழாவில் 26 ஆம் திகதி 108 சங்கபிசேகமும் ,தீர்த்த உட்சவமும் இடம்பெறவுள்ளது.
பூசைநாட்களில் பகல்12 மணிக்கு அன்னதானம் இடம்பெறவுள்ளது . தொடர்ந்து ஒவ்வொரு நாளும் மாலை 7 மணிக்கு ஆலய அறநெறிப்பாடசாலைமாணவர்களால்கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது . (205)



## ரவிகரனால் உதவி வழங்கல்

முல்லைத்தீவு, ஓக 17
வாழ்வாதரமற்றும்கோவில்மறுசீரமைப்புக்காக வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரனால் 84 ஆயிரம் ரூபா பெறுமதியில் உதவிகள் வழங்கப்பட்டன. கடந்த 13 ஆம்திகதிதுணுக்காய்ப்பிரதேசசெயலகத்தின் கீழ் உள்ள யோகபுரம் சிறீவயலூர்விநாயகர் ஆலய மறுசீரமைப்பிற்கென ஐம்பதாயிரம் ரூபா உதவுதொகைவழங்கப்பட்டது. கோவில் நிர்வாகிகள் கலந்துகொண்டு குறித்த உதவு தொகையைப் பெற்றுக்கொண்டனர். அத்துடன் நேற்று முன்தினம் அப்பளத் தொழிற்சாலை அமைப்பதற்காக தர்மராசா சரசுவதி என்னும் பயனாளிக்கு வாழ்வாதார உதவி வழங்கப்பட்டது. இதில் 34ஆயிரம்ரூபாபெறுமதியில்10அடித்தகரங்கள் இருபதும்இரண்டு சீமெந்துப் பைகளும் வழங்கப்பட்டன.

# காணிகளை விடுவித்தால் அபிவிருத்தி செய்ய முடியும்

### முசலி பிரதேச சபைத் தவிசாளர் தெரிவிப்பு

**மன்னார், ஓக 17**
**வனஜீவராசிகள் திணைக்களம் கைப்பற்றியுள்ள முசலி பிரதேச சபைக்குச் சொந்தமான இடங்களைமீட்டுத் தந்தால் எம்மால் அபிவிருத்திப்பணிகளைதிறப்படச்செய்ய முடியும் என முசலி பிரதேசபை தவிசாளர் சுபிஹான் தெரிவித்துள்ளார்.**

முசலி பிரதேச சபைக்குட்பட்ட முள்ளிக்குளம்வாழ்மக்கள்உட்பட,அயல்கிராமத்து மக்களின் காணிகளை வனஜீவராசிகள் திணைக்களம் கைய கப்படுத்தியுள்ளது. வறட்சி, குடிதண்ணீர் பிரச்சினை, வாழ்வாதாரப்பிரச்சனைகள்ஆகியவற்றை சீர்செய்ய ,பிரதேச சபையின் நடவடிக்கைகள் என்ன என்று முசலி பிரதேச சபை தவிசாளர் சுபிஹானிடம் கேட்டபோது:
மரத்தால் விழுந்தவனை மாடுஏறி மிதிப்பதுபோல்,ஏற்கனவேதொழில்வாய்ப்பின்றி வாழ்வாதாரத்துக்குவழி இல்லாமல், பரிதவிக்கும் மக்களின் காணிகளை, வனஜீவராசிகள் திணைக்களம், காட்டு இலாகா, தொல்பொருள்திணைக்களங்கள்பலாத்காரமாகப் பறித்து வைத்துள்ளது.
எப்படிமக்களுக்கான தொழில் வசதிகளை எற்படுத்துவதற்காக தொழிற்பேட்டைகளை அமைப்பது முள்ளிக்குளம் ,கரடிக்குளி, மறிச்சுக்கட்டி ,பாலக்குளி ஆகிய இடங்களின் மக்களின் வாழ்வாதாரம்தொடர்பாகவும்,வனஜீவராசிகள்திணைக்களம்கையகப்படுத்தியுள்ள ஆற்றுப்பகுதியை விடுவிப்பது தொடர்பாகவும்,வடமாகாண முதலமைச்சர், அமைச்சர் ரிஷாட் பதியுதீன் ,நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ்நிர்மலநாதன் , மாவட்டச்செயலர்போன்றோரிடம்நடந்து முடிந்த மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் என்னால் கோரிக்கை விடப்பட்டுள்ளது.
நாம்தமிழ்முஸ்லிம்என்றோஅல்லதுஏதோ ஒரு வகையில் பிரிவு இருந்தால், ஒன்றும் சாத்தியமாகாது தமிழ் பேசும், மக்களாகிய நாம்ஒற்றுமையால்செயற்படுவதுமூலமே, வனஜீவராசிகள்திணைக்களத்திடமிருந்து நம்நிலங்களை மீட்க முடியும். அந்தவகையில் இந்தியாவிலிருந்துதாயகம்திரும்பும்மக்களுக்காகவும். இளைஞர்களின் விளையாட்டு மைதானம் அமைப்பதற்காகவும், காயாக்குளி பகுதியில் இருபது ஏக்கர்நிலமும்,மக்களின்வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் கைத்தொழில் பேட்டை அமைப்பதற்காக காயாக்குளி கொண்டச்சி சார்ந்த இடங்களில் இருபத்தைந்து ஏக்கர் நிலத்தை யும் விடுவித்துத் தருமாறு முதல மைச்சரிடம் என்னால் கோரப்பட்டுள்ளது.
அடுத்ததாகசட்டத்தின்அனுமதியுடன்புத்தளம் மன்னார் வீதியை திறப்பதற்கு வனஜீவராசிகள் அமைச்சருடன் ,வடக்கு அரசியல் தலைவர்கள் சந்திப்பை ஏற்படுத்தி மன்னார் புத்தளம் வீதியை திறந்து மக்கள் பாவனைக்குவிடும்முயற்சிமேற்கொள்ளப் படுவதாகவும் அவர் தெரிவித்தார். (213)

## பல தீர்மான வரைபுகளை உள்ளடக்கி இடம்பெற்ற கரைதுறைப்பற்று பிரதேச சபையின் 7 ஆவது அமர்வு



முல்லைத்தீவு ,ஓக. 17
முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபையின் 7ஆவது அமர்வு பிரதேச சபை மண்டபத்தில்தவிசாளர்க.தவராசா தலைமையில் நேற்று நடைபெற்றது.
அமர்வில் பிரதேச சபை உறுப்பினர் உ.றணிஸ்லா தீர்மான வரைவுகளை முன்வைத்தார் ஆறுமுகத்தான் குளம் ஆரம்பப்பாடசாலைக்குமுன்னால்பெரிய குழிஒன்றுகாணப்படுவதாகவும்அதனை மூடவேண்டும்என்றும்,தனது பிரதேசத்தில்காணப்படும்மாயனத்தைச்சீர்செய்து தருமாறும் , ஆறுமுகத்தான் பாடசாலைக்கு அருகில் படிப்பகம் ஒன்றை அமைக்கவும் தீர்மான வரைவுகளை முன்வைத்தார்.
இதற்கு பதிலளித்த தவிசாளர் பெரிய குழி உள்ள காணி பிரதேச சபைக்கு உட்பட்ட காணி இல்லாததால் இதனைப் பிரதேச செயலரின்கவனத்திற்குகொண்டுசெல்ல வேண்டும் என குறிப்பிட்டார்.
மயானம் பிரதேச சபையினால் பார்வையிட்டு செய்து கொடுக்கப்படும் என்றும், படிப்பகத்துக்கு முன்னர் சனசமூக நிலையம்ஒன்றைஅமைத்துஅதனைசெயற்பட வைக்கவேண்டும்என்றும்தவிசாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.
தொடர்ந்து ம.தொம்மைப்பிள்ளை அவர்கள் முல்லைத்தீவு கோவில் குடியிருப்பில் படையினரால் அடைத்துவைக்கப்பட்டுள்ள வீதியினை விடுவிக்க கோரிக்கை வைக்கப்பட்டது. பிரதேசசபைக்குசொந்தமான வீதியாகக் காணப்படுவதால் சம்மந்தப்பட்ட திணைக்களங்களுக்குஅறிவித்து அதற்கானநடவடிக்கைஎடுக்கவேண்டும் என்றும்தெரிவிக்கப்பட்டது .
வெலி ஓயா பிரதேசத்தைச் சேர்ந்த உறுப்பினர் அ.ரங்கதுசார கொக்குளாய் முகத்துவாரம் பகுதியில் அமைந்துள்ள மக்களுக்கு வீடுகள் மற்றும் வசிப்பிடம் தொடர்பில் காணியைப் பெற்றுக்கொடுக்க தீர்மானம் கொண்டுவரப்படவேண்டும் என்றும், முல்லைத்தீவு நகர சந்தைக்கு பேருந்துக்கள் சென்றுவரவேண்டும்என்றும் பிரதேச சபைக்கு உட்பட்ட காணிகளை அடையாளப்படுத்த வேண்டும் என்றுகோரினார்.
இதில் கொக்குளாய் முகத்துவாரம் காணிகள் தொடர்பில் சபை உறுப்பினர்கள் சென்று பார்த்த பின்னர்தான் தீர்மானம் எடுக்கப்படும் என்றும். பிரதேசசபையின் காணிகளை அடையாளப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதேவேளை தவிசாளரினால் பிர தேசத்தின் களப்புபகுதியில்கடற்தொழில்செய்து வரும்மீனவர்கள்பலசட்டவிரோதவலைகளை பயன்படுத்துவதால் , மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்கள். இது தொடர்பிலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுசம்மந்தப்பட்ட அமைச்சுக்களுக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.
கரைதுறைப்பற்றுபிரதேசத்திற்குஉட்பட்ட கடந்த 2017 ஆம் ஆண்டுதரம் 5 புலமைபரிசில்பரீட்சையில்தோற்றிசித்தியடைந்த வறுமை கோட்டின் கீழ் உள்ள முப்பது மாணவர்களுக்கு தலா ஐந்தாயிரம் ரூபா புலமைபரிசில் வழங்க வேண்டும் என்ற தீர்மானமும் அமர்வில் முன்வைக்கப்பட்டது .
முல்லை வலயத்திற்கு உட்பட்ட மிகவும் வறுமைகோட்டின் கீழ் பரீட்சை எழுதிய மாணவர்கள்முப்பதுபேர்வலயம்ஊடாக தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு தலா ஐந்தாயிரம் ரூபா உள்ளூராட்சி அமைச்சின் அனுமதியுடன் வழங்குவதற்கு பிரதேச சபை உறுப்பினர்கள் அனைவரும் சம்மதித்துள்ளதுடன், அதனைவழங்குவதற்கான நடவடிக்கையும் எடுக்கப்படும் என்றும் கரைதுறைப்பற்று பிரதேச சபை தவிசாளர் தெரிவித்துள்ளார். (ரி-3)

## செல்வ முத்துமாரியம்மன் வருடாந்த திருவிழா



மன்னார்.ஓக17
மன்னார்மாதோட்டத்தில்தேவாரப்பாடல் பெற்ற திருத்தலமான திருக்கேதீஸ் வரத் திருக்கோவிலுக்கு அடுத்ததபடியான பெரும் . சைவ எழுசசிமிக்கதுமான உலகிலேயே அகோர விகார மகாமாரி என்ற மூன்று சக்தி வடிவான தெய்வங்கள் ஒரே உருவில் கொண்டு வழிபடப்படும் சிறி செல்வமுத்துமாரியம்மன் ஆலயத்தின் 2018 ஆம் ஆண்டுக்கான வருடாந்த திருவிழா நேற்றுக் காலை10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமானது . மிக முக்கியத் திருவிழாக்களாக சங்காபிசேகம் வேட்டைத்திருவிழா , சப்பரதத் திருவிழா தேர் ,தீர்த்தம்தீமிதிப்புடன்தொடர்ச்சியாக பத்து நாட்கள் நடைபெறுவதுடன் ,பத்து நாட்களும் அன்னதானம் நடைபெறும் . எட்டாம் திருவிழாவான வேட்டைத்திருவிழா நானாட்டான் பொதுமக்களின் உபயமாக கொண்டாடப்படுகிறது. திருவிழா நிறைவு பெற்று தொடர்ச்சியாக இரண்டு நாள்கள் காத்தவராயன் சிந்து நடைக்கூத்தும் நடைபெறும். (213)

## கலாசார மண்டப திறப்பு நிகழ்வு

நாளை - 18 ஆம் திகதி காலை 8.15 மணிக்கு, ஓய்வு பெற்ற மாவட்டச்செயலர் வே .விசுவலிங்கம் தலைமையில் திருக்கேதீச்சரம்,மன்னாரில்கலாசாரமண்டபத் திறப்பு நிகழ்வு இடம்பெறவுள்ளது.
இந்தநிகழ்வின் முதன்மைவிருந்தினராக கலாநிதி ஆறு திருமுருகன் கலந்துகொள்ளவுள்ளார் .

# பரீட்சை விடைத்தாள்களை திருத்துவது 23இல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக. 17

நடைபெற்று முடிந்த ஜி.சி.ஈ. உயர்தரப்பரீட்சை விடைத்தாள்கள்திருத்தும் பணிகள் எதிர்வரும் 23ஆம் திகதி ஆரம்பமாகும் என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

வடக்குஉட்பட அனைத்து மாகாணங்களிலும் இது இடம்பெறவுள்ளது. அதன் மூலமாகப் பரீட்சை பெறுபேறுகளைக் கால தாமதமின்றி வெளியிடுவதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றுதெரிவிக்கப்பட்டது.

விடைத்தாள் திருத்தப்பணிகளுக்காக 37 அரச பாடசாலைகள்எதிர்வரும் 23ஆம்திகதியில் இருந்து செப்ரெம்பர் 5ஆம் திகதி வரை மூடப்படவுள்ளன. குறித்த பாடசாலைகள் செப்ரெம்பர் 6ஆம் திகதி மீண்டும் திறக்கப்பட வுள்ளன. உயர்தரப் பரீட்சை விடைத்தாள்கள் திருத்தப் பணிகள் 527 மத்திய நிலையங்களில் இடம்பெறவுள்ளன. இதற்காக 8 ஆயிரத்து 432 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வவுனியாதமிழ் வித்தியாலயம், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, கொக்குவில் இந்துக்கல்லூரி ரோயல் கல்லூரி, கொழும்பு 4 இந்துக்கல்லூரி, மட்டக்களப்பு சென்மைக்கல் கல்லூரி உட்பட்ட 31 பாடசாலைகள் உயர்தர வகுப்பு விடைத்தாள் திருத்தப்பணிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை விடைத்தாள் திருத்தும்பணிகள்39பாடசாலைகளில் நேற்றுமுன்தினம்தொடக்கம்திருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் 21ஆம்திகதிவரைதிருத்தப் பணிகள் இடம்பெறவுள்ளன. இதற்காக 6 ஆயிரத்து 848 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

திருகோணமலை விக்னேஸ்வரா மகா வித்தியாலயம், மட்டக்களப்பு இந்துக்கல்லூரி, வவுனியா தமிழ்மகாவித்தியாலயம், யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி, நெல்லியடி மகா வித்தியாலயம், கிளிநொச்சி மத்திய கல்லூரி, கல்முனை ஷாஹிராக்கல்லூரிஉட்பட்ட39 பாடசாலைகளில் தரம் 5 புலமைப்பரிசில் விடைத்தாள் திருத்தும் பணிகள் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (4.7)

# ஆசிரியரை விடுவிக்கக்கோரிய பிணை விண்ணப்பம் நிராகரிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 17

பாலியல் துர்நடத்தைக் குற்றச்சாட்டில் 2 மாதங்களாக விளக்கமறியலில்வைக்கப்பட்டுள்ள ஆசிரியர் சார்பில் முன்வைக்கப்பட்ட பிணை மனுவை மல்லாகம் நீதிமன்றுநேற்றுநிராகரித்தது.

"சந்தேகநருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணைகள் இடம்பெறுகின்றன. அவற்றின் சில ஆவணங்கள் மன்றில் இன்னும்முன்வைக்கப்படவில்லை. சந்தேகநபரைப் பிணையில் விடுவிப்பது பொருத்தமற்றது. அவர்சார்பில்முன்வைக்கப்பட்டுள்ள பிணை விண்ணப்பம் நிராகரிக்கப்படுகிறது. சந்தேகநரின் விளக்கமறியல் வரும் 27ஆம் திகதிவரை நீடிக்கப்படுகிறது" என்று மல்லாகம் நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா பிணை விண்ணப்பம் மீதான கட்டளையை வழங்கினார்.

வட்டுக்கோட்டையிலுள்ள தனியார்கல்விநிலையத்தில் கற்பிக்கும் ஆசிரியர் மீது இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பில்சங்கானைப்பிரதேசசிறுவர்பாதுகாப்புஅலுவலருக்கு முறைப்பாடுகள் வழங்கப்பட்டன.

தனக்குக் கிடைத்த முறைப்பாடுகள் தொடர்பில் அவர் விசாரணை செய்ய மாணவிகளின் பெற்றோர்கள் ஒத்துழைப்புவழங்கவில்லை. அதனால் சிறுவர் அலுவலருடன் பொலிஸார் இணைந்து முன்னெடுத்த விசாரணையில் மாணவிகள் மூவரின் வாக்குமூலங்கள் பெறப்பட்டன.

அவற்றை அடிப்படையாக வைத்துபதின்மவயதுச்சிறுமியை வன்புணர்ந்த, சிறுமிகளைத் துர்நடத்தைக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் ஆசிரியர் கடந்த ஜூன் 13ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபர் சார்பில் கடந்த மாதம் பிணை விண்ணப்பம்முன்வைக்கப்பட்டுஅவரதுசட்டத்தரணியால்சமர்ப்பணம் செய்யப்பட்டது. பாதிக்கப்பட்ட சிறுமிகள்இருவர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி தி.அர்ஜுனா, ஆசிரியரைப் பிணையில் விடுவதற்கு கடும் ஆட்சேபனை தெரிவித்திருந்தார்.

பிணை விண்ணப்பம் மீதான கட்டளை கடந்த 7ஆம் திகதி செவ்வாய்க்கிழமைவழங்கப்படும்என்று மல்லாகம் நீதிவான் மன்று அறிவித்திருந்தது.

எனினும், பிணை விண்ணப்பம் மீதான கட்டளையைத்தயார்படுத்தவில்லை என்று அறிவித்த மன்று, சந்தேகநபரின் விளக்கமறியலை நேற்றுவரை நீடித்தது. சந்தேகநபர் இன்று மன்றில்முற்படுத்தப்பட்டார். அதன்போதே பிணை விண்ணப்பம்நிராகரிக்கப்பட்டது. அவருக்குஎதிர்வரும் 27ஆம்திகதிவரை நீடிக்கப்பட்டது. (4,37)

# குழாய் மூலமாகத் தண்ணீர் வழங்க வங்கியில் நிதி பெறவேண்டியுள்ளது

## அமைச்சர் ரவூப் ஹக்கீம் கூறுகிறார்

வவுனியா, ஓக. 17

கடந்த 10 வருடங்களாக வரவு, செலவுத் திட்டத்தில் நீர் வழங்கல் திட்டங்களுக்காக நேரடியாக நிதி ஒதுக்கப்படுவதில்லை. வேறு வங்கிகளிடம் கடன் பெற்றுத்தான் சகல நீர் வழங்கல் திட்டங்களையும் செயற்படுத்தி வருகிறோம். இந்தக் கடனைத் திருப்பிச் செலுத்துவதில் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை பல பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகிறது.



இவ்வாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

வவுனியா, மாங்குளம் பாலர் பாடசாலைக்குச் சுற்றுமதில் அமைப்பதற்கானஆரம்பவேலைகள்நேற்றுஆரம்பிக்கப்பட்டன. அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மடுவுக்கான குடிதண்ணீர் வழங்கல் திட்டத்துக்கு600மில்லியன்ரூபாவை நேரடியாக வரவு, செலவுத் திட்டத்தில் ஒதுக்கித்தருமாறுகோரியிருக்கிறேன். அது கிடைத்தவுடன் பணி ஆரம்பமாகும். உலக வங்கி 7 மாவட்டங்களை உள்ளடக்கிநடைமுறைப்படுத்தவுள்ள நீர்வழங்கல் திட்டத்தில் முல்லைத்தீவு மற்றும்கிளிநொச்சி உள்ளடக்கப்படுவதால்அவற்றுக்கு வேறுதிட்டங்களைச் செயற்படுத்தவுள்ளோம்.

நீர்வழங்கல்அமைச்சைநான்பொறுப்பேற்கும்போது வவுனியாவில் 5 சதவீதத்துக்கும் குறைவான மக்களே குழாய்மூலமாகக் குடிதண்ணீரைப் பெற்றுக்கொண்டிருந்தனர். எனதுபதவிக்காலத்துக்குள் அவற்றை 30 சதவீதமாக அதிகரிப்பதற்கு பல்வேறு திட்டங்கள் நடைமுறைப்படுத்தி வருகின்றோம் என்று காலநிலை பாதிப்புக்கு ஈடுகொடுப்பதற்கு ஏற்றவாறாக உட்கட்டுமான வேலைகளஹ ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தால் நடைமுறைப்படுத்தப்படும் இந்த வேலைத்திட்டத்தைநடைமுறைப்படுத்தும்நிறுவனமாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை செயற்படுகிறது.

வவுனியாவில்பெருமளவில்குடிதண்ணீர்த் தட்டுப்பாட்டை எதிர்நோக்கியுள்ளமாங்குளம், நேரியகுளம், பாவற்குளம், செட்டிகுளம், மெனிக்பாம் உள்ளிட்ட 15 கிராமங்களில் சுத்தமான குடிதண்ணீரைவழங்குவதற்காக 2ஆயிரம் மில்லியன் ரூபா செலவில் நீர் வழங்கல்திட்டங்களைஆரம்பித்திருக்கிறோம்.

இலங்கை வரலாற்றில் முதல்முறையாகக் குடிதண்ணீருக்காக ஒரு வாவியை அமைக்கும் முயற்சிகளில் நாங்கள் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறோம். பேராறுக்குக் குறுக்காக ஒரு வாவியை அமைக்கும் இந்தத் திட்டம் தற்போது இடம்பெறுகிறது. இந்த வேலைத்திட்டத்தைப் பொறுப்பேற்றவர்கள் தரம்குறைந்த குழாய்களைப் பயன்படுத்தியதால் அவருக்கெதிரான சட்டநடவடிக்கை குறித்து ஆராய்ந்து வருகிறோம். இடைநடுவில் கைவிடப்பட்டுள்ள இந்த வேலைத்திட்டத்தை அவசரமாக முன்னெடுப்பதற்கான முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளோம். மல்வத்து ஓயாவுக்குக் குறுக்காக நீர்ப்பாசனத் திணைக்களத்தால் செயற்றிட்டமொன்றுமுன்னெடுக்கப்பட்டுவருகின்றது.

இந்தத்திட்டத்தைவைத்துப்பெரியளவிலான குடிதண்ணீர் வழங்கல் திட்டமொன்றைகொம்பிளாண்ட் என்றசீன நிறுவனத்தின் உதவியில் அமைக்கவுள்ளோம். நிலத்தடி நீரைப் பயன்படுத்தி சிறிய குடிதண்ணீர் திட்டங்கள் பலவற்றையும் திறந்து வைத்துள்ளோம்.

முசலி பிரதேசத்தின் குடிதண்ணீர்த் தேவையைப்பூர்த்திசெய்வதற்குகுளம் ஒன்றிலிருந்துநீர்வழங்கல்திட்டத்தை ஆரம்பிப்பதற்காக 4 ஆயிரத்து 750 மில்லியன் ரூபா செலவில் திட்டத்தை ஆரம்பிப்பதற்கு அமைச்சரவைப்பத்திரம்தயாரிக்கப்பட்டுசமர்ப்பிக்கப்படவுள்ளது. இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால் முசலிப் பிரதேச மக்கள் அனைவருக்கும் குழாய்மூலமாகச் சுத்தமானகுடிதண்ணீர்வழங்கப்படும் - என்றார். வவுனியா மாவட்டத்தில் பாவற்குளம், ஆனைவிழுந்தான், பெரியஉலுக்குளம், ஈச்சங்குளம், நன்டிமித்ரகம, பொகஸ்வெவ, கற்குளம் போன்ற இடங்களில் குடிதண்ணீர் சுத்திகரிப்புநிலையங்களைஅமைச்சர் திறந்துவைத்தார். சின்னசிப்பிக்குளம் பிரதேசத்தில்குழாய்க்கிணறுஅமைப்பு வேலைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. சூடுவெந்த பிளவு, ராஜேந்திரகுளம் போன்ற இடங்களில் குழாய் பதிக்கும் வேலைத்திட்டத்துடன் பட்டாணிச்சூரில் நீர் வழங்கல் இணைப்புகளையும் ஆரம்பித்துவைத்தார். (4.110)

# மீண்டும் மீண்டுவரும் குமுதினி சில நாள்களில் பணி தொடரும்

யாழ்ப்பாணம், ஓக. 17

யாழ்ப்பாணத்தின் மற்றுமொரு அடையாளமான குமுதினிப் படகு தனது சேவையை மீண்டும் ஆரம்பிக்கவுள்ளது.

தமிழருடைய படுகொலைகளுடன் வரலாற்றில் இடம்பிடித்துள்ளகுமுதினிப்படகுபலமுறை சேதங்களுக்குஉட்பட்டபோதும் மீண்டும்மீண்டும்சீரமைக்கப்பட்டு மக்கள்சேவையில் ஈடுபடுத்தப்பட்டுவருகிறது.



குறிகாட்டுவானில் இருந்து நெடுந்தீவுக்குநீண்டகாலமாகச்சேவையாற்றிவரும் குமுதினிப் படகு பலமுறை சேதங்களுக்கு உள்ளானபோதும் மீண்டும்சேவையைத்தொடர்ந்தது. நீண்டகாலமாகச்சேவையில் ஈடபடாதிருந்தபோதும்இறுதியாக 2011ஆம் ஆண்டு மார்ச் 5ஆம் திகதி நவீன முறையில் சீரமைக்கப்பட்டு, புதுப்பொலிவுடன்மீண்டும் போக்குவரத்துச்சேவையில் ஈடுபட்டது. கடந்த 8 ஆண்டுகளில் மீண்டும் சேதங்களுக்குஉள்ளாகியது. எனினும்புத்துயிர் பெற்று மீண்டும் சேவையைத் தொடர்ந்தது.

கடந்த இரண்டுவாரங்களுக்கு முன்னர் குமுதினி மீண்டும்சேதமானது. குமுதினிப்படகின் அடித்தளம்ஊடாக படகுக்குள் கடல்நீர் உட்செல்கிறது என்றுதெரிவிக்கப்பட்டதால்இரண்டு வாரங்களாக அதுபணியில்ஈடுபடுத்தப்படவில்லை, அதேவேளைநெடுந்தீவுக்கான சேவைகளை வடதாரகை, நெடுந்தாரகைப் படகுகள் மேற்கொண்டுவந்தன. எனினும் குமுதினி சீரமைக்கப்பட்டு மீண்டும் சேவையை ஆரம்பிக்க உள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

சிலநாள்களில்அந்தப்படகுமீண்டும் தனதுசேவையைத்தொடரும்என்று வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. (21)



# மழையால் சேதவிவரங்கள் எவ்வளவு என்று ஆராய்வு

காரைநகர், ஓக. 17

யாழ்ப்பாணத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை வீசிய கடுங்காற்று மற்றும் மழையால் காரைநகரில் சேதங்களுக்கு உள்ளான வீடுகளுக்கு உதவிகள் வழங்கும் பொருட்டு அது தொடர்பில் ஆராயப்பட்டுள்ளன.

காரைநகர்ப் பிரதேச சபைத் தவிசாளர், உபதவிசாளர், கிராம அலுவலர், இடர் முகாமைத்துவ அலுவலர்கள் எனப் பலரும் சேதங்களுக்கு உள்ளான வீடுகளுக்கு நேற்றுமுன்தினம் நேரில் சென்றனர். அங்குள்ள நிலைமைகளைப் பார்வையிட்டு சேத விவரங்களைக் கேட்டறிந்தனர். உதவிகள் வழங்குவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்படும் என்று அவர்கள் கூறியுள்ளனர். (21)

## மோதலில் கொல்லப்பட்டோரின் நினைவுத் தூபி இன்று திறப்பு

தென்மராட்சி, ஓக.17
புலிகளுக்கும் படையினருக்கும் இடையிலான மோதலின்போது இடையில் அகப்பட்டுஉயிரிழந்த, தென்மராட்சி மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச்சங்கப்பணியாளர்கள்உட்பட பத்து பேரின் நினைவாக சங்க முன்றலில் அமைக்கப்பட்ட நினைவுத் தூபி நாளை சனிக்கிழமை திறக்கப்பட வுள்ளது.

நிகழ்வுபிற்பகல்3.30மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

சங்கத் தலைவர் இ.கந்தசாமி தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்குமுதன்மைவிருந்தினராக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை.சோ.சேனாதிராசாவும் சிறப்புவிருந்தினர்களாகநாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் கே. சயந்தன், சாவகச்சேரிப் பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன் ஆகியோரும் மதிப்புறு விருந்தினர்களாகச் சங்கப் பொதுமுகாமையாளர்ப.பாலச்சந்திரன், கைதடிமக்கள்நலன் பேணும் அமைப்பின் தலைவர் ப.செல்லத்துரை, சாவகச்சேரிபிரதேசசபைஉறுப்பினர்களான இ.ஜானகி, செ.ஜெயபாலன், தி.தங்கவேலு கு.கேதீஸ்வரன், கைதடி வணிகர் மன்ற பிரதிநிதி த.பிரபாகரன், கைதடி முன்பள்ளி இணைப்பாளர் த.சுபத்திராதேவி, மகளிர்கிராம அபிவிருத்திச் சங்கங்களின் ஒன்றியச் செயலாளர் ம.நிர்மலா ஆகியோர் கலந்துகொள்வர்.

1984 இதேமாதம்13 ஆம்திகதி பலாலியிலிருந்துவந்தபடையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும்இடையில்இடம்பெற்ற மோதலில் பொதுமக்கள் 10 பேரும்உயிரிழந்தனர். குறித்த இடத்தில்ஏற்கனவேநினைவுக்கல் நடப்பட்டு வருடாந்தம் நினைவுகூரப்பட்டனர். (4,9)

# மழையின் பின் ஈரம் இருப்பதுபோல போரின் பின் ஆயுதங்கள் இருக்கும்!

### அது மீண்டும் போர் ஆரம்பிப்பதற்கல்ல என்று கூறுகிறார் வடக்கு ஆளுநர் குரே

**யாழ்ப்பாணம், ஓக. 17**
**பெரிய மழை பெய்த பின்னர் நிலத்தில் ஈரத்தன்மை இருப்பது போல், வடக்கில் முப்பது வருடங்கள் நடைபெற்ற போரின் பின்னர், ஆங்காங்கே இரண்டு, மூன்று ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்படலாம். அது மீண்டும் போர் ஆரம்பிக்கப் போகிறது என்பதற்கான அடையாளமோ ஆரம்பமோ அல்ல.**

இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவுவிளையாட்டுமைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றுகையில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கில்ஆங்காங்கேஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டாலும் நாட்டில் இனிமேல் போர் நடைபெற இடமளிக்கப்படமாட்டாது. வடக்கில்படையினர் பயங்கரமான போரை முடிவுக்குக் கொண்டுவந்து இன்று அமைதியான படையினராக மாறியுள்ளனர்.

வடக்கில் மருத்துவமனைகளிலுள்ள குருதி வங்கியைத் தமது குருதியால் நிரப்புபவர்கள், முப்படை மற்றும் பொலிஸார் ஆகிய சிங்கள அதிகாரிகள்.

மருத்துவமனையில்சேர்க்கப்படும் தமிழ் மக்களுக்குச் சிங்கள இனத்தவரின் குருதி கொடுக்கப்பட்டால், அங்கு, தமிழ், சிங்கள குருதிக் கலப்பு ஏற்படாதா? என்று நான் வடக்கின் அரசியல்வாதிகளிடம் கேள்வி எழுப்புகிறேன்.

பண்டையகாலத்தில்எமதுநாட்டை ஆட்சிசெய்த சிங்கள அரசர்கள் இந்தியாவின் மதுரையில் இருந்த இளவரசிகளைப் பெண்ணெடுத்தனர். அதேபோல், வர்த்தகம் செய்ய இலங்கை வந்த பல முஸ்லிம்கள், சிங்களம் அல்லது தமிழ்ப் பெண்களைமணமுடித்துநாட்டில்குடியேறினர்.

இப்படிப் பார்த்தல், பண்டைய காலத்தில் இருந்தே எமது குருதி இங்கு கலந்துள்ளது. வடக்கில் அனைத்து தமிழ் அரசியல்வாதிகளுக்கும் சிங்கள பொலிஸ் அதிகாரிகளே பாதுகாப்புவழங்கிவருகின்றனர்.

நாடாளுமன்றமாகட்டும், மாகாண சபையாகட்டும், அவற்றில்அங்கம் வகிக்கும்அனைத்துத்தமிழ்உறுப்பினர்களுக்கும் சிங்கள பொலிஸ் அதிகாரிகளே பாதுகாப்பு வழங்கி வருகின்றனர்.

தமிழ் அரசியல்வாதிகளிடம் தமிழ் பொலிஸார் இல்லை. இது சிறந்த அடையாளம். தற்போது வடக்கில் இராணுவத்தினரின்கைகளில்துப்பாக்கிகள் இல்லை. அவர்களிடம் சமாதானத்தின் ஒலிவ் மரக் கிளைகள்உள்ளன. அவர்களேவடக்கில், மருத்துவமனைகளையும் பாடசாலைகளையும் அமைக்கின்றனர். கோவில் பூஜைகளுக்கும் உதவி வருகின்றனர் - என்று ஆளுநர் ரெஜினோல்ட் குரே தெரிவித்தார். (4)

## உணவுப் பொருள்கள் எவையும் அரசிடமிருந்து கிடைக்கவில்லை

### நாயாற்றில் நிர்க்கதியான மக்கள் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஓக. 17
முல்லைத்தீவு மாவட்டத்தின் நாயாற்றுப் பகுதியில் வாடிகள் எரிக்கப்பட்டமையினால் தொழில் செய்ய முடியாத நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். சம்பவம் இடம்பெற்று மூன்று நாள்கள் ஆகின்ற நிலையில் உணவுப் பொருள்கள் எவையும்எமக்குவழங்கப்படவில்லை. நாம் நிர்க்கதியானநிலைக்குத்தள்ளப்பட்டுள்ளோம். இவ்வாறுபாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்தனர். நாயாற்றுப் பகுதியில் தமிழ் மக்களின் எட்டுவாடிகள், படகுகள், இயந்திரங்கள், வலைகள் என்பன கடந்ததிங்கட்கிழமைஇரவு வேண்டுமென்று எரியூட்டப்பட்டன. 9 குடும்பங்கள் வரையில் நேரடியாகப் பாதிக்கப்பட்டுள்ளன. கடந்த செவ்வாய்க் கிழமை பாதிக்கப்பட்ட மக்களை அரச அதிகாரிகள் நேரில் சென்று சந்தித்தனர். இழப்பீடுகளை மதிப்பீடுசெய்தனர். நேற்றுமுன்தினம் புதன்கிழமை இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினாலும், இடர்முகாமைத்துவஅமைச்சினாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவல்லாதபொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

தமதுபிரச்சினைக்குநிரந்தரத்தீர்வுகாணப்படும்வரையில்தொழில்நடவடிக்கைக்குச் செல்லப் போவதில்லை என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் இடம்பெற்று மூன்று நாள்கள் ஆகின்ற நிலையில் தமக்கு எந்தவொருஉணவுப்பொருள்களும்அரசிடமிருந்துகிடைக்கவில்லை என்று குற்றம் சுமத்தினர். இதேவேளை, பாதிக்கப்பட்ட மக்களுக்கு தனது நிதியில் 100 கிலோ அரிசியைக் கொள்வனவு செய்துவழங்கிவைத்ததாக வடக்கு மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்தார். (5,105,113)

## மீனவர்களின்வாடி, படகுகளைஎரிப்பதால் வாழ்வாதாரமும்பொருளாதாரமும்பாதிப்பு

### அரசுதுணைபோகிறதாஎனக்கேட்கிறதுசம்மேளனம்

யாழ்ப்பாணம், ஓக.17
யாழ்ப்பாணம் வடமராட்சி தாளையடிப் பகுதியிலும் முல்லைத்தீவுப் பகுதியிலும் மீனவர்களின்வாடிகள், படகுகள்சமீபகாலமாக எரியூட்டப்பட்டு வருகின்றன. இதனால் அவர்களின் வாழ்வாதாரமும் பொருளாதாரமும்பெருமளவில்பாதிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

தென்னிலங்கைமீனவர்கள்குறித்தகடல் பகுதிகளில் அண்மைக்காலமாக முகாமிட்டுக்கடற்றொழிலில்ஈடுபட்டுவருகின்றனர். கடலட்டைபிடிக்கும்மீனவர்களும் இந்தக்கடல்பகுதிகளில்முகாமிட்டுள்ளனர் என்று கிரி என்றழைக்கப்படும் மீனவர் கவலை தெரிவித்தார்.

தென்னிலங்கை மீனவர்களின் இவ்வாறான நடவடிக்கைகள் காரணமாக வடக்கு மாகாண கடற்றொழிலாளர்கள் பாதிக்கப்படுகின்றனர். அவர்களின் கடற்றொழில் உபகரணங்கள் எரியூட்டப்படுகின்றமையும், சேதமாக்கப்படுகின்றமையும் 'வெந்த புண்ணில் வேல் பாய்ச்சும் விதமாக' அமைந்துள்ளது என்று தனது கவலையை வெளிப்படுத்துகிறார் குட்டி என்றழைக்கப்படும் மீனவர்.

2009ஆம்ஆண்டுமீள்குடியமர்ந்ததன் பின்னர் முல்லைத்தீவின் நாயாறுப் பகுதியில்தான்பலமீனவர்கள்தொழில்செய்கின்றனர். எமதுதொழிலைப்படிப்படியாக இல்லாமல் செய்யும் நடவடிக்கையில் தென்னிலங்கை மீனவர்கள் ஈடுபட்டுள்ளனர். காற்றுப்பலமாகவீசுவதால்தொழில் செய்வதற்கான வாய்ப்புகள் குறைந்துள்ளன. தென்னிலங்கையினரின் இவ்வாறான நடவடிக்கைகள் எம்மை மிகவும் மோசமான பொருளாதார நிலைக்கு இட்டுச் செல்கின்றன' என்று நாயாறு பகுதியைச்சேர்ந்த ஜோன்சன் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழில் சம்மேளனத் தலைவர் தவச்செல்வம் கருத்துத் தெரிவிக்கையில், ' வடக்குக் கடற்பகுதியை சூறையாட புத்தளம், கற்பிட்டி, சிலாபம் போன்ற பகுதிகளில் இருந்துவரும் மீனவர்களுக்கும், தென்பகுதியில் உள்ள கடற்றொழிலாளர்களுக்கும் இலங்கை அரசு திட்டமிட்டு அனுமதி வழங்கியுள்ளதா என்று எண்ணத் தோன்றுகிறது. தமிழ் அரசியில் வாதிகள் அரசுக்கு குடைபிடிக்காமல் கடற்றொழிலாளர்களின் நலனுக்காகப் பாடுபட வேண்டும்' என்று தெரிவித்தார். (4,113)

## தனியார் பேருந்து நடத்துநரின் போராட்டம் கைவிடப்பட்டது

யாழ்ப்பாணம், ஓக. 17
வடக்கு உட்பட நாடுமுழுவதும் தனியார் பேருந்து சேவைகள் வழமை போன்று நேற்றும் இடம் பெற்றன.

அரசு அறிமுகப்படுத்திய போக்குவரத்துவிதிமீறலுக்கான தண்டப்பணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளதைக் கண்டித்துதனியார்பேருந்து சாரதிகள் நாடு முழுவதும் பணிப்புறக்கணிப்பில்ஈடுபடவுள்ளனர் என்று நேற்று முன்தினம் அறிவித்திருந்தன.

எனினும் உயர் தரப்பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நன்மை கருதியும் ஏனைய பயணிகளின் நன்மை கருதியும் பணிப்புறக்கணிப்பைக் கைவிடுமாறு பல்வேறு அமைப்புகள் கோரியிருந்த நிலையில், போராட்டம் கைவிடப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (4,110)

## வேலிகள் மதில்களாக மாறி வருவதால் இறுதிக் கிரியைக்கு தடிக்கும் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், ஓக. 17
யாழ்ப்பாணமாவட்டத்தில்நீண்டகாலமாகப்பராமரிக்கப்பட்டுவந்த கதியால்வேலிகள்பிடுங்கப்பட்டு, வேலிகள் மதில்களாக மாறிவருகின்றன. அதனால் இறுதிக் கிரியைகளுக்குப் பந்தம் எரிப்பதற்கான தடிகளைப்பெறதூர இடங்களுக்கு அலைந்து திரிகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அதனால்பலஇடங்களிலும்வேலி மரங்கள் தறிக்கப்பட்டு வேப்ப மரத்தில் குச்சிகள் வெட்டிவரும் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றமையை அவதானிக்க முடிகிறது என்று தெரிவிக்கப்படுகிறது.

முன்னைய காலங்களில் அனைத்துக் காணிகளின் வேலிகளும் பூவரசு, கிளுவை, சீமைக் கிளுவை போன்ற மரங்களால் அடைக்கப்பட்டுவந்தன. எவராது உயிரிழந்தால் இறுதி அஞ்சலியின்போது அயலில் உள்ளவர்களின் காணிகளில் உள்ள பூவரசு மரங்கள்தறிக்கப்பட்டுசிதைக்குப் பயன்படுத்தினர். அவற்றின்தடிகளைக்கொண்டுபந்தம்சுற்றிஎரிக்கவும் வெவ்வேறு தேவைகளுக்கும் பூவரசு மட்டுமன்றி கிளுவந் தடிகளையும் பயன்படுத்தி வந்தனர்.

போர் முடிவுக்குவந்தபின்னர்கதியால் வேலிகளுக்குப் பதிலாக மதில்கள் அமைப்பதில் குடியிருப்பாளர்கள் ஆர்வம் கொண்டுள்ளனர். அதனால் ஏராளமான இடங்களில் கதியால் வேலிகள் மதில்களாக மாறிக்கொண்டிருக்கின்றன. வேலி மரங்களைத் தறித்து விறகாகப்பயன்படுத்திவருகின்றனர். வளவுகளில் காணப்படும் பெரு வேப்ப மரங்களுக்குக் கிராக்கிஎன்பதால்அவற்றைவிற்பனைசெய்து மதில் அமைத்து வருகின்றனர். மதில் அமைப்பது காலத்தின் தேவையாகக் கருதி அனைவரும்மதில்அமைப்பதில் ஆர்வம்கொள்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சாவுச்சடங்கு ஒன்றில்சாவடைந்தவரின் இறுதிக் கிரியை யின்போது இறந்தவரது உடலை உறவினர்கள் சுற்றி நின்று பந்தம் பிடிப்பதற்காக தடிகள் இல்லாததால் மூன்று மைலுக்கு அப்பால் உள்ள இடத்துக்குச் சென்று விற்பனை செய்யப்பட்ட வேப்பமரத்தின் கிளைகளில் நேரான சிறிய தடிகள் வெட்டிவரப்பட்டு பந்தம் செய்யப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

முன்னைய காலங்களில் சடலத்தைத்தகனம்செய்வதற்குபூவரசு மரங்கள் தேடி வெட்டி மயானத்துக்குஎடுத்துச்செல்வர். தற்போது கொத்து விறகும் பலகைகள் அரியும்போது எஞ்சும் விறகுகளும் தகனக் கிரியைக்குப் பயன்படுத்தப்பட்டுவருகிறனஎன்றுதெரிவிக்கப்படுகிறது. (4,9)

# திருட்டை பிடிப்போம் என்றோரின் ஆட்சிக்குள் திருடர்களின் கூட்டம்

## வடக்கு ஆளுநர் குரே தெரிவிப்பு

திருடர்களை, ஊழல்வாதிகளை, வஞ்சகர்களைத் தண்டிப்போம் எனக் கூறியே இன்றைய அரசு ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டது. ஆனால் இன்று அரசுக்குள்ளேயே திருட்டுத்தனம் ஆட்சி புரிகின்றது. இன்றைய நிலையில் முன்னைய திருடர்களும் தற்போதைய திருடர்களும் ஒன்றிணைந்து செயற்படும் நிலையைக் காண முடிகிறது என்று வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே தெரிவித்தார்.



காலி மாவட்டத்தின் அக்மீமனத் தொகுதியில் சுதந்திரக் கட்சியின் மத்திய அதிகார சபையொன்றை நிறுவும் நோக்கில் இடம்பெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

வெசாக் பந்தலின்முன்புறத்தில் பல வர்ணங்களில் மின்விளக்குகள் ஒளிர்ந்து அழகூட்டியபோதிலும் அதன் பின்புறத்திலுள்ள மின்சார வயர்களே அதற்கு அடிநாதமாக அமைகின்றன. இன்றைய அரசியற் திருடர்கள் அந்த வயர்களைப் பற்றிக் கொண்டு சமாதானம், நல்லிணக்கம் என அந்த வேடமிட்டு தத்தமது திருட்டுத் தனங்களை மூடி மறைக்கின்றனர்.

1956ஆம் ஆண்டில் முன்னாள் தலைமை அமைச்சர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா வாழ்க்கையில் சிரமங்களை அனுபவிக்கும் சாதாரண பொதுமக்களது அரசொன்றை நிறுவினார். அவருக்குக் கூட கட்சிக்கு உள்ளிருந்தே எதிர்ப்பு, சவால் உருவாகியது. இன்றும் அத்தகைய நிலையே ஏற்பட்டுள்ளது.

வெளியிலிருந்து வரும் எதிர்ப்புச் சக்திகளுக்கு முகம் கொடுக்க முடிந்தாலும் கட்சிக்குள்ளிருந்து வெளிவரும் எதிர்ப்புக்கு முகம் கொடுப்பது சிரமமே. கட்சிக்குள் ஒற்றுமையையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்தியே அத்தகைய எதிர்ப்புச் சக்திகளை முறியடிக்க இயலும். இன்று எம்மத்தியில் அத்தகைய ஒற்றுமை. புரிந்துணர்வு என்பவை நிலவவில்லை. இதுவோர் கசப்பான உண்மை. எனவே எம் மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்திக் கொண்டு எதிர் வரவுள்ள தேர்தல்களுக்கு முகம் கொடுக்கக் கட்சியினர் மற்றும் வெளியிலும் கட்சிக்குள்ளும் இருக்கும் தலைவர்கள் புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டிய காலம் தற்போது உருவாகியுள்ளது -என்றார்.

## எசல பெரஹெரா: மது விற்பனை நிலையங்கள் பூட்டு

கண்டி, ஓக. 17

கண்டி எசல பெரஹெரவை முன்னிட்டு கண்டி நகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில், இறைச்சி விற்பனை நிலையங்கள் மற்றும் மதுபான நிலையங்களை மூடுவதற்குத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகப் பெரஹெர ஏற்பாட்டுக்குழு தெரிவித்துள்ளது. இதன்படி எதிர்வரும் 26ஆம் திகதி வரை மூடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

## சிறப்புமேல் நீதிமன்றம் ஊடாக குற்றவாளிகளுக்கு விரைவில் சிறைவாசம்

### அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவிப்பு



சிறப்புமேல் நீதிமன்றத்தின் ஊடாக குற்றவாளிகள் விரைவில் சிறைவாசம் செல்வார்கள் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலரும் அமைச்சருமான அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் கீழ் இயங்கும் தொழிற்சங்க பிரதிநிதிகளுடனான சந்திப்பொன்றுநேற்று முன்தினம் பிட்ட. கோட்டேயில் அமைந்துள்ள கட்சித் தலைமையகத்தில் நடைபெற்றது.

இந்நிழ்வுக்கு ஐக்கியதேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளரும், அமைச்சருமான நவீன்திஸாநாயக்க, தொழிற்சங்க செயலாளரும் இராஜாங்க அமைச்சருமானஅஜித் பீ .பெரேரா ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது அரச ஊழியர் சங்கம் என்ற வகையில் நிரந்தர நியமனம்.அரசியல் பழிவாங்கலுக்கு உட்பட்டவர்களின் பதவிஉயர்வு உள்ளிட்டபல்வேறு விவகாரங்கள் தொடர்பில்பேசப்பட்டன. இந்த சந்தர்ப்பத்தில்தொழிற்சங்கப் பிரதிநிதிகள் கடுமையான தொனியில் அரசின் மீதுவிமர்சனங்கள் முன்வைத்தனர்.

இதனையடுத்து அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும்தெரிவித்ததாவது.

கட்சிக்காக வியர்வை சிந்தியோரின் பிரச்சினைகளை நான் அமைதியாகவிசாரித்தேன்.

ஆகவே குறித்த பிரச்சினைகள் அனைத்தையும் கட்சியின்செயற்குழுவில் முன்வைத்து உடன் தீர்வைப் பெற்றுதருவேன்.

நெருக்கடியான சந்தர்ப்பத்தில் அரச தலைவர் தேர்தலில் ஐக்கியதேசியக் கட்சி வெற்றி பெற்றே தீரும். அதே போன்று குற்றவாளிகளுக்குதண்டனை வழங்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு வருகின்றன.

வழக்குகளின் கால தாமதமே அதற்கு முதன்மைக் காரணமாகும். இதற்காக வேண்டியே சிறப்பு மேல் நீதி மன்றத்தை அமைத்தோம். ஆகவேஇதன் ஊடாக குற்றவாளிகள் விரைவில் சிறைவாசம் செல்வார்கள் - என்றார். (31)

# டக்ளஸின் கரங்களை பலப்படுத்த வேண்டுமாம்

## கோரிக்கை விடுக்கிறார் அமைச்சர் மனோகணேசன்

கொழும்பு, ஓக. 17

நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தாவின் கரங்களைத் தமிழ் மக்கள் பலப்படுத்துவதனூடாகவேவடக்கு-கிழக்கில்வாழும்தமிழ் மக்களது எதிர்கால வாழ்வு முன்னேற்றம் காணும் என்று அமைச்சர் மனோகணேசன் தெரிவித்தார்.

அமைச்சர்மனோகணேசனை, நாடாளுமன்ற உறுப்பினர்டக்ளஸ்தேவானந்தாதலைமையிலான ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் கொழும்பில் நேற்றுச் சந்தித்தனர். இந்தச் சந்திப்புத் தொடர்பில் ஈ.பி.டி.பியினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில்மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வடக்கு - கிழக்கு மக்கள் எதிர்கொண்டுவரும் வாழ்வாதாரம் மற்றும் பொருளாதார உட்கட்டமைப்பு தொடர்பான பிரச்சினைகளுக்குத்தீர்வுகள்பெற்றுக்கொள்ளும்நோக்கில்இந்தச்சந்திப்பு இடம்பெற்றது. வடக்கு- கிழக்கு மக்களது வாழ்வாதாரம் மற்றும் உட்கட்டுமானம் உள்ளிட்ட பிரச்சினைகள் அடங்கிய அறிக்கை அமைச்சர் மனோகணேசனிடம்வழங்கிவைக்கப்பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர் மனோகணேசன், தமிழ்மக்களின்பிரச்சினைகள் மற்றும் வாழ்வாதார வசதிகளைப் பெற்றுக் கொடுக்கும் அக்கறை உடையவர் டக்ளஸ் தேவானந்தா. அவரது கரங்களைத் தமிழ் மக்கள் பலப்படுத்தவதனூடாகவே வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ் மக்களது எதிர்கால வாழ்வு முன்னேற்றம் காணும் என்று தெரிவித்தார்.

ஏனைய சமூகங்கள் தமது பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள தமது பிரதிநிதிகளை நாடுகின்றனர். துரதிஷ்டவசமாக வடக்கு - கிழக்கில் வாழும்தமிழ்மக்களின்அரசியல்தலைமைகள் அந்தமக்களின்பிரச்சினைகள்தேவைகளைத் தீர்க்க முன்வருவதில்லை.

ஆனால் முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாதமிழ்மக்களின்அரசியல்பிரச்சினைக்கு நடைமுறைச் சாத்தியமான தீர்வை வலியுறுத்துகிறார். அதேவேளை தமிழ் மக்களின் நாளாந்த பிரச்சனைகளுக்கும் உரிய தீர்வு கிடைக்க வேண்டுமென்றும் தொடர்ந்து வலியுறுத்திவருகின்றார். அவரின்மக்கள்நலன்முயற்சிகளை வரவேற்கின்றேன்.

அவர் முன்வைக்கும் மக்கள் நலன் சார்ந்த கோரிக்கைகளை நிறைவேற்றித் தருவதற்கு தேவையானபங்களிப்பை அமைச்சின் ஊடாக நிச்சயம்செய்வேன்என்றும்அமைச்சர்மனோகணேசன்தெரிவித்ததாக. ஊடக அறிக்கையில் மேலும்தெரிவிக்கப்பட்டது. (5)

## சிங்கப்பூர் - இலங்கை உடன்படிக்கையால் பாதிப்பு வருமாயின் அதனைத் திருத்தலாம்

### அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவிக்கிறார்

சிங்கப்பூர் - இலங்கை இடையிலான வர்த்தகஉடன்படிக்கையின்மூலம்நாட்டுக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்படுமாயின் அதனை திருத்திக் கொள்ள முடியும் என்று அமைச்சர்மகிந்தசமரசிங்கதெரிவித்தார். கொழும்பில் ஊடகவியலாளர் சந்திப்புநேற்றுநடைபெற்றது. சிங்கப்பூர் இலங்கை வர்த்தக உடன்படிக்கை சம்பந்தமாககூட்டுஎதிர்க்கட்சியின்நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன வெளியிட்டுள்ள கருத்துத் தொடர்பில் ஊடகவியலாளர்ஒருவர்எழுப்பியகேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிங்கப்பூர் வர்த்தக உடன்படிக்கை சம்பந்தமாகவிசாரணைநடத்த அரசதலைவரால் குழு நியமிக்கப்பட்டது. இரண்டு மாதங்களில் அந்த குழு உடன்படிக்கை சம்பந்தமான அறிக்கையை தாக்கல் செய்யும். அந்த அறிக்கையின்படிஉடன்படிக்கையில்நாட்டுக்குஏதேனும்பாதிப்பு ஏற்படும் வகையிலான விடயங்கள் இருந்தால், அதனைஒருவருடத்திற்குள் திருத்த முடியும் - என்றார்

# இலங்கைக் கடற்பரப்பில் மருத்துவக் கழிவுகள்: இராஜதந்திர மட்டத்தில் தலையீடுகளே காரணம்

## அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு



கொழும்பு, ஓக 17

இலங்கைக்கடற்பரப்பில்இந்திய மருத்துவக் கழிவுகள் கரையொதுங்கிய சம்பவம் தொடர்பில் இராஜதந்திர மட்டத்தில் தலையீடுகள் இருப்பதாக அமைச்சர் பாட்டாலிசம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

புத்தளம் பகுதிக் கடற்பரப்பில் அண்மையில் மருத்துவக் கழிவுகள் கரையொதுங்கியது டன் அவை தற்போது அகற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் கண்டியில் வைத்து ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். கழிவுகள் அகற்றப்பட்டிருப்பினும் அதனால் கடலிற்கு ஏற்பட்ட தாக்கம் தொடர்பில் இதுவரையில் கண்டறியப்படவில்லை எனக் கடலோரப் பாதுகாப்பு ஆணையம் தெரி வித்துள்ளது. கடந்த ஆண்டு தொண்டமனாறு கடற்கரைப் பகுதியிலும் இதே போன்ற மருத்துவக்கழிவுகள் ஒதுங்கியிருந்தன. இது தொடர்பில் கொழும்பு அரசு எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

# சமுர்த்தி திணைக்களத்தின் ரூ. 57 இலட்சம் அபிவிருத்திப் பணியாளரால் மோசடி

**கொழும்பு,ஓக.17**
**சமுர்த்தி திணைக்களத்துக்குச் சொந்தமான 57 இலட்சம் ரூபா நிதியை திணைக்களத்தில் அபிவிருத்திப் பணியுாளராகக் கடமையாற்றும் ஒருவர் கணக்காளரின் மாதிரிக் கையொப்பத்தைக்காசோலையில்இட்டுபணத்தைக்களவாடியுள்ளார்என்றுபொலிஸார்தெரிவித்தனர்.**


இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது:
மட்டக்களப்பு மாவட்டச் செயலத்தில் உள்ள சமுர்த்தித் திணைக்களத்தின் கணக்குப்பகுதியில் பணியாற்றும் இந்தச் சந்தேகநபர் திணைக்களத்தின்கணக்காளரின்கையொப்பத்தைப் போன்றுகாசோலையில்கையெழுத்து இட்டு அதனை வங்கியில் கொடுத்துப் பணத்தைப்பெற்றுச்சென்றுள்ளார்.
கொழும்பில்உள்ளசமுர்த்தித்திணைக் களத்தில் இருந்து கடந்த செவ்வாய்க் கிழமை குறித்த பணியகத்தின் (திணைக்களத்தின் சராசரி நிலுவையை) மீதியைப் பரிசோதித்துக் கொழும்புக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவுபிறப்பிக்கப்பட்டது.
இதன்போதுசமுர்த்தித்திணைக்களத்தின் வங்கிப்பணம் பரிசோதிக்கப்பட்டவேளை 57 இலட்சம் ரூபா காணாமற் போயுள்ளமை தெரியவந்துள்ளது.
சம்பவம்தொடர்பில்கணக்காளரினால் மட்டக்களப்பு தலைமைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. இதனை விரிவாக ஆராய்ந்த பெரும்குற்றத் தடுப்புப் பொலிஸ் பொறுப்பதிகாரி சமுர்த்தித் திணைக்களத்தில்கடமையாற்றிய அபிவிருத்தி பணியாளர் ஒருவரைக் கைது செய்துள்ளார்.
பணமோசடியில் ஈடுபட்டமை தொடர்பில் மேலும் 8 பேரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். சந்தேகநபரை விசாரணைகளுக்கு உட்படுத்தியதுடன்அவரதுசொந்தவூரானவவுணதீவு பொலிஸ் பிரிவில் உள்ள கரவட்டிக் கிராமத்துக்குச் சென்று பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதன்போது நபரின் வீட்டில் உள்ள தென்னை மரத்தில்இருந்து27இலட்சம்ரூபாமீட்கப்பட்டுள்ளது.
இந்தப் பணத்தை குறித்த சந்தேகநபர் உறவினர்கள் நான்குபேரின் கணக்கிலத்துக்கு பரிமாற்றம் செய்யப்பட்டு அதனை மீளப்பெற்றுத் தன்னுடைய வீட்டில் உள்ள தென்னை மரத்தில் சூட்சூமமான முறையில் ஒழித்து வைத்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டது. மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

## எதிர்க்கட்சி கோரிய மகிந்த அணிக்கு சபாநாயகர் பதிலடி கொடுத்தார்

*பிரதி அமைச்சர் நளின் பண்டார தெரிவிப்பு*




கொழும்பு, ஓக. 17
நாடாளுமன்ற சம்பிரதாயங்களை கருத்திற் கொள்ளாமலும், நடைமுறை அரசியல் உபாயங்களை அறியாமலும் மகிந்த தரப்பினர் நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர்பதவியைக்கோரினர். இதற்குச்சபாநாயகர் அரசமைப்பின் பிரகாரம் சிறந்த பதிலளித்தார் எனச் சட்டம், ஒழுங்கு பிரதிமைச்சர் நளின் பண்டார தெரிவித்தார்.
அரசுக்கு அழுத்தம் கொடுப்பதாகக் குறிப்பிட்டு நாட்டில் அநாவசியமாகப் போலி பரப்புரைகளைப் பொது எதிரணியினர் மேற்கொள்வது எமக்கு எவ்விதமான பாதிப்பையும் ஏற்படுத்தாது எனவும் அவர் குறிப்பிட்டார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாடாளுமன்றத்தின்எதிர்க்கட்சிப் பதவியைத்தமக்குவழங்குமாறு கடந்த வாரம் அரசமைக்கு முரணான முறையில் கோரிக்கை விடுத்தனர். தமது விருப்பத்தின் பிரகாரம் அரசமைப்பை மாற்றியமைப்பதற்கு இதுவொன்றும் கடந்த அரசு அல்ல. ஜனநாயகத் தேசிய அரசு என்ற விடயத்தைப் பொது எதிரணியினர் புரிந்துக் கொள்ள வேண்டும்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் தலைவருக்கு அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களையும், நாடாளுமன்ற சம்பிரதாயங்களையும் அடிப்படையாகக் கொண்டே எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழங்கப்பட்டுள்ளது. இதனை அறியாமல் தற்போது அரசைக் கவிழ்க்க பொது எதிரணியினர் எதிர்க்கட்சித் தலைவர் பதவியைக் கோரியதைத்தொடர்ந்துநாடாளுமன்றத்தில்சுயாதீனமாகச் செயற்படத் தீர்மானித்துள்ளனர்.
பொது எதிரணியினர் நாடாளுமன்றத்தில் சுயாதீனமாகச் செயற்படுவது, எமக்கு எவ்விதமாக சவால்களையும் ஏற்படுத்தாது. கடந்தகாலத்தில்மறைக்கப்பட்ட உண்மைகளும் ஆதார பூர்வமாக எடுத்துரைக்கப்படும். அப்போது கூட்டு எதிரணியினர் எவ்விடயம் தொடர்பில் போலியான பரப்புரைகளை மேற்கொள்வர் என்று தெரியவில்லை.
அரசில் இடம்பெறும் ஒவ்வொரு விடயங்களையும் பெரிதுபடுத்திப்பேசியவர்கள்பலமறைக்கப்பட்ட உண்மைகளின் பின்னணியாகவேகாணப்படுவர். ஆகவேதேசியஅரசில் பொது எதிரணியினர் ஒருபோதும் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வகிக்க முடியாது என்ற விடயம் மாத்திரம் நிச்சயிக்கப்பட்டதாகவே காணப்படுகின்றது- என்றார். (61)




நன்றி: மவ்பிம

### அரச தலைவருக்கு இராணுவ மருத்துவமனையில் சிகிச்சை

கொழும்பு,ஓக. 17
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன சுகவீனம் காரணமாகக் கொழும்பு படையினருக்கான மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாக, சிங்கள ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.
சளிகாரணமாகவே அரச தலைவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளார். எனினும், தற்போது அரச தலைவரின் உத்தியோகபூர்வஇல்லத்தில் அவர் ஓய்வு பெற்று வருவதாகஅரசதலைவர் செயலகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளதாக அந்த ஊடகம் தெரிவித்துள்ளது.

### ஈரான் மசகு எண்ணெய்க்குரிய பணத்தை ரூபாவிலேயே பெற்றுக்கொள்ள முடிவு

கொழும்பு,ஓக. 17
இலங்கை ரூபாவினை ஏற்றுக்கொள்ளவிரும்பும் ஈரான் மீது விதிக்கப்படவுள்ள பொருளாதாரத் தடை காரணமாக அந்த நாடு தான் இலங்கைக்கு விநியோகிக்கும்மசுகுஎண்ணெய்க்குரிய பணத்தை இலங்கைரூபாவிலேயே பெற்றுக்கொள்ள இணங்கியுள்ளதாக அமைச்சர் சரத் அமுனுகம அமைச்சரவையில் அறிவித்துள்ளார்.
இலங்கைஈரானிலிருந்து மசகு எண்ணெய்யாக வாங்கி சபுகஸ்கந்தியில் சுத்திகரிப்பை மேற்கொள்கிறது. இலங்கையிலிருந்து பெருந்தொகை யானதேயிலையைவாங்கும் நாடுகளில் ஈரானும் ஒன்றாகும்.

*மகிந்த தரப்பு பின்னர்*

## சுதந்திர முன்னணியிலிருந்து விலகினால் எதிர்க்கட்சிக்கான பதவியைக் கேட்கலாம்

*அமைச்சர் ராஜித இப்படிக் கூறுகிறார்*

கொழும்பு,ஓக. 17
மகிந்த அணியினர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலிருந்து விலகிச் சுயாதீனமாக நாடாளுமன்றத்தில் செயற்பட்டால் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவர் பதவியைக் கோர முடியும்.
ஆனால் அவர்கள் அவ்வாறு மக்கள் சுதந்திர முன்னணியிலிருந்து விலகினால் நாடாளுமன்ற உறுப்புரிமையை இழந்துவிடுவார்கள் என்று அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.
அரச தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளைஅறிவிக்கும்செய்தியாளர்சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்
அவர் மேலும் தெரிவித்ததாவது:
மகிந்த அணியினருக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவிவேண்டுமானால்அவர்கள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலிருந்து விலகவேண்டும். அவ்வாறு விலகினால் அந்த முன்னணியின் செயலர் அதனைச் சபாநாயகருக்கு அறிவிப்பார்.
ஆனால் அங்கு ஒரு சிக்கல் உள்ளது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலிருந்து மகிந்த அணியினர் விலகிச்சுயாதீனமாக நாடாளுமன்றத்தில் செயற்பட்டால் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவர் பதவியைக் கோர முடியும்.
எனினும் அவர்கள் அவ்வாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலிருந்துவிலகினால்நாடாளுமன்ற உறுப்புரிமையை இழந்துவிடுவார்கள்.. அப்போது நாட்டில் புதிய அரசியல் நிலமை உருவாகும் - என்றார். (61)

### மகிந்தவிடம் இன்று விசாரணை



கொழும்பு, ஓக. 17
'த நேசன்' நாளிதழின் இணை ஆசிரியராக இருந்த கீத்நொயார்கடத்தப்பட்டுச் சித்திரவதைக்குட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச வாக்குமூலம் அளிப்பதற்கு இணங்கியுள்ளார். இந்த விவகாரம் தொடர்பாக இன்று காலை 10 மணிக்கு வாக்குமூலம் அளிக்கத் தயாராக இருப்பதாக மகிந்த ராஜபக்ச நேற்றுமுன்தினம் குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு அறிவித்துள்ளார். உதவிப் பொலிஸ் கண்காணிப்பாளர் ஒருவரின் தலைமையில், கொழும்பு விஜேராம மாவத்தையில் உள்ள மகிந்த ராஜபக்சவின் இல்லத்துக்குச் செல்லும் குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் குழு, அவரிடம் இருந்து வாக்குமூலத்தைப்பெற்றுக்கொள்ளும்.
மகிந்த ராஜபக்சவுக்கு நான்கு தடவைகள் அழைப்பாணை விடுக்கப்பட்ட போதும் அவர் அதற்குப் பதிலளிக்காத நிலையிலேயே, அவரின் இல்லத்துக்கே சென்று விசாரணைகளை மேற்கொள்ளக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் முடிவு செய்துள்ளனர்.
இதற்கிடையே, பொலிஸ் ஊடாக வாக்குமூலம் அளிப்பதற்குத்தயாராகஇருப்பதாக முன்னர் தாம், குற்றப்புலனாய்வுப்பிரிவுக்குத்தகவல் அனுப்பியதாகவும், இப்போது அதனை வைத்து அரசியல் விளையாட்டு நடத்தப்படுவதாகவும் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

## நாட்டில் 7 மாதங்களில் 282 கொலைகள்

கொழும்பு, ஓக.17
இந்த வருடத்தின் கடந்த 7 மாதங்களில் இலங்கையில் 282 கொலைச் சம்பவங்களும், 992 பாலியல் வன்புணர்வுகளும், ஆயிரத்து 779கொள்ளைச்சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகப் பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது. 282 கொலைச்சம்பவங்களில் 28 கொலைகள் துப்பாக்கிச் சூட்டில் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.
கடந்த 2017ஆம்ஆண்டு452 கொலைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகப் பொலிஸ் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# தமிழரின் பண்பாட்டை நல்லூரில் பேணுவோம்!

தமிழர்களின் பெருங் கோயில்களில் ஒன்றான நல்லூர் கந்தன் திருவிழா நேற்றுக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. நல்லூரில் நடப்பது ஆன்மிகத் திருவிழா என்பதையும்தாண்டி, ஒரு பண்பாட்டு விழா. 25 நாள்களும் பக்திக்கும் பண்பாட்டுக்கும் கொண்டாட்டங்களுக்கும் குறைவிருக்காது.

ஊர்களில் தமிழர்களின் திருவிழாக்கள் கொண்டாட்டங்களாகத்தான் இருந்தன. ஆலய தரிசனத்தின் பின்னர் உறவுகள் கூடிக் களித்தலும், ஆடி மகிழ்தலும், அந்தக் கொண்டாட்டத்தின்பண்பாட்டு அம்சங்களாக இருந்தன. எனினும் தமிழர்களின்மரபு வழிவந்த வழிபாட்டு அம்சங்கள், ஆகம விதிப்படியான பெருங் கோயில்களாக மாற்றம் பெற்ற போது இந்தப் பண்பாட்டு அம்சங்கள் பலவும் தூர விலகிப்போனமை காலக்கொடுமை. இன்று சுவாமி தூக்குவதற்கே ஆள்களின்றி மின்சாரத்தில்சகடையை இயக்குவதும், தேர் இழுக்கப் படையினரைத் துணைக்கழைப்பதுமாகப் பக்திபதற்றமடைந்திருக்கையில், நல்லூர் இன்னும் சைவத் தமிழ்ப் பண்பாட்டு அம்சங்களை இழக்காமல் அதனைப் பெரும் பண்பாட்டு விழாவாக வளர்த்துச் செல்கிறது.


ஆகம விதிப்படியான ஆலயங்கள் வளர்ந்து வந்தபோது, குறிப்பாகப் பின்வந்த பாண்டியர்கள், சோழர்களின் ஆட்சிக் காலங்களில் ஆலயங்கள் ஆன்மாக்கள் லயிக்கும் இடங்களாக மட்டுமன்றி, பண்பாட்டை வளர்க்கும் இடங்களாகவும் மாறியிருந்தன. ஆடலும் பாடலும் நாடகமும் அந்தப் பண்பாட்டு அம்சங்களில் முக்கிய இடங்களைப் பிடித்திருந்தன. இன்று அத்தகைய நிலை இல்லை. கோயில் என்பதற்கிணங்க, ஆன்மாக்களின் அரசனான (கோ) இறைவன் குடியிருக்கும் இடங்களாக அவை சுருங்கிப் போய்விட்டன. பூசை நேரங்கள் தவிர்த்துத் திறந்திருக்கும் கோயில்களைக் காண்பது அரிதாகிவிட்டது. செல்வச் சந்நிதி தவிர்த்து திருவிழாக்கள் தவிர்ந்த நாள்களில் தவித்த வாய்களுக்குத் தண்ணீரும் உணவும் வழங்கும் மடங்களும் மறைந்துவிட்டன. தமது பணப் பெருமையைப் பறைசாற்றும் இடங்களாகப் பலரும் ஆலயங்களைப் பயன்படுத்தும் இழி நிலையும்கூட வளரத் தொடங்கிவிட்டது.

சிமெந்துக் கட்டடங்களை வளர்த்தெடுக்கும் வேகத்திற்கு ஆலயங்கள் ஆன்மிகத்தையும், மனிதத்தையும், மனஅமைதியையும் வளர்த்தெடுக்கின்றனவா என்பது கேள்விக்குறியாகிவிட்ட நிலையில், தமிழர்களின்பெரும்கடவுள்என்று கொண்டாடப்படும் நல்லூர் முருகனின் பெருந்திருவிழா தமிழர்களின் பண்பாட்டு அம்சங்களின் கொஞ்சநஞ்ச எச்சங்களையாவது பேணித் தலைமுறைகளுக்குக் கடத்தும் விதமாக இருப்பது சிறப்பானது.

தமிழர்களின்பண்பாடு என்பது எது என்கிற பெருங்கேள்வி ஒன்றுண்டு. பண்பாடு என்பதற்கு உலகெங்கும் இருநூற்றுக்கும் மேற்பட்ட வரைவிலக்கணங்கள் உண்டு எனப்படுகின்றது. எப்படியிருந்தாலும், சமூகவியல் அறிஞர்களின் கருத்துப்படி, பண்பாடு என்பது ஒரு மக்கள் கூட்டத்தின் வாழ்க்கை முறை. அந்த வாழ்க்கை முறை அந்த மக்கள் கூட்டம் வாழும் நிலம் சார்ந்தது. அந்த நிலத்தின் உற்பத்தி சார்ந்தது. அதன் வழி உருவாகிய உணவுப் பழக்கவழக்கம் சார்ந்தது. மொழி சார்ந்தது. பண்பாடு பெரும்பான்மை மக்களின் நடத்தைகளையும் எண்ணங்களையும் வெளிப்படுத்தும் வகையில் அமைந்திருக்கும்.

சொந்த நிலம் இல்லாத தமிழர்கள், சொந்த உற்பத்திகளில் வாழாத தமிழர்கள் தமது பண்பாட்டின் எச்சமாகக் கொண்டிருப்பது மொழியும், உணவுப் பழக்க வழக்கங்களும், சமய வழிபாட்டு முறைகளும், இலக்கியங்களும், விழுமியங்களும்தான். இவை அனைத்தும் ஒரு பெருங்கூட்டத்தால் ஒரே இடத்தில், ஒரே நேரத்தில் ஒருங்கிணைக்கப்படுவதனால் நல்லூர் பெருந்திருவிழா ஒரு பண்பாட்டுத் திருவிழா என்பதில் மாற்றுக்கருத்திருக்க முடியாது.

இந்த ஒருமித்த பண்பாட்டு வெளிப்பாட்டு வெளியை எப்படிப் பயன்படுத்திக்கொள்வது என்பதில் தமிழர்கள் அவதானமாகவும், நிதானமாகவும் இருக்கவேண்டும் என்பதைத்தான் தெல்லிப்பளை துர்க்காதேவி ஆலய அறங்காவலர் ஆறு திருமுருகன் வலியுறுத்தியிருக்கிறார். தமிழர்கள்தமது இருப்பைப்பாதுகாக்கவேண்டியும், அதனைத் தலைமுறைக் கடத்தலுக்கு உட்படுத்தவேண்டியும் இருக்கின்ற இன்றைய காலத்தில், நல்லூர்த் திருவிழா போன்ற பண்பாட்டு விழாக்கள் அவற்றின் பரிணாமம் கெடாமல் பார்த்துக்கொள்ளப்படவேண்டியது அவசியம்.



## கூட்டு அரசின் காலத்திலாவது

# மலையக மக்களுக்கு விடிவு கிடைக்கட்டும்

சேரலாதன்

மலையகத்தின் வெவ்வேறு பகுதிகளில், மலையக மக்களுக்கான கிராமங்கள் அமைக்கப்பட்டு தனித்தனி வீடுகளும் வழங்கப்பட்டுள்ளமை மலையக மக்களின் வாழ்க்கையில் ஒரு புதிய அத்தியாயத்தை திறந்து வைத்துள்ளது.

**தோட்டத் தொழிலாளர்கள் தமிழ் நாட்டில் இருந்து அழைத்து வரப்பட்டவர்களே**

இந்தியாவின் தமிழ் நாட்டிலிருந்து ஆங்கிலேயரால் அழைத்துவரப்பட்டுமலையகத்தில்குடியமர்த்தப்பட்ட மக்களின் வாழ்க்கையை ஒரு சோக வரலாறு என்றே கூறமுடியும். இந்தியாவிலிருந்து கப்பல் மூலம் இங்கு அழைத்து வரப்பட்ட இந்த மக்கள், ஆரம்பத்தில் அனுபவித்த கொடுமைகள் சொல்லில் அடங்காதவை. மலைக்காடுகளை அழித்து தோட்டங்களாக மாற்றுகின்ற பணிகள் ஆரம்பத்தில் இவர்களுக்கு வழங்கப்பட்டன. இந்தக் கடினமான பணிக்கு ஏற்ப இவர்களுக்கு ஊதியம் வழங்கப்படவில்லை. இதனால், இவர்கள் அனுபவித்த கஷ்டங்கள் ஏராளம். மலேரியா நோயைப் பரப்புகின்ற நுளம்புகள் பதம் பார்த்ததால் ஏராளமானவர்கள் அந்த நோய்க்கு உள்ளாகி செத்து மடிந்தனர். ஆனால் அந்நியர்கள் இதையெல்லாம் கணக்கில் எடுக்கவில்லை. மந்தைக் கூட்டங்களைப் போன்று நடத்தி, அந்த மக்களைக் கசக்கிப் பிழிந்து வேலை வாங்குவதிலேயே அவர்கள் அக்கறை காட்டிச் செயற்பட்டனர்.

நாடு சுதந்திரம் அடைந்த பின்னரும், இந்த மக்களுக்கு வறுமையில் இருந்து சுதந்திரம் கிடைக்கவில்லை. தொடராக அமைக்கப்பட்ட லயன் வீடுகளில் மிருகங்களைப் போன்று அடைபட்டு வாழ்ந்த இந்த மக்கள், அனுபவித்த அவஸ்தைகள் ஏராளம். மலைத் தோட்டங்களில் கடுமையாக உழைத்த போதிலும், இவர்களது வறுமைக்குத் தீர்வு எதுவும் கிட்டவில்லை.

**மலையக அரசியல்வாதிகள் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள்**

மலையக அரசியல்வாதிகள் ஆளுக்கொரு கட்சியும், தொழிற்சங்கமும் அமைத்து தம்மைப் பலப்படுத்திக் கொண்டார்களே தவிர, தம்மை நம்பியிருக்கின்ற, நம்பியிருந்த இந்த மக்களின் துயரங்களைப் போக்குவதற்கு எவ்வித முயற்சியையும் அவர்கள் மேற்கொள்ளவில்லை. ஆனால், அந்த மக்களின் வாக்குகளைப் பெற்றுப் பதவிகளில் அமர்ந்து தம்மைச் செழிப்பாக்குவதிலேயே அக்கறை எடுத்துக் கொண்டனர். தற்போதுதான் இவர்களுக்கு ஒரு விடிவுகாலம் கிடைத்துள்ளதாகக் கருதத் தோன்றுகிறது. இவர்களுக்குத் தனித்தனி வீடுகளை அமைத்து வழங்குகின்ற பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதன் முதற்கட்டமாக 404 வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வீடும் ஏழு பேர்ச் காணியில் அமைக்கப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும். ஒவ்வொரு வீடும் 12இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளன. வீடொன்றை அமைப்பதற்கு இந்தியா, 10இலட்சம் ரூபாவும், மலையக புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சு இரண்டு இலட்சம் ரூபாவும் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**மலையக மக்களுக்கான வீட்டுத் திட்டங்கள் அவர்களுக்குப் பெரும் பயன் நல்க வல்லவை**

மலையகம் முழுவதும் இந்தத்திட்டம் விஸ்தரிக்கப்படுமானால், மலையக மக்களின் அவலம் நிறைந்த லயன் வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி இடப்பட்டுவிடும். பேசுகின்ற மொழி தமிழாக இருந்தாலும், மலையகத்தில் வாழ்கின்ற இந்திய வம்சாவளித் தமிழ் மக்களும், பூர்வீகமாக இங்கு வாழ்கின்ற தமிழ் மக்களும் பல விடயங்களில் வேறுபாடுகளைக் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். அரசியல் ரீதியாகவும், வெவ்வேறு கொள்கைகளை இவர்கள் கொண்டிருக்கின்றனர். வடக்குக் கிழக்கில் ஆயுதப் போராட்டம் இடம்பெற்றபோது மலையகத்தைச் சேர்ந்த சில தலைவர்கள் மட்டுமே அதற்கு மறைமுக ஆதரவைத் தெரிவித்தனர். ஏனையவர்களின் ஆதரவு முழுமையாகக் கிடைக்கவில்லையென்றே கூறவேண்டும். சிலவேளை மலையகத்தின் பூகோள ரீதியான அமைவிடமும் இதற்கொரு காரணமாக அமைந்திருக்கலாம். ஏனென்றால் பெரும்பான்மையின மக்களுக்கு மத்தியிலேயே மலையக மக்கள் வாழ்கின்றனர். இவர்களைச் சுற்றிவர சிங்களக் கிராமங்கள் காணப்படுகின்றன. இவற்றைத் தாண்டித்தான் மலையகத்தில் வாழ்கின்ற மக்கள் தமது தேவையின் பொருட்டு நகரங்களுக்குச் செல்ல முடியும். இதனால் அவர்கள் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள நேரிடுகின்றது.

மிகநீண்ட காலமாக அவலவாழ்வு வாழ்ந்து வருகின்ற மலையக மக்களுக்கு விரைவில் விடிவு கிடைக்க வேண்டும். அவர்களின் லயன் குடியிருப்பு வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி இடப்பட வேண்டும். தனித்தனி வீடுகளில் வசதியாகவும், மகிழ்ச்சியாகவும் அவர்கள் வாழ்கின்ற காலம் விரைவில் உதிக்க வேண்டும்.

நல்லாட்சி அரசு மலையக மக்களிடம் அக்கறை கொண்டு செயற்படுவதால் இவை யாவும் சாத்தியமாகுமென எதிர்பார்க்கலாம். ■

# பகுத்தறிவுக் கொள்கையிலிருந்து எம்.ஜி.ஆர். விலகுவதாக விமர்சிப்பு

தேவநாயகம் தேவானந்த்

தீண்டாமை, சாதி ஒழிப்பு, வருணாச்சிரமதர்மம் போன்றவற்றைப்பற்றிப் பெரியார் விமர்சிக்கிறார். "சாதி என்று எடுத்துக்கொண்டால் பார்ப்பான், சூத்திரன் என்கிற இரண்டு தான்: செட்டி, முதலி, பறையன், நாவிதன், வண்ணான் என்பவை எல்லாம், அவரவர் செய்கிற தொழிலால் பிரிந்திருந்ததே தவிர, பிரிக்கப்பட்டவர்களே தவிர , மற்றப்படி அவர்களுக்குள் எந்தப் பேதமும் இல்லை" என்கிறார்.



### நாங்கள் உண்மையான பகுத்தறிவாளர்கள் என கருணாநிதி தெரிவிப்பு

தன்னைப் பெரியார் வழி பகுத்தறிவாளனாகக் கூறிக் கொள்ளும் கருணாநிதி, எம்.ஜி.ஆர் பகுத்தறிவுக்கொள்கையில் இருந்து விலகுகிறார் என்று விமர்சித்தார். "பகுத்தறிவைப் பற்றிக் கவலைப்படாமல், எம்.ஜி.ஆர். கட்சி நடத்தினார். நாங்களோ பகுத்தறிவாளர்கள்!" என்றார் கருணாநிதி. எம்.ஜி.ஆர். மைசூர் தாய் மூகாம்பிகையை வணங்கியதை அடிப்படையாகக் கொண்டு இந்த விமர்சனம் முன்வைக்கப்பட்டது. ஆனால், கருணாநிதியின் குடும்பத்தினர் மற்றும் கட்சியின் மூத்த நிர்வாகிகள் மறைமுகமான பக்தி நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள் என்று விமர்சிக்கப்பட்டது.

ஒவ்வொரு தேர்தலுக்கு முன்பும், வெற்றிக்குப் பின்பும் குல தெய்வம் கோயிலுக்குப் போகாமல் கருணாநிதி குடும்பம்

## தமிழ்த் தலைவன் மு.கருணாநிதி - 09

இருந்ததில்லை என்கிறார்கள். கருணாநிதி ஆட்சியில் நிதிநிலை அறிக்கை, ராகு காலம், எமகண்டம் பார்த்து சமர்ப்பிக்கப்படுவதாக விமர்சிக்கப்பட்டது.எவ்வளவு நிறைந்த நாளில் நிதியறிக்கையை சமர்ப்பித்தாலும், தமிழ்நாட்டின் நிதிநிலையில் துண்டு விழாமல் தடுக்க முடியவில்லை என்கிறார்கள்.

"பெரிய கருப்பனை ஏன் அறநிலைத் துறைக்கு அமைச்சர் ஆக்கினேன் தெரியுமா? அவர் கோயிலில் விழுந்து விழுந்து வணங்குவதைப் பார்த்துத்தான்!" என்று கருணாநிதியே கம்பீரமாகக் காரணம் சொன்னார். அது பகுத்தறிவாளர்களால் கடுமையாக விமர்சிக்கப்பட்டது.



### சாயிபாபாவின் கையால் மோதிரம் வாங்கிய கருணாநிதி

ஒரு முறை கிருஸ்ணா நதிநீரை தமிழ்நாட்டுக்குக் கொண்டுவருவது தொடர்பாகப் பேசுவதற்கு புட்டபர்த்தி சாயி பாபா,கருணாநிதியின் கோபாலபுரம் வீட்டுக்கு சென்றிருந்தார். அப்போது சாயிபாபா தனது அமானுஷ்ய சக்தியால் மோதிரம் ஒன்றை வரவழைத்துக் கருணாநிதிக்குக் கொடுத்தார். அதைக் கருணாநிதி வாங்கினார். அப்போது கருணாநிதி பெரியாரின் கொள்கைளில் இருந்து விலகிவிட்டார் என்று எதிர்ப்புக் கிளம்பியது.

ஐந்து தடவைகள் முதல் அமைச்சராக இருந்த கருணாநிதி, ஆறாவது தடவையும் அந்தப் பதவியை அடைவதற்கு முயற்சித்தார். முதலமைச்சராகவே சாக வேண்டுமென்று விரும்பினார். அதற்கு அவர் சொன்ன காரணம், திராவிடக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவேன் என்பதாகும்."இந்தக் கருணாநிதி வந்தால், திராவிடக் கொள்கைகளையே நிறைவேற்றுவான்" என்றார். ஆனால் ஆட்சிக்கு வராமலேயே சாவைத் தழுவிக் கொண்டார்.

அவர் ஆட்சியில் இருந்த ஐந்து தடவைகளும் திராவிட இயக்கத்தின் அடிப்படை லட்சியங்களுக்காக அவர் செய்தது என்ன என்பது தான் இன்றுள்ள கேள்வி!

### கோயிலில் சாதி நீக்கம் வேண்டும் என்பது பெரியாரின் நிலைப்பாடு

'கோயிலில் சாதி நீக்கம் வேண்டும்' என்பதே தந்தை பெரியார் வலியுறுத்திய முழு முதல் கொள்கை. அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற சட்டத்தை முதல் தடவை முதலமைச்சராக இருந்தபோது கருணாநிதி கொண்டுவந்தார். அதற்கு உச்ச நீதிமன்றம் தடை விதித்தது. அதன் பிறகுதான், பெரியாரது சாவு நடந்தது. 'அய்யாவின் நெஞ்சில் முள்ளாக இருந்த இந்தக் கொள்கையை நிறைவேற்ற முடியவில்லை. முள்ளோடு புதைக்கிறோம்!' என்று கருணாநிதி சொன்னார். அந்தச் சட்டம் இன்று வரை நிறைவேற்றப்படவில்லை. கருணாநிதியும் அந்த நெஞ்சில் முள்ளோடு புதைந்து போனார்.

(தொடரும்)

> "தன்னைப் பெரியார் வழி பகுத்தறிவாளனாகக் கூறிக் கொள்ளும் கருணாநிதி, எம்.ஜி.ஆர் பகுத்தறிவுக் கொள்கையில் இருந்து விலகுகிறார் என்று விமர்சித்தார். 'பகுத்தறிவைப் பற்றிக் கவலைப் படாமல் எம்.ஜி.ஆர். கட்சி நடத்தினார். நாங்களோ பகுத்தறிவாளர்கள்!' என்றார் கருணாநிதி. எம்.ஜி.ஆர். மைசூர் தாய் மூகாம்பிகையை வணங்கியதை அடிப்படையாகக் கொண்டு இந்த விமர்சனம் முன்வைக்கப்பட்டது. ஆனால், கருணாநிதியின் குடும்பத்தினர் மற்றும் கட்சியின் மூத்த நிர்வாகிகள் மறைமுகமான பக்தி நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள் என்று விமர்சிக்கப்பட்டது."

## ஆசிரியருக்கான கடிதம்

### சுமைதாங்கிகள் தமிழர்களின் வரலாற்றுச் சின்னங்கள்

எமது மூத்தோர் காலத்தில், பொதுமக்களால் பயன்படுத்தப்பட்ட சுமைதாங்கிகள் நவீன போக்குவரத்து வசதிகள் கிட்டியமையால் பாவனையற்றுக் கைவிடப்பட்ட நிலையில் உள்ளன. இவை எமது பழைய வரலாற்றை எமது எதிர்காலச் சந்ததியினருக்கு உணர்த்துவதற்காக வரலாற்றுச் சின்னங்களாக பாதுகாக்கப்பட வேண்டுமென்ற எனது கருத்து உதயன் பத்திரிகையில் முன்னர் இடம்பெற்றிருந்தது. தற்போது குறிப்பாக தென்மராட்சி, கொடிகாமம்- பருத்தித்துறை வீதி ஓரத்தில் எருவன், ஊறுக்காய் போன்ற பகுதிகளில் தப்பிப்பிழைத்து சேதமுற்ற நிலையில் காணப்படும் சுமைதாங்கிகள் தொல்பொருள் திணைக்களத்தால் பொறுப்பேற்கப்பட்டு, அது குறித்து அறிவித்தல் பலகைகளும் அவற்றின் அருகில் நடப்பட்டுள்ளமை மனதுக்கு நிறைவு தருமொன்று.

அந்த வகையில் தொல்பொருள் திணைக்களம் முன்னைய காலத்து வரலாற்றுச் சின்னங்களான சுமைதாங்கிகளை பாதுகாக்க முன் வந்தமை பாராட்டுக்குரியது; வரவேற்கத்தக்கது.

*அ.அன்பு.வரணி*

### ஆடி அடங்கியது ஆடியபாதம்

ஆட்டுவித்தால் யாரொருவர் தான் ஆடாதிருப்பர்? சகலரையும் ஆட்டுவித்த ஆடியபாத வீதி, இனியும் ஆடமுடியாத நிலையில் உச்சமாக ஆடி அடங்கியது. சம்பந்தப்பட்டவர்கள் உரியவாறு ஆடியபாதத்தின் ஆட்டங்களை முறையாகக் கவனித்து, அடக்கி, முடக்கி ஒடுக்கிச், சீராக்கியமையால், சமூகம், தேடிய பாதையில் சீராகப் பயணிக்க முடிகிறது. இனிமேல் எவருக்கும் எந்தவொரு சேதாரமும் ஏற்பட வாய்ப்பில்லை. இருந்தபோதும் மாரிகாலத்திலும் ஆடியபாதம் ஆடாதபாதையாக மிளிர, எம்மவர்களின் கூடிய கவனம் தேவையே! வீதியை நேர்த்தியாகச் செப்பனிட்டுக் காத்திரமாக்குவதென்பது இலேசான காரியமல்ல.

உச்சவெய்யிலில் நின்று, உருக்கிய தாரோடு, தாமும் உருகி, வீதியைச் சமச்சீராக்குவதென்பது எல்லோராலும் செய்ய முடியாததொன்றாகும். இவர்கள் மேடையில்லாத மேதாவிகள். வீதிபெருக்குதல், வீதிதிருத்துதல், தார் போடுதல், திரவ திண்மக் கழிவு அகற்றுதல், ஆடை துவைத்தல், முடிவெட்டுதல், நிலப்பாவாடை விரித்தல், பிணம் எரித்தல், கூலி வேலை என எல்லாமே கடவுள் பணிகளேயாம். பேரும் புகழும் பெற்றிடும் நோக்கில் மேற்கொள்ளப்படும் பொதுக்கருமங்களைவிட, மேற்படி கருமங்கள் பல படிகள் மேலானவை. அவை அறம் சார்ந்த, சமூகம் சார்ந்த, விழுமியம் சார்ந்த செயற்பாடுகளாகும்.

இவர்கள் இயங்குவதனால் தான் நாம் மனிதராக உலவி இயங்க முடிகிறது. அவர்களுக்காகவும் நாம் பிரார்த்தித்துப், பாதைகளில் வேகம் குறைத்துப் பயணிப்போமாக. ஆடி, பொதுவாகவே கனத்த பாதமாகும். அதனாலேயே, ஆவணி பிறந்துள்ளது. வரவிருக்கும் மாரிக்கும் வீதி நின்று பிடித்தால் பலருக்கும் பயன் கிட்டும்.

*கே.எஸ்.சிவஞானராஜா,கொக்குவில்*




# புதியதொரு முகம் புதியதொரு வாழ்வு

அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் பிறந்து வளர்ந்தவர் கேட்டி. படிப்பிலும் விளையாட்டிலும் திறமையானவர். 16 வயதில் குடும்பம் கெண்டகிக்குக் குடியேறியது. புதிய பள்ளியில் ஒரு மாணவரைப் பார்த்தவுடன் இவருக்குப் பிடித்துவிட்டது. இருவரும் காதலித்தனர். 2014ஆம் ஆண்டு கேட்டிக்கு தொடர்ச்சியாக உடல் நிலை பாதிப்பு ஏற்பட்டது. சில அறுவைச் சிகிச்சைகளும் மேற்கொள்ளப்பட்டன. அந்த நேரத்தில் காதலரின் அலைபேசியில் இன்னொரு பெண்ணின் குறுஞ்செய்தியைப் படிக்க நேர்ந்தது. உடனே மனம் உடைந்து போனார். வீட்டிலுள்ள குளியலறையில் துப்பாக்கியை முகவாயில் வைத்து, தன்னைத் தானே சுட்டுக்கொண்டார். சத்தம் கேட்டு ஓடிவந்தவர்கள், கேட்டியின் முகம் சிதைந்துபோனது கண்டு அதிர்ச்சியடைந்தனர். உடனே மருத்துவமனையில் சேர்த்தனர். உயிர் பிழைத்தாலும் கேட்டியின் முகம் முற்றிலும் சிதைந்துவிட்டது. மூச்சு விடுவது, சாப்பிடுவது என அனைத்தும் மிகவும் சிரமமாக இருந்ததால், தொடர்ந்து மருத்துவமனையிலேயே கேட்டி வைக்கப்பட்டிருந்தார். சில மாதங்களுக்குப் பிறகு பெற்றோர் அவரின் மனதைத் தேற்றி, முகமாற்று அறுவைச் சிகிச்சை செய்வதற்குத் தயார் செய்தனர். சில முன்னணி மருத்துவமனைகள் தங்களால் செய்ய இயலாது என்று மறுத்துவிட்டன. இறுதியில் க்ளீவ்லாண்ட் மருத்துவமனையில் முயற்சி செய்யச் சொன்னார்கள். அங்கே முகமாற்று அறுவை சிகிச்சைக்காக பெயரைக் கொடுத்துவிட்டு, காத்திருந்தார் கேட்டி. 2017ஆம் ஆண்டு ஆண்ட்ரியா என்ற 31 வயது பெண் இறந்துபோனார். அவரிடமிருந்து முகத்தை எடுத்து, இவருக்குப் பொருத்தும் முயற்சிகளில் மருத்துவர்கள் இறங்கினர். துப்பாக்கியால் சுட்டு, 3 ஆண்டுகளுக்குப் பிறகு முகமாற்று அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. இதன்மூலம் அமெரிக்காவிலேயே மிக இளம் வயதில் முகமாற்று அறுவை சிகிச்சை செய்துகொண்டவர் என்ற சிறப்பு கிடைத்திருக்கின்றது. இதற்குப் பிறகு கேட்டி இயல்பாக சுவாசிக்க ஆரம்பித்தார். உணவை விழுங்கினார். மெதுவாக நடக்கவும் பேசவும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. பார்வை பறிபோனதால் பிரெய்லி முறையில் படிக்கவும் ஆரம்பித்திருக்கிறார்.

'இது எனக்குக் கிடைத்த இரண்டாவது வாழ்க்கை. துப்பாக்கியால் சுட்ட பிறகான வாழ்க்கையில் என் பெற்றோர் சில நிமிடங்கள் கூட என்னை விட்டுப் பிரிந்திருக்கவில்லை. நான் அனுபவித்த அத்தனை கஷ்டங்களையும் தாங்கிக்கொண்டனர். எப்போதும் நம்பிக்கை அளிக்கும் வார்த்தைகளைப் பேசிக்கொண்டே இருந்தனர். இவ்வளவு நல்ல மனிதர்களை விட்டு, இறந்து போக நினைத்தோமே என்று வருத்தமாக இருக்கிறது. என்னுடைய பழைய முகம் கிடைக்க வாய்ப்பில்லை. ஆனால் விபத்துக்குப் பிறகான என் முகத்தை நினைக்கும்போது, இந்தப் புதிய முகம் மிகவும் அழகாகத் தெரிகிறது. படிப்பை முடித்த பிறகு, என்னைப்போல் தற்கொலையில் இருந்து தப்பியவர்களுக்காக வேலை செய்யப் போகிறேன். தற்கொலை எண்ணம் வருகிறவர்களுக்கு 'கவுன்சிலிங்' கொடுக்கப் போகிறேன்" என்கிறார் கேட்டி. (ம)

# அமெ. பொருள்க துருக்கி இரட்டி

இஸ்தான்புல், ஓக. 17

அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு இரட்டிப்பு வரி விதித்து நடவடிக்கை எடுத்தது துருக்கி.

அமெரிக்கா உலக நாடுகள் பலவற்றுடன் தற்போது தீவிரமாக வர்த்தகப் போரில் ஈடுபட்டு வருகிறது. ட்ரம்ப் அமெரிக்க அதிபராக பொறுப்பேற்றது முதல் அமெரிக்கப் பொருள்களுக்கு வெளிநாடுகளில் விதிக்கப்படும் வரிக்கும், வெளிநாட்டுப் பொருள்களுக்கு அமெரிக்காவில் விதிக்கப்படும் வரிக்கும் இடையில் உள்ள 'இமாலய' வேறுபாட்டை விவாதத்துக்கு உட்படுத்தி வந்தார்.

குறிப்பாக சீனத்து உற்பத்திகளுக்கு அமெரிக்காவில் வெறும் 2.5 சதவீத வரியும் அமெரிக்க உற்பத்திகளுக்கு சீனாவில் 25 சதவீத வரியும் விதிக்கப்படுவதை அவர் வெளிப்படையாக விமர்சித்தார். அதன் தொடர்ச்சியாக சீனா, ஐரோப்பிய நாடுகள் என்று வரிப் போரை பரவலாக ஆரம்பித்துள்ள ட்ரம்ப் தற்போது துருக்கியுடன் வரிப்போரில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்.

துருக்கியில் இருந்து இறக்குமதியாகும் இரும்பு, உருக்கு ஆகியவற்றுக்கான வரியை அண்மையில் அதிகரித்திருந்தார் ட்ரம்ப். இதற்குப் பதிலடியாக அமெரிக்க உற்பத்திகளுக்கான வரியை இரட்டிப்பாக உயர்த்தியுள்ளது துருக்கி. அதிலும் குறிப்பாக அமெரிக்காவில் இருந்து துருக்கிக்குள் இறக்குமதி செய்யப்படும் மின்னணு சாதனங்கள் இனி இரட்டிப்பு வரியை எதிர்கொள்ள நேரிடும்.

அமெரிக்கா - துருக்கி இடையிலான முரண்பாட்டின் பின்னணி ஈரானுடனும் தொடர்பு படுகிறது. அதாவது ஈரானுடன் தான் கொண்டிருந்த அணுவாயுதப் பரவல்த் தடை ஒப்பந்தத்தில் இருந்து அண்மையில் விலகிய அமெரிக்கா, ஈரானைத் தனிமைப்படுத்தும்



முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டது
படி அந்த நாட்டுடன் கொண்டுள்
ஒப்பந்தத்தைக் கைவிடும்படி

# நைல் நதியில் கவிழ்ந்த பள்ளிச் சிறார்கள் 22 பே

சூடான், ஒக். 17

சூடானில் பள்ளிச் சிறுவர்கள் சென்ற படகு விபத்துக்கு உள்ளானதில் 22 அப்பாவிச் சிறுவர்கள் துயரச் சாவடைந்தனர்.

குறித்த சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்லும் மார்க்கமாக கடல் பகுதி அமைந்துள்ளது. சுமார் 40 பேருடன் சென்ற படகே விபத்துக்கு உள்ளானது. இயந்திரக் கோளாறு காரணமாக படகு இடைநடுவில் பழுதாகி நின்றது என்றும் பின்னர் திடீரெனக் கவிழ்ந்தது என்றும் விபத்தில் இருந்து உயிர் தப்பியவர்கள் பன்னாட்டு ஊடகங்களுக்குத் தெரிவித்தனர். மீட்கப்பட்ட சிலரின் நிலைமை கவலைக்கிடம் என்றும் சொல்லப்படுகிறது. (ம)



# வெள்ளத்தில் மிதக்கி




# களுக்கு ப்பு வரி



பட்டது. இதன் ண்டுள்ள கச்சா ம்படி துருக்கி

யைக் கோரியிருந்தது. ஆனால் துருக்கி அதற்கு மறுப்புத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

# தது படகு பேர் சாவு





# மீட்கப்பட்டது சிலை

லண்டன், ஒக். 17

இந்தியாவில் இருந்து கடத்தப்பட்ட 12ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த புத்தர் சிலை லண்டனில் மீட்கப்பட்டது.

நாலந்தாவில் உள்ள இந்திய தொல்பொருள் துறை அருங்காட்சியகத்தில் இருந்த 12ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வெண்கலத்தால் ஆன புத்தர் சிலை, கடந்த 1961ஆம் ஆண்டு காணாமல் போனது. கடந்த மார்ச் மாதம் லண்டனில் நடந்த வர்த்தகக் கண்காட்சியில் இந்தியாவில் இருந்து கடத்தப்பட்ட அந்தப் புத்தர் சிலை காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது.

இதுகுறித்து லண்டன் பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கப்பட்டது. அவர்கள் அந்த சிலையின் உரிமையாளரிடம் விசாரணை நடத்தினர். அதில் அவர் எந்தத் தவறும் செய்யவில்லை என்று தெரிந்தது. அதேநேரம் சிலையை இந்தியாவிடம் திரும்ப ஒப்படைக்கவும் அவர் ஒப்புக் கொண்டார். இதைத் தொடர்ந்து புத்தர் சிலை மீட்கப்பட்டு லண்டனில் உள்ள இந்திய தூதரகத்தில் நேற்றுமுன்தினம் ஒப்படைக்கப்பட்டது. மீட்கப்பட்ட புத்தர் சிலை விரைவில் இந்தியாவுக்குக் கொண்டுவரப்படவுள்ளது. (ம)

# 45 பேருக்கு லிபியாவில் தூக்கு

திரிபோலி, ஒக். 17

லிபியத் தலைநகர் திரிபோலியில் 2011ஆம் ஆண்டு நடந்த பேரணியில் பங்கேற்றவர்களைச் சுட்டுக்கொன்ற வழக்கில், ஆயுதக் குழுக்களைச் சேர்ந்த 45 பேருக்கு சாவுத் தண்டனை விதிக்கப்பட்டது. கடாபியின் ஆட்சி அகற்றப்பட்டபின் அங்கு ஒரே சமயத்தில் அதிக மானவர்களுக்கு வழங்கப்படும் சாவுத் தண்டனை இதுதான் என ஏ.எப்.பி. செய்தி முகமை கூறுகிறது. (ம)



# ஆப்கானில் தாக்குதல் 48 அப்பாவிகள் சாவு



காபூல், ஒக. 17

ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூலில் உள்ள பிரபல கல்வி நிறுவனமொன்றுக்கு அருகில் நேற்று நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் 48 பேர் உயிரிழந்தனர்.

இதுகுறித்து ஆப்கானிஸ்தான் உள்துறை அமைச்சகத்தின் தரப்பில், "ஆப்கான் தலைநகரம் காபூலின் மேற்குப் பகுதியில் சியா முஸ்லிம்கள் அதிகளவில் வசிக்கும் பகுதிக்கு அருகில் உள்ள கல்வி நிறுவனத்தில் தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. பொதுமக்களை கொல்லவேண்டும் என்பதை நோக்காகக் கொண்டு இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. 48 பேர் உயிரிழந்தனர். மேலும் பலர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். எந்த ஆயுதக் குழுவும் தாக்குதலுக்குப் பொறுப்பேற்கவில்லை (நேற்று மதியம் வரை). ஆனால் தலிபான்கள் இதில் தொடர்பு பட்டிருக்கலாம் என்று நம்புகின்றோம்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூல் தலிபான்களால் அண்மைக்காலமாக தொடர்ந்து இலக்கு வைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

# கிறது கேரளா

புதுடெல்லி, ஒக். 17

சமீப காலமாகப் பெய்துவரும் கன மழையால் கடந்த 50 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு கடுமையான வெள்ள இடருக்கு முகம் கொடுத்துள்ளது கேரள மாநிலம். தொடர் மழை மற்றும் அணைகளிலிருந்து வெளியாகும் தண்ணீர் காரணமாக கண்ணூர், கோழிக்கோடு மலப்புரம், வயநாடு உள்ளிட்ட மாவட்டங்கள் வெள்ளத்தில் மிதக்கின்றன. அத்துடன் பல இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டு உயிரிழப்புகள் அதிகரித்து வருகின்றன. வெள்ளம், நிலச்சரிவு போன்ற இடர்களால் நேற்றுமுன்தினம் மட்டும் 25 பேர் உயிரிழந்தனர். ஒட்டுமொத்தமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 65ஆக அதிகரித்தது.

இடுக்கி, முல்லைப்பெரியாறு அணைகளில் இருந்து திறக்கப்பட்ட தண்ணீர் கொச்சி பன்னாட்டு வானூர்தி நிலையத்தைச் சூழ்ந்துள்ளது. ஓடுபாதை மற்றும் சுற்றுவட்டார இடங்கள் அனைத்தும் நீரில் மூழ்கி உள்ளதால் வானூர்தி நிலையம் 18ஆம் திகதி வரை மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# மம்மி செய்வது எப்படி?

கெய்ரோ, ஒக. 17

பண்டைய எகிப்தைச் சேர்ந்த பதப்படுத்தப்பட்ட மனித உடலான 'மம்மி' ஒன்றை ஆராய்ச்சி செய்ததில், உடல்களைப் பாதுகாக்க பயன்படுத்தப்பட்ட பொருள்கள் என்னவென்று கண்டறியப்பட்டுள்ளன.

கி.மு. 3500-3700 ஆண்டுகளுக்கு முந்தைய மம்மி ஒன்றை ஆராய்ச்சி செய்ததில் எள்ளில் இருந்து எடுக்கப்பட்டதாக கருதப்படும் எண்ணெய், கோரைப்புற்களின் வேர்களில் இருந்து எடுக்கப்பட்ட சாறு, வேல மரப் பிசின் மற்றும் பைன் மரத்தில் இருந்து எடுக்கப்பட்டதாகக் கருதப்படும் பிசின் ஆகியன உடல்களை மம்மிகள் ஆக்கப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்று ஆய்வாளர்கள் தெரிவித்தனர். (ம)





## விக்கிபீடியாவில் இடம்பெற்ற இம்ரான் கானின் நாய்க்குட்டிகள்

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் இம்ரான் கான் தலைமை அமைச்சர் வேட்பாளராக நின்று அமோக வெற்றி பெற்றார். விரைவில் தலைமை அமைச்சராக அவர் பொறுப்பேற்கவுள்ளார். இந்த நிலையில். அவர் வீட்டு நாய்க்குட்டிகள், கோழிக்குஞ்சுகள், பசுக்கள் மற்றும் எருமைகள் குறித்து இணையத் தகவல் கலைக்களஞ்சியமான விக்கிபீடியாவில் கட்டுரை ஒன்று இடம்பெற்றுள்ளது. இதில் அவற்றின் பெயர். அவை வளர்க்கப்பட்ட காலம் ஆகியவையும் உள்ளன. இதற்குமுன் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினின் செல்லப் பிராணிகள் பற்றி விக்கிபீடியாவில் ஒரு கட்டுரை உள்ளமை குறிப்பிடத்தக்கது.

### 3 மொழிகளில் படமாகிறது

## ஜெயலலிதாவின் வாழ்க்கை



தமிழகத்தின் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் வாழ்க்கை வரலாறு தமிழ்.தெலுங்கு. ஹிந்தி என மூன்று மொழிகளில் படமாக இருக்கிறது.

தமிழக அரசியலின் மிகப்பெரிய தலைவர்களுள் ஒருவரான ஜெயலலிதா. முதல்வராக இருந்ததற்காக மட்டுமல்லாமல். ஆணாதிக்க அரசியல் களத்தில் கம்பீரமான ஒரு பெண்ணாக நின்று உலகெங்கும் உள்ள பெண்களுக்கு மிகப்பெரிய ஊக்கத்தை அளித்ததற்காகப் போற்றப்படுபவர்.

தமிழில் பல்வேறு வெற்றிப் படங்களை தந்த இயக்குநர் விஜய் இந்தப் படத்தை இயக்குகிறார். தென்னிந்தியாவின் முதன்மை நட்சத்திரங்களுடன். பிரபல பாலிவுட் நட்சத்திரங்களும் இந்தப் படத்தில் நடிக்க உள்ளனர்.

## twitter



சிலந்தி™@nandhu_twitts

இயந்திரத்திற்கு "தேய்"மானமும்..
மனிதனுக்கு "அவ"மானமும்..
காலத்தைப் பொறுத்தே அமைகிறது..!!



Lakshmanan.P@laksh_kgm

இறக்காமல் இருக்க ஒரே வழி:
பிறக்காமல் இருப்பதுதான்!



கோழியின் கிறுக்கல்!!

அடிபட்டவனின் அனுபவம் பயமாகவும்,
வென்றவனின் அனுபவம் திமிராகவும்
பார்க்கப்படுகின்றது!!!



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேஷம்:** சுய மதிப்பைச் சோதிக்கும் விதமாக சிலர் பேசுவர். தொழில், வியாபாரத்தில் போட்டியை சரிசெய்வீர்கள் பணவரவை விட செலவு அதிகரிக்கும்.

**இடபம்:** கடந்த கால அனுபவம் நல்ல படிப்பினையை தரும். தொழில்சார்ந்த அனுகூலத்தை பாதுகாப்பது நல்லது. இலாபம் சுமார். பெண்களுக்கு திடீர் செலவால் சேமிப்பு கரையும்.

**மிதுனம்:** பணிகளில் குளறுபடி ஏற்படலாம் கவனம். தொழிலில் உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைச் சந்திப்பர்.

**கடகம்:** நண்பர்களிடம் மனம் விட்டு பேசி மகிழ்வீர்கள். வாழ்வில் வளம் பெற புதிய வாய்ப்பு உருவாகும். தொழில், வியாபார இலக்கு எளிதில் பூர்த்தியாகும்.

**சிங்கம்:** மற்றவர் அவதூறு கருத்துக்களை பொருட்படுத்த வேண்டாம். கூடுதல் உழைப்பினால் தொழிலில் வருமானம் உயரும். பணியாளர் பணி விஷயமாக வெளியூர் செல்வர்.

**கன்னி:** பிறர் நலனில் அக்கறை கொள்வீர்கள். நல்லவர் அறிமுகத்தால் நன்மை காண்பீர்கள். தொழில் வியாபாரத் தொடர்பு பலம் பெறும்.

**துலாம்:** மனதில் தன்னம்பிக்கை மேலோங்கும். இடையூறுகளை சமயோசிதமாக சரி செய்வீர்கள். தொழிலில் உற்பத்தி விற்பனையின் அளவு அதிகரிக்கும்.


**விருச்சிகம்:** எதிர்கால நலனில் அக்கறை கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி சுமாராக இருக்கும். திடீர் செலவால் சேமிப்பு பணம் கரையும்.

**தனுசு:** குடும்பத்தேவையை நிறைவேற்ற தாமதமாகலாம். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற கூடுதல் முயற்சி தேவை. மிதமான பணவரவு கிடைக்கும். ஆரோக்கியம் சீராக இருக்கும்.

**மகரம்:** மனதில் மகிழ்ச்சியும் தன்னம்பிக்கையும் உருவாகும். தொழில், வியாபாரம் செழித்து திட்டமிட்ட இலக்கை அடைவீர்கள். இலாபம் கூடும்.

**கும்பம்:** குடும்பப் பிரச்சினையை பேசித் தீர்ப்பது நல்லது. பணிகளில் கூடுதல் கவனம் தேவை. தொழில், வியாபாரத்தில் சீரான முன்னேற்றம் ஏற்படும். ஓரளவு வருமானம் கிடைக்கும்.

**மீனம்:** மற்றவர் விஷயத்தில் தலையிடாமல் இருப்பது நல்லது. தொழில் வியாபார நடைமுறை தாமதகதியில் இயங்கும். இலாபம் சுமாராக இருக்கும்.




## மூத்த தேவி

ஒருவரை நாம் திட்டும் போது. மூதேவியே என்கிறோம். எதிர்மறை சக்திக்கு உதாரணமாக மூதேவியை நாம் குறிப்பிட்டாலும், தென்னிந்தியாவில் ஒரு காலத்தில், மூதேவி என்று அழைக்கப்படும் மூத்த தேவி வழிபாட்டுக்கு உரியவளாக இருந்திருக்கிறாள்.

பத்ம புராணத்தின் படி. தேவர்களும் . அசுரர்களும் பாற்கடலைக் கடையும் போது. அதனிலிருந்து வெளிபட்ட ஆலகால விஷத்திலிருந்து பிறந்தவளே மூத்த தேவி என்றும் அதன்பிறகு வெளிபட்ட அமிர்தத்திலிருந்து பிறந்தவள் ஸ்ரீதேவியாகிய லக்ஷ்மி என்றும் தெரிகிறது. ஸ்ரீ தேவியாகிய லக்ஷ்மிக்கு முன் தோன்றியவள் என்பதால், இவள் மூத்த தேவி என்றழைக்கப்படுகிறாள்.


இது தான் பின் நாளில் மூதேவி என்று மாறிவிட்டது என்கிறார்கள். அவளுடைய தோற்றத்தைப் பொறுத்த வரையில், ஆகம நூல்களின் படி மூத்த தேவி, அகோரமான மற்றும் அவலட்சணமான தோற்றத்தை உடையவள் என்றும், காக்கைக் கொடியினை ஏந்தியவள் என்றும் கூறப்படுகின்றாள்.

## சிந்தித்து உணர்வோம்



எனக்குச் சொற்களை மிகவும் பிடிக்கும். அறியப்படாத ஏதோவொரு உலகிலிருந்து அவை தோன்றுகின்றன. வெள்ளி மீன்களைப் போல துள்ளிக்கொண்டிருக்கக் கூடியதும். கூழாங்கற்களைப் போல வடிவேறியதுமான சொற்களைத் தேடி ஓடுகிறேன். ஒரு பழத்தைப் போல அவற்றைத்துடைத்துத் தோல் உரித்துக்கடித்துத்தின்பேன். கடினமான சொற்களை உருக்கிக் குடிப்பேன். பேராசையுடன் சொற்களைப் பிடித்து என் கவிதையில் சேகரித்து வைப்பேன். பிரபஞ்சம் அணுக்களால் அல்ல. சொற்களால்தான் உருவாக்கப்பட்டிருக்கிறது.

கவிஞர் பாப்லோ நெருதா



### ஈகோ

நான் அறிவாளி என்று எனக்குத் தெரியும்.

ஏனெனில் எனக்கு எதுவும் தெரியாது என்று எனக்கு தெரியும்

சாக்ரடீஸ்

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 4 | | 6 | | | 3 | |
| | | 1 | | 3 | 8 | 4 | 5 | |
| | | | | | 2 | | | 7 |
| 2 | | | 7 | | 5 | | 1 | |
| | | | | 9 | | | | |
| | 3 | | 1 | | 6 | | | 9 |
| 9 | | | 3 | | | | | |
| | 8 | 7 | 6 | 5 | | 2 | | |
| | 4 | | | 7 | | 5 | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 8 | 9 | 5 | 4 | 1 | 6 | 2 | 3 |
| 1 | 4 | 2 | 6 | 9 | 3 | 7 | 8 | 5 |
| 6 | 5 | 3 | 2 | 8 | 7 | 4 | 1 | 9 |
| 9 | 6 | 4 | 1 | 2 | 5 | 3 | 7 | 8 |
| 8 | 2 | 1 | 7 | 3 | 9 | 5 | 4 | 6 |
| 3 | 7 | 5 | 8 | 6 | 4 | 2 | 9 | 1 |
| 2 | 1 | 7 | 9 | 5 | 6 | 8 | 3 | 4 |
| 4 | 9 | 6 | 3 | 7 | 8 | 1 | 5 | 2 |
| 5 | 3 | 8 | 4 | 1 | 2 | 9 | 6 | 7 |

நேற்றைய விடை

### நாளை

**18.08.2018**

சனிக்கிழமை

ஆவணி 01

திதி: ஸப்தமி காலை 06.13 வரை
நட்சத்திரம்: விசாகம் மு.இ. 10.42 வரை
சுபநேரம்: 03.05– 04.35 வரை
ராகுகாலம்: 09.05 – 10.35 வரை

**தென்னாலிராமன் வரலாறு**

*சுமார் நானூற்று எண்பது ஆண்டுகளுக்கு முன்னர், இந்தியாவின் ஆந்திர மாநிலத்தில் உள்ள ஒரு சிற்றூரில் ஓர் ஏழை அந்தணக் குடும்பத்தில் பிறந்தவன் இந்தத் தென்னாலிராமன் . இளமையிலேயே தந்தையை இழந்த இவன், தாயாருடன் தென்னாலி என்றும் ஊரில் வசித்து வந்த அவனுடைய தாய் மாமன் ஆதரவில் வாழ்ந்து வந்தான். சிறு வயதிலேயே அவனைப் பள்ளிக்கு அனுப்பியும், பள்ளிப் படிப்பில் அவனுக்கு நாட்டம் செல்லவில்லை. இவன் சிறுவயதிலேயே விகடமாகப் பேசுவதில் வல்லமை பெற்றவன். அதனால் அவன் பிற்காலத்தில் 'விகடகவி' என்னும் பெயர்பெற்று பெரும் புகழுடன் விளங்கினான். காளி மகாதேவியின் அருட்கடாட்சம் பெற்றவனெனக் கருதப்படும் இவன், வரலாற்றுப் புகழ் பெற்ற விஜயநகர சாம்ராஜ்யத்தின் அரசன் கிருஷ்ணதேவராயரின் அரண்மனை விகடகவியாக இருந்து மன்னரையும் மக்களையும் மகிழ்வித்தான். அவனுடைய சிறந்த நகைச்சுவைச் செயல்கள் மற்றும் பேச்சுக்களுக்காக மன்னர் அவ்வப்போது ஏராளமான பரிசுகளை அளித்து ஊக்குவித்தார்.*

# குட்டிபோட்ட பாத்திரங்கள்

விஜய நகரத்தில் வட்டித்தொழில் நடத்தும் ஒரு பணக்காரன் மக்களிடம் அநியாய வட்டி வாங்கி வந்தான். அதாவது 100ரூபாவுக்கு ஐம்பது ரூபாய் வட்டி. இதனால் வட்டிக்கு அவனிடம் பணம் வாங்கும் மக்கள் அவதியுற்றனர். இந்த விடயத்தை அறிந்த தென்னாலிராமன் அந்த அநியாய வட்டிக்காரனைத் திருத்தத் திட்டம் தீட்டினான்.




அந்த அநியாய வட்டிக்காரன் சமையல் பாத்திரங்களையும் வாடகைக்கு விடுவதுண்டு. ஒருநாள் தென்னாலிராமன் அவனிடம் சென்று தன் வீட்டில் நடைபெறும் விசேடத்துக்கு சமையல் பாத்திரங்கள் வாடகைக்குத் தரும்படி கேட்டான். அவனும் பாத்திரங்களைத் தென்னாலிராமனுக்கு கொடுத்தனுப்பினான். சிலநாள் கழித்து தென்னாலி பெரியபாத்திரங்களோடு சில சிறிய பாத்திரங்களையும் சேர்த்துக் கொடுத்தான்.

இதைப் பார்த்த வட்டிக்காரன் "நான் பெரிய பாத்திரங்களைத் தானே கொடுத்தேன். சிறிய பாத்திரங்களைக் கொடுக்கவில்லையே! அவற்றையும் ஏன் கொடுக்கிறாய்" என்று கேட்டான். அதற்கு தென்னாலி "உமது பெரிய பாத்திரங்கள் குட்டி போட்டன" என்று கூறி குட்டிப்பாத்திரங்களையும் சேர்த்துக்கொடுத்தான். அப்போது வட்டிக்காரன் இவன் சரியான வடிகட்டின முட்டாளாக இருப்பான் என எண்ணி "ஆமாம் நான் உன்னிடம் பெரிய பாத்திரங்களைக்கொடுக்கும் போது அவை சினைப்பட்டு (கர்ப்பமாக) இருந்தன. ஆதலால் தான் அவை குட்டி போட்டுள்ளன" என்று கூறி அனைத்துப் பாத்திரங்களையும் பெற்றுக்கொண்டான்.

சில மாதங்கள் கழித்து தன்வீட்டில் மற்றொரு விசேடம் இருப்பதாகவும், அதற்கு மன்னரும் அரச பிரதானிகளும் கலந்துகொள்ள இருப்பதாகவும் அதற்கு தங்கப் பாத்திரங்களும் வெள்ளிப் பாத்திரங்களும் வேண்டும்" என்று அந்த வட்டிக்காரனிடம் தென்னாலிராமன் கேட்டான். தென்னாலியின் குணத்தை முன்பே அறிந்திருந்த வட்டிக்காரன், பொன் வெள்ளிப் பாத்திரங்களை அவனிடம் கொடுத்து" இவை இப்போது கர்ப்பமாக இருக்கின்றன. விரைவில் குட்டிபோட்டு விடும். திரும்பவரும்போது அந்தக் குட்டிகளையும் சேர்த்துக்கொண்டு வா" என்றான்.


"சரி" என்று கூறிச் சென்ற தென்னாலிராமன் மீண்டும் பாத்திரங்களைத் திருப்பித் தர வரவேயில்லை. இதனால் கோபமடைந்த வட்டிக்காரன் தென்னாலியிடம் சென்று ஏன் பாத்திரங்களை இன்னும் திருப்பித் தரவில்லை" என்று கோபமாகக் கேட்டான். அதற்கு தென்னாலி "சொன்னால் நீங்கள் வருத்தப்படுவீர்கள் என்று தான் தங்களை நான் பார்க்கவரவில்லை. பாத்திரங்கள் கர்ப்பமாக இருந்ததால் பிரசவம் கஷ்டமாக இருந்தது. இதனால் அனைத்து பாத்திரங்களும் இறந்து விட்டன" எனத் தெரிவித்தான். இதனைக் கேட்ட வட்டிக்காரன் தன்னைத் தென்னாலி ஏமாற்றுவதாகச் சத்தமிட்டான். தென்னாலியோ, "பாத்திரங்கள் குட்டி போடும் போது அவை ஏன் இறக்க மாட்டா? எனக் கேட்டான். "சரி வா மன்னரிடம் முறையிட்டு அவர் தீர்ப்புப்படியே செய்வோம்" என்று கூறி அரண்மனையை நோக்கி நடந்தான்வட்டிக்காரன். தென்னாலியும் அவனது பாசாங்கு நடவடிக்கையை அறிந்து அவனை அரசரிடம் அழைத்துச் சென்றான். பின்னர் மக்களிடம் அவன் அநியாய வட்டிவாங்குவதாகவும் அதனைத் திருத்துவதற்காகவே தான் அந்த உத்தியைக் கையாண்டதாகவும் தென்னாலி முறையிட்டான். எல்லா விவரங்களையும் கேட்டறிந்த மன்னர் "பாத்திரங்கள் குட்டிபோட முடியுமென்றால், அவை பிரசவத்தின்போது ஏன் இறக்கக் கூடாது? உன்பேராசைக்கு இது ஒருபாடம். இனிமேலாவது மக்களிடம் நியாயவட்டி வாங்கு"என புத்திமதி கூறி அவனை அனுப்பிவைத்தார். தென்னாலி ராமனின் புத்தி சாலித்தனத்தை மன்னர் மனமாரப்பாராட்டி பரிசுகளை வழங்கினார்.



## நான் ஒரு பறவையானால்...


- நான் ஒரு பறவையாக உருமாற நினைக்கிறேன். இந்த உலகம் அழகானது. அதனைச் சுற்றிப் பார்க்க எனக்கு ஆசையாக உள்ளது.
- இதோ எனக்கு அழகான பட்டுப்போன்ற சிறகுகள் முளைக்கின்றன.
- இப்போது எனது சிறகுகளை விரிக்கின்றேன்.
- கால்களை உள்ளிழுத்துப் பறக்கிறேன்.
- என் பார்வை என் கால்களுக்குக் கீழேசெல்கிறது.
- எனக்குக் கீழ் உலகம் அற்புதமாக இருக்கிறது.
- மரக்கிளைகளைக் கோதித் துளைக்கிறேன்.
- கனிகளை எனது கூரிய அலகினால் கோதி உண்கிறேன்.
- எனக்கு அழகிய தோகைபோன்ற வால் இருக்கிறது.
- பறக்கும்போது வாலை அசைத்தால் வேண்டிய பக்கம் போகலாம்.
- எனது அலகினால் சுள்ளிகளை எடுத்துக் கூடு கட்டுகிறேன்.
- சமைக்கத் தேவையில்லை.
- காசு பணம் தேவையில்லை.
- சொத்துச்சுகம் எனக்குத் தேவையில்லை.
- என் உற்றார் உறவினர்களுடன் பாடிப்பறக்கிறேன்.
- வானில் சிறகடித்துப் பறப்பது அற்புதமானது.
- போட்டி பொறாமையில்லாத உலகத்தில் பறக்கிறேன்.
- அதிகாலையில் எழுந்து விடுவேன்.
- உண்பதும் உல்லாசமாய் வாழுவதுமே எமது வாழ்க்கை
- சொத்துச் சேர்தது வைக்கத் தேவையில்லை.
- அன்றன்றைய உணவை இறைவன் எமக்களிக்கிறார்.
- களவு,பொய், வஞ்சகம், சூது இல்லாத வாழ்க்கையை அனுபவிக்கிறேன்.
- நீங்களும் பறவையாகி என்னுடன் இணைந்துகொள்ளுங்கள்.

## இரு படங்களுக்கும் இடையே 05 வேறுபாடுகள் உள்ளன; கண்டுபிடியுங்கள்




## படம் பார்த்து பெயர் எழுதுவோம்


____________


____________


____________


____________

## சிந்தனைக்கு

- நீ எதிர்பார்த்த நேரம் இன்னும் வரவில்லை என்பதற்காக கடிகாரத்தைக் கோபித்துக் கொள்ளாதே.
- சுவரில் ஆணி அடித்து படத்தை மாட்டி விட்டாய் என்பதோடு திருப்தி அடைந்து விடாதே.
- அடித்த அணி துருப்பிடிக்காமல் இருக்கிறதா என்பதை அடிக்கடி பார்த்துக்கொள்.
- எப்படி வாழ்ந்தாய் என்பது முக்கியம் தான். ஆனால் அதைவிட முக்கியமானது இப்பொழுது எப்படி வாழ்ந்து கொண்டிருக்கிறாய் என்பதாகும்.
- கற்றுக்கொள்ள வேண்டியது முக்கியம். அதைவிட முக்கியமானது கற்றுக்கொண்டதைக் கடைப்பிடித்து நடப்பது.
- குப்பையைத் தூக்கி எறியும் பொழுது அது உன்னிடம் திரும்பி வராத இடத்தில் தூக்கி ஏறி
- உனது வாழ்க்கை வண்டி மெதுவாக நகர்வதும், வேகமாகச்செல்வதும், அந்த வண்டியில் பூட்டியுள்ள உனதுசெயல்கள் என்னும் மாடுகளைப் பொறுத்திருக்கிறது.
- தெருவில் கிடக்கும்பொருள்களையெல்லாம் வேண்டாத பொருள்கள் என்ற முடிவுக்கு வருவது தவறு. சிலரால் தவறவிடப்பட்ட பொருள்களும் தெருவில் கிடக்கலாம்.
- தடைகளைக் கண்டு கலங்காதே. தடைகளில் தான் உனது வீரமும், தியாகமும், மனப்பக்குவமும், உயர்ந்த நோக்குகளும் வளர்கின்றன.



# தொல்லையும் துன்பமும் தூர விலக பரந்தாமன் மெய்யழகைப் பாடுவோம்

இ.உமணகேனன்

யாழ்ப்பாணம், வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் பொன்னாலை எனும் நகரில் கோயில் கொண்டு எழுந்தருளி வேண்டு வார்க்கு வேண்டும் வரங்களை தந்தருளி அருளாட்சி புரிகின்ற பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலய விளம்பி வருட மஹோற்சவம் இன்று கொடியேற்றத்திருவிழாவுடன் பக்தி பூர்வமாக ஆரம்பமாகிறது.

### மகோற்சவம்

திருவருளின் பெருமையும் , வரலாற்றுச் சிறப்பும் ஒருங்கே அமையப்பெற்ற திருமால் ஆலயங்களுள் ஒன்றாக பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயம் ஈழமணித் திருநாட்டில் விஷ்ணு பக்தியை மகத்துவம் செய்கிறது. சைவ ஆலயங்களின் தோற்றம் மற்றும் பெருமைகள் குறித்து பேசுகின்ற தட்சணாகைலாய புராணத்தில் இவ்வாலயத்தின் தோற்றம் பற்றியும், மகிமை பற்றியும் கூறப்பட்டுள்ளது.

கருவறையில் ஸ்ரீ வரதராஜப்பெருமான் ஸ்ரீதேவி, பூமிதேவி சமேதராய் எழுந்தருளி அடியவர்களுக்கு காட்சி தருகிறார். பொன்னாலை வரதராஜப்பெருமாள் ஆலயத்தில் ஆவணி மாதத்தில் வருகின்ற ஸ்ரீ கிருஸ்ணஜெயந்தியை முன்னிறுத்தி 19 நாள்களும், மார்கழியில் வருகின்ற ஏகாதசியை முன்னிறுத்தி 10 நாள்களுமாக இரண்டு மகோற்சவ பெருவிழாக்கள் வருடம் தோறும் இடம் பெற்று வருகின்றன.

### வரலாறு

முன்னொரு காலத்தில் துருவாச முனிவரின் சாபம் பெற்ற தெய்வேந்திரன் நீசத்தன்மையை அடைந்தான். இந்த சந்தர்ப்பத்திலே இந்திரன், "ஓ பகவானே...! அத்திரி முனிவரின் குலத்தில் பிறந்தாய், நான் செய்த பிழையை பெறுத்தருள்க.

> கருவறையில் ஸ்ரீ வரதராஜப் பெருமான் ஸ்ரீதேவி, பூமி தேவி சமேதராய் எழுந்தருளி அடியவர்களுக்கு காட்சி தருகிறார். பொன்னாலை வரதராஜப்பெருமாள் ஆலயத்தில் ஆவணி மாதத்தில் வருகின்ற ஸ்ரீ கிருஸ்ணஜெயந்தியை முன்னிறுத்தி 19 நாள்களும், மார்கழியில் வருகின்ற ஏகாதசியை முன்னிறுத்தி 10 நாள்களுமாக இரண்டு மகோற்சவ பெருவிழாக்கள் வருடம் தோறும் இடம் பெற்று வருகின்றன.

எனது சாபம் நீங்க ஒரு உபாயம் கூறியருள்க..?" என துருவாச முனிவரை வேண்டி நின்றான். இந்திரனால் பிரார்த்திக்கப்பட்ட முனிவருள் மேலானவராகிய துருவாச முனிவரும் இந்திரனின் வேண்டுதலை ஏற்றுக்கொண்டார். பின்பு இந்திரனை அழைத்து துருவாசமுனிவர் பின்வருமாறு விழித்துக் கூறினார். "உன் சாப விமோசன காரியத்தில் நீ துக்கம் அடைய வேண்டும். சேது மத்தியில் இருக்கும் இலங்கையில், யாழ்ப்பாணத்திலே பொன்னாலை எனும் அழகிய நகரிலே வலைஞர் குலத்திலே பிறப்பாய். ஜனார்த்தராகிய வாசுதேவர் ஒரு காலத்தில் கூர்ம அவதாரம் எடுப்பார். அந்தக் கூர்ம அவதாரம் உன் வலையினாலே கட்டப்படும். இது மெய். அந்த ஆமையின் அங்கம் தீண்டப்பட்டவுடன் நீ சாபத்திலிருந்து விடுபடுவாய்." என்றார்.



அவ்விதமே வலைஞராகப் பிறந்த இந்திரன், ஒரு நாள் தற்போது ஆலயம் அமைந்திருக்கும் பகுதிக்கு அருகாமையிலுள்ள கடலில் வலையை வீசினான். அவன் மேற்கொண்ட முயற்சியின் பயனாக வலையில் ஓர் ஆமை அகப்பட்டது. ஆனாலும் கடலில் வீசிய வலையை தனித்து கரைசேர்க்க முடியவில்லை. தனது உறவினர்களை நாடிச் சென்று அவர்களையும் உதவிக்கு அழைத்து வந்தான். என்ன ஆச்சரியம்!, வந்தவர்கள் அனைவருமே அந்த அதிசயத்தைக் கண்டு திகைத்தனர். ஆகாயத்திலே ஓர் பொன்னொளி வீசும் விமானம் தென்பட்டது.

அதனைக் கண்டு வியந்ததுடன் ஆமையின் பக்கம் சென்றார்கள். அங்கும் ஓர் அதிசயத்தைக் கண்டு திழைத்தனர். ஆமை கல்லாக மாறியிருந்தது. பக்தியின் வழி நாராயணனே அந்த விமானமாக வந்தவர் என்பதை உணர்ந்துகொண்டவர்களாக அந்தண சிவாச்சாரியாரைக் கொண்டு நாராயணரை பிரதிட்டை செய்தார்கள். அக்கோயிலே வரதராஜப் பெருமாள் ஆலயம் என்று எல்லோராலும் அழைக்கப்பட்டு வருகிறது.

அந்தக் கல்லாமை தற்போதும் ஆலயத்தின் கற்பக்கிரகத்தில் காணப்படுகிறது. மூல விக்கிரகத்துக்கு தீப ஆராதனை மேற்கொள்ளப்பட்டதன் பிற்பாடு கல்லாமைக்கும் தீப ஆராதனை செய்கின்ற வழக்கம் இன்றுவரை தினமும் இடம் பெற்று வருகிறது. அதேபோன்று விஷ்ணுவின் திருவடிச்சுவடு அவ்விடத்திலே இருக்கின்றது. இது மிகவும் பரிசுத்தமானது. இதற்கு திருவடிநிலை என பெயர் குறிப்பிடுகின்றனர்.

### அருள் சிறப்பும் அற்புதங்களும்

மிகப் பழமையான காலத்தில் ஆன்மிகச் சிறப்போடு தோன்றிய இவ்வாலயம் சரித்திர காலத்தில் சீரும் சிறப்பும் உடையதாகவும், ஸ்ரீமன் நாராயணனின் அருள் பிரவா கிக்கும் மகிமை உடையதாகவும் விளங்கியது. பல திருப்பணிகள் புரிந்தவனும் பல குளங்களை தன் ஆட்சிக் காலத்தில் கட்டுவித்தவனுமான குளக்கோட்டன் பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயத்துக்கும் பல திருப்பணிகளை செய்துள்ளான். தமிழ் நாட்டில் உள்ள ஸ்ரீரங்கத்தைப் போலவே பொன்னாலையிலும் ஏழு வீதிகள், கோபுரங்கள் அமைத்து ஆன்மிகத் திருப்பணியை குளக்கோட்ட மன்னன் செய்தான் என்று ஆன்றோர்கள் குறிப்பிடு கின்றனர். இதற்குப் பல சான்றுகள் இன்றும் உள்ளன. ஏழாம் வீதியில் ஆலயத்துக்கு செல்லும் பாதையில் அமையப் பெற்றுள்ள விநாயகர் ஆலயம் தற்போதும் அருள் சிறப்போடு விளங்குகின்றது.

அந்நியர் ஆட்சிக் காலத்தில் இவ் வீதிகள் உடைக்கப்பட்டு யாழ்ப்பாணத்தில் பல கோட்டைகள் அமைக்கப்பட்ட கதையாடல்களும் உண்டு. இதற்குச் சான்றாக பல தடயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

ஆயிரக்கணக்கான அடியவர்கள் ஆலய வீதியை நூற்றெட்டுமுறை வலம் வந்து அற்புதமான அனுபவங்களையும், அருள்கடாட்சத்தையும் பெற்றுள்ளனர். ஒருமுறை வட்டுக்கோட்டையைச் சேர்ந்த தம்பதியர் பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலய திரு வீதியை 107 தடவைகள் பக்தியோடு வலம் வந்து நூற்றெட்டாவது முறை வீதி வலம் வந்தபோது கருடன் தாழப் பறந்து தன் இறக்கையால் ஆசிர்வதித்த அற்புதம் நிகழ்ந்தது. தவிர ஆலயத்தில் விசேட திருவிழாக்கள் இடம்பெறும் நாளில் வானத்தில் கருடன் வலம்வந்து அடியவர்களுக்கு அருள் காட்சி கொடுப்பது வழமை.

### அருளாசி வேண்டுவோம்

ஆம், தசா அவதாரங்களுள் இரண்டாவதாகச் சொல்லப்படுகின்ற 'கூர்ம அவதார' சேத்திரமாக விளங்கும் பொன்னாலப் பதியினிலே ஸ்ரீதேவி,பூமிதேவி சமேத ஸ்ரீ வரதராஜப்பெருமாள் இன்று கொடியேற்றத் திருவிழா காணவுள்ள தன்மை அற்புதமானது. தனை நாடிவரும் பக்தர்களின் வல்வினைபோக்கி அருள்கூறும் பாங்கு தனித்துவமானது. இந்த மண்ணிலே எல்லோரும் இன்புற்றிருந்திட எம்பெருமான் அருளாசி நல்குவாராக. மனிதப்பிறவி எடுத்ததன் பயனை அனுபவிக்க நல்வரம் அருள்வாராக.

*கட்டுரையாளர் : விரிவுரையாளர்,யாழ் பல்கலைக்கழகம்.*



## நல்லூர் கந்தன் 2ஆம் நாள் திருவிழா

## நல்லைக் கந்தனே எழுந்தருள் புரியடா!

நல்லூரில் கொடியேற்றம் நாராயணன் மருமகனுக்கு
கோட்டையில் இருப்பவனே!
அப்பனே முருகா அலங்காரக் கந்தா!

எமை வாட்டுகின்ற துன்ப துயரங்கள் தனை
அழைத்தே எடுத்துரைக்க உன் திரு வடியை நாடி வருகிறோம்
விளம்பிதனில் வரோதயனே எங்களுக்காய்
எழுந்தருள் புரிகிறாய்!
அஞ்சேல் என்றே அபயகரம் உயர்த்தி
அணைத்தே காப்பதற்காய் மெய்யன்பை மொழிகிறாய்!
கலியுகத்து வேந்தே கண்கண்ட தமிழ் கிழவே
வலிகள் கொஞ்சமல்ல ஆறுதல் கூற திருவீதி உலவுகிறாய்!
இருபத்தைந்து நாள்கள் பக்தியாய் திருத்தொண்டு ஆற்றுகிறோம்
மகிழ்வோடு நாம் வாழ்ந்திட பன்னிரெண்டு கண்கள்
திறந்து திருவருள் தாருமய்யா!

*மீசாலையூர் கமலா*

## காணி விற்பனைக்கு

அரியாலை கிழக்கில் வயற்காணியும். மானிப்பாய் இராஜகாரியர் வீதியில் தென்னந்தோட்டம் 8 ½ பரப்பும் விற்பனைக்குண்டு.

076 223 0696, 077 633 6853

## வேலையாள்கள் தேவை

மாவிட்டபுரத்தில் இயங்கும் விவசாயப் பண்ணைக்கு வேலையாள்கள் தேவை.

உணவு, தங்குமிட வசதி உண்டு.

077 172 6583

## மாபெரும் வீதி ஓட்டப் போட்டி



கனகபுரம் படித்த வாலிபர் மேட்டுநிலக் குடியேற்றத்திட்ட 60ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடத்தப்படும்

சமூக் சேவையாளர் காலஞ்சென்ற சி.கனகேந்திரம் அவர்கள் ஞாபகார்த்த

**ஆண், பெண்களுக்கான மாபெரும் வீதி ஓட்டப்போட்டி**

காலம் :- 22.08.2018

நேரம் :- காலை 6.00 மணி

இடம் :- கனகபுரம் விளையாட்டுக் கழக மைதானம்

கிளிநொச்சி மாவட்டத்தில் நிரந்தரமாக வசிக்கும் 15 வயதுக்கு மேற்பட்ட வீர வீராங்கனைகள் அனைவரும் பங்குபற்றலாம். (தேசிய அடையாள அட்டை, குடும்ப பங்கீட்டு அட்டை, செல்லுபடியான மருத்துவச் சான்றிதழ் அறிக்கை ஆகியவற்றுடன் வருகை தரவும்)

1 ஆம் பரிசு ரூபா 10,000/-

2 ஆம் பரிசு ரூபா 7,000/-

3 ஆம் பரிசு ரூபா 5,000/-

**4,5,6 ஆம் இடங்களுக்கு தலா 1000.00 ரூபா வீதம் பரிசில்களும் 10 இடங்களுக்குட்பட்டவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படும்**

யோட்டிக்கான அனுசரணை
திரு.கனகேந்திரம் இளவழகன்

60ஆவது ஆண்டு விழாச் சபை, கனகபுரம்.
077 048 9488

## தேர்தல் ஆணைக்குழு

**"உண்மையான சனநாயகம் வாக்குரிமையில் தங்கியுள்ளது"**

**வாக்களிப்பதற்கு வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டிருத்தல் கட்டாயத் தேவைப்பாடொன்றாகும்**

**உங்களுக்குத் தெரியுமா?**

- 2018 வாக்காளர்களைக் கணக்கெடுக்கும் நடவடிக்கைகளின் ஆரம்பப் பணிகள் தற்பொழுது முடிவடைந்துள்ளன.
- அதற்குரிய ஆவணங்கள் 2018 ஒகஸ்ட் மாதம் 10 தொடக்கம் செப்டம்பர் 06 ஆம் திகதி வரையில் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் காட்சிப்படுத்தப்படும்.
- உங்கள் பெயர் வாக்காளரொருவராகப் பதிவு செய்யப்பட்டுள்ளதாவெனப் பரிசீலித்துப்பார்த்துப் பதிவு செய்யப்படவில்லையாயின் உரிமைக் கோரிக்கை சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
- தகைமை இல்லாதவொருவர் ஏதேனும் வீடொன்றின் கீழ் பதிவு செய்யப்படுவதற்காக கணக்கெடுக்கப்பட்டிருப்பின் உங்களுக்கு ஆட்சேபனைகளைச் சமர்ப்பிக்கவும் முடியும்.

**உரிமைக் கோரிக்கை சமர்ப்பிப்பது அல்லது ஆட்சேபனை தெரிவிப்பது எவ்வாறு?**

- விண்ணப்பப் படிவங்களை மேற்குறிப்பிடப்பட்ட காட்சிப்படுத்தும் இடங்களிலிருந்து பெற்றுக்கொள்ளவும். தேருநர் இடாப்புகளையும் இவ்விடங்களில் பரிசீலித்துப் பார்க்கவும் முடியும்.
  - ஒவ்வொரு மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்
  - ஒவ்வொரு பிரதேச செயலகம்
  - ஒவ்வோர் உள்ளூராட்சி நிறுவனம்
  - ஒவ்வொரு கிராம அலுவலர் அலுவலகங்கள்

தேர்தல்கள் ஆணைக்குழுவின் www.elections.gov.lk என்ற இணையத்தளத்தினூடாக, 2018 தேருநர் இடாப்பில் தங்களது பெயர் பதிவதற்காக கணக்கெடுக்கப்பட்டுள்ளதா என்பதை பரிசீலித்துப் பார்க்க முடியும். அதற்காக தங்களுடைய தேசிய அடையாள அட்டை இலக்கத்தையும், மாவட்டத்தையும் குறித்த நிகழ்ச்சித் திட்டத்தில் உட்சேர்த்தல் அவசியமானதாகும்.

- உங்கள் விண்ணப்பப் படிவத்தை உரிய விதத்தில் பூர்த்தி செய்து 2018 செப்டம்பர் மாதம் 6 ஆம் திகதிக்கு முன்னதாக உரிய மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தில் ஒப்படைக்கவும்.

தொலைபேசி 011 - 286 8441.42.43
மின்னஞ்சல் info@elections.gov.lk
இணையத்தளம் www.elections.gov.lk

தேர்தல் ஆணைக்குழு,
சரண மாவத்தை.
இராஜகிரிய.
2018.08.17

**மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களின் தொலைபேசி இலக்கங்கள்**

| | | | |
|---|---|---|---|
| கொழும்பு மாநகர | 011 - 287 2247 | அம்பாந்தோட்டை | 047 - 225 6248 |
| குருநாகல் | 037 - 222 2369 | கொழும்பு மாவட்ட | 011 - 286 7472 |
| யாழ்ப்பாணம் | 021 - 222 2655 | புத்தளம் | 032 - 226 5246 |
| கம்பஹா | 033 - 222 2047 | கிளிநொச்சி | 021 - 228 5664 |
| அனுராதபுரம் | 025 - 222 2551 | களுத்துறை | 034 - 222 2266 |
| மன்னார் | 023 - 222 2289 | பொலன்னறுவை | 027 - 222 2012 |
| கண்டி | 081 - 223 3187 | வவுனியா | 024 - 222 2311 |
| பதுளை | 055 - 222 2424 | மாத்தளை | 066- 222 2422 |
| முல்லைத்தீவு | 021 - 206 1426 | மொனராகலை | 055 - 227 6315 |
| நுவரெலியா | 052 - 222 2325 | மட்டக்களப்பு | 065 - 222 4312 |
| இரத்தினபுரி | 045 -222 2023 | காலி | 091 - 223 4028 |
| அம்பாறை | 063 - 222 4342 | கேகாலை | 035 - 222 2561 |
| மாத்தறை | 041 - 222 2305 | திருகோணமலை | 026 - 222 2304 |

**சரியாகப் பதிவு செய்வதன் மூலம் வாக்களிக்க முடியுமென்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளவும்.**



ஊர்காவற்றுறை - கரம்பொன் கிழக்கு

## வட்டுவில் முருகமூர்த்தி கோயில்

**விளம்பி வருஷ அலங்கார உற்சவ விஞ்ஞாபனம் - 2018**

### உற்சவ கிரியாகால நேர நிகழ்வுகள்

**அலங்கார உற்சவம் :-** ஆவணித் திங்கள் 2 ஆம் நாள் (18.08.2018) சனிக்கிழமை ஆரம்பமாகி ஆவணித் திங்கள் 11 ஆம் நாள் (27.08.2018) திங்கட்கிழமை வரையும் நடைபெறும்.

| | |
|---|---|
| உதயகால பூசை | காலை 8.30 மணி |
| கும்ப பூசை | காலை 9.00 மணி |
| விசேட பூசை | பகல் 10.00 மணி |
| வசந்த மண்டப பூசை | பகல் 11.00 மணி |
| மகேஸ்வர பூசை ( அன்னதானம் ) | பகல் 12.00 மணி |
| சாயரட்சைப் பூசை | மாலை 6.30 மணி |
| வசந்த மண்டபப் பூசை | இரவு 7.00 மணி |
| வீதி உலா | இரவு 8.00 மணி |

**வேல் உண்டு வினை தீர்க்க மயிலுண்டு எமைக்காக்க**

கரம்பொன்

ஆலய பரிபாலன சபையினரும் விழா உபயகாரரும்


## மரண அறிவித்தல்

பிறப்பு 1931 12 31



இறப்பு 2018 08 16

## திருமதி. கமலாம்பாள் ராஜரத்தினம் (ராணி)

சுதுமலையை பிறப்பிடமாகவும் வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி.கமலாம்பாள் ராஜரத்தினம் அவர்கள் 16.08.2018 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி. சின்னத்துரையின் மகளும், காலஞ்சென்ற திரு. ராஜரத்தினத்தின் மனைவியும், காலஞ்சென்ற திரு.திருமதி தம்பிமுத்துவின் மருமகளும்,தம்பிமுத்து (ரவி), ஜெயந்தி (கீதா), ஆனந்தி, தமயந்தி, சாந்தி ஆகியோரின் அன்பு தாயாரும், காலஞ்சென்ற சிவதாஸ் மற்றும் பூர்னிமா (நீனா), தனயராஜன், தெய்வேந்திரன் ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்றவர்களான செல்வராஜா, சோதிநாதன்,மகேஸ்வரி, லீலாவதி, பத்மநாதன், புவனேஸ்வரி, பாக்கியலக்ஷ்மி, கண்மணி மற்றும் பத்மாவதி ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான நீதிராஜா (செனட்டர்), மகேஸ்வரி மற்றும் விஜயரத்தினம் ஆகியோரின் மைத்துனியும், ஜயந்தன், அஜந்தன், பிரசாந், தரனீதரன், தியாகர், திவ்யா, ஆரத்திக்கா, அர்சுனராஜ் ஆகியோரின் அன்பு பாட்டியும், கவீசனின் அன்பு பூட்டியும் ஆவார்.


**18.08.2018 சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் அஞ்சலிக்காக ஜெயரட்டின மலர்ச்சாலையில் Respect Home (பௌத்தலோக மாவத்தை) வைக்கப்பட்டு, 19.08.2018 ஞாயிற்றுக்கிழமை இறுதி கிரியைகள் நடைபெறும். மதியம் 12 மணி அளவில் பொரள்ளை இந்து மயானத்தில் பூத உடல் தகனம் செய்யப்படும்.**

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: மகள் - ஜெயந்தி (கீதா) : No.12/5/1, Victoria Courts, Arethusa Lane, Colombo-06. Tel: 077 9024060 / 011 2361036

ஓம் விராட் விஸ்வ பிரமனே நமஹா

# 12 ஆம் ஆண்டு நினைவஞ்சலியும்



தோற்றம்
20 . 08 . 1958

மறைவு
14 . 08 . 2006

## அமரர் சுப்பையா இரத்தினம் ஆச்சாரி

திதி: சஷ்டி வளர்பிறை

ஆண்டுகள் பன்னிரெண்டு நகர்ந்து மறைந்திடினும்
ஆறுமோ வெந்துயர் அன்பு அப்பாவே!
மாண்டு விடவில்லை நீங்கள் எம்மனங்களில்
மறையாது என்றும் வாழ்கிறீர்கள் - எம்
உயர்வுக்கு உன்னத வழிகாட்டி வாழ்வை
அர்ப்பணித்து பாசத்தின் தீபமே!
உங்கள் நினைவு எங்கள்
நெஞ்சங்களில் என்றும் நிலைத்து வாழும்

188/01, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
077 510 5619 / 077 989 8119

குடும்பத்தினர்.

---

# ஈரவிழிகளுடன் 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில்
24 . 08 . 1940



மரியின் மடியில்
17 . 08 . 2008

## அமரர் திருமதி பிலோமினா வின்சன் டீபோல்

பிறந்து மடியும் இவ்வுலகில்
ஆண்டுகள் பத்து ஆகிவிட்டதம்மா
நீர் எம்மை பிரிந்து சென்று – ஆனாலும்
எம்மனம் நம்ப மறுக்கின்றது – நீர்
எம்முடன் இல்லை என்று

எம் வாழ்வில் ஒளியேற்றிய எம் அன்பு
அன்னையே
இறைவனிடம் தானே அடைக்கலமானாய்
மன்றாடுவோம் என்றும் உமக்காக – நீர்
நித்தியத்தில் என்றும் இளைப்பாற.

அழிவதுண்டு உலகமது மறைவதில்லை உம் நினைவு
வாழ்வில் உம்மை நேசித்தோம் – அம்மா
மரணத்திலும் உம்மை மறவோம்
சத்தியத்தின் பிறப்பிடமாய் பண்பின் உறைவிடமாய்
அன்புக்கு இலக்கணமாய் வாழ்ந்தீரே அம்மா



அன்னாரின் ஆத்மா சாந்திக்காக இன்று (17.08.2018) வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு பருத்தித்துறை புனித தோமையார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

" உயிர்ப்பும் உயிரும் நானே என்னிடம்
நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வர் "

கடற்கரை வீதி,
பருத்தித்துறை.

(CS/19052)(11)

நினைவில் வாழும்
குடும்பத்தினர்.

---

# நெஞ்சைவிட்டகலா 13 ஆம் ஆண்டு நினைவலைகள்



## அமரர் தவராசா சுகந்தன்

(முன்னாள் காசாளர் - நகராட்சி மன்றம், வல்வெட்டித்துறை)

திதி:- சப்தமி

தோற்றம்
28.05.1978

உலகத்தின் மகிழ்ச்சிகளை
உவகையோடு தந்தவனே!
குடும்பத்தின் மகிமைக்காய்
உழைத்த குலவிளக்கே
சட்டென்று வந்து சென்ற
சூறை உன்னைக் களவாடியதே
பதின்மூன்றாண்டுகள் நிமிடமாகின
பதிந்த உன் நினைவுகள் புதிதாகின
சுகந்தா நீயெமக்கு என்றும்
இகத்தினில் காக்கும் குலதெய்வமே
வணங்கி நிற்கின்றோம்



மறைவு
13.08.2005

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

திகழ் அகம்
89/2, பலாலி வீதி,
திருநெல்வேலி.

அண்ணா - சுதன்
மனைவி , மகன்

## முதலாம் ஆண்டு நினைவில்



தோற்றம்
21.02.2000

மறைவு
28.08.2017

அமரர் செல்வன்
**சின்னத்தம்பி நாகசுலோஜன்**

திதி - 17.08.2018

உயிர் என்று உணர்கையில் உரு ஒன்று தெரிகையில்
என் உயிராய் சுமந்தேன் - அன்று
நீ உணர்வற்று கிடக்கையிலே
எந்தன் உயிர் மூச்சு வாடுது ஐயா ! - இன்று
உன் ஆத்ம சாந்திக்காக என்றும்
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

முருகன் வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

என்றும் உன் நினைவுகளுடன் :
குடும்பத்தினர்.

---



## EYE CARE OPTICAL

இன்று (17.08.2018) வெள்ளிக்கிழமை
முற்பகல் 10.00 மணியளவில் புதிய கிளை திறக்கப்படுகின்றது

### ஐ கெயார் ஒப்டிக்கல்

வைத்தியசாலை முன்பாக, குடியிருப்பு, வவுனியா.

புதிதாக திறந்து வைக்கப்படுகின்றது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்

சகல விதமான மூக்குக் கண்ணாடிகளும் விற்பனைக்கு உண்டு.

கிளைகள்:
இல. 38, பஸ்நிலையம், வவுனியா,
இல. 55, பஸ்நிலையம், வவுனியா,
தண்ணீரூற்று, முள்ளியவளை, முல்லைத்தீவு.

077 571 7676

---

மேலும் மேம்படுத்தப்பட்ட

கொஸ்கந்தவல

## ஜீவக வாத தைலம்

- முதுகு வலி
- முழங்கால் வலி
- ஆர்த்தரைட்டிஸ்
- மூட்டு வலி
- தசைப்பிடிப்பு
- நரம்புசார் வலிகள்

Jeewaka Herbal Products (Pvt) Ltd
0777 322 574

---

## வீட்டுக்கு வந்து கற்பித்தல்

ஆங்கிலம் - சகல தரங்களுக்கும்
கலை/வர்த்தக பாடங்கள் A/L வரை
(ஆங்கில மொழிமூலம்)
077 331 6402

---

## காணவில்லை



ம. குகேந்திரன் என்பவரை
கடந்த 06.08.2018 இல்
இருந்து யாழ்ப்பாணத்தில்
காணவில்லை.
இவர் பற்றிய தகவல்
தெரிந்தவர்கள்
அறியத்தரவும்.
தொடர்பு - 076 2515 027

---

## கடை வாடகைக்கு

நவாலி அரசடிச்சந்தியில் புதிதாக அமைக்கப்பட்ட 03 கடைகள் உடன் வாடகைக்கு கொடுக்கப்படும்.
களஞ்சியமாகவோ காட்சியறையாகவோ பாவிக்கலாம்
077 627 5185 / 021 225 5493

---

## Dialog MEGA அதிஷ்டம்

சனிக்கிழமை
இரவு 7.56 க்கு
சக்தி TV
ஊடாக

### வெற்றியாளர்கள்

ரூ 10 இலட்சம் சுப்பர் பரிசு வெற்றியாளர்
W.H.G. உடரந்த - பேராதெனிய

S.D. அலவத்துகே
மருதானை

T. ஜெனிதாஜ்
பருத்தித்துறை

K.A.G.T. பிராசதினி
காலி

M.N.A. நவ்பர்
கொட்டாஞ்சேனை

### இந்த வாரத்தின் சுப்பர் பரிசு ரூ. 10,000,000/-

இது வரை பரிசுகளை வென்ற வெற்றியாளர்கள்
- இரண்டு கோடி வென்ற வெற்றியாளர் ஒருவர்
- ஒரு கோடி வென்ற 17 வெற்றியாளர்கள்
- 20 இலட்சம் வென்ற 9 வெற்றியாளர்கள்
- 10 இலட்சம் வென்ற 140 வெற்றியாளர்கள்
- ஒரு இலட்சம் வென்ற 860 வெற்றியாளர்கள்

மேலும் பல இலட்சம் வெற்றியாளர்கள்

அதிகதிகமாக ரீலோட் செய்யுங்கள்
#121# டயல் செய்து உங்களுடைய வெற்றி இலக்கங்களை பெற்றுக்கொள்ளுங்கள்

Dialog
an axiata company
www.dialog.lk
எதிர்காலம் இன்றே.

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
**பொன்னையா சிவசுதன்**

(ஆசிரியபணி சேவை - யா/ மீசாலை வீரசிங்கம் கல்லூரி,
யா/ நுணாவில் அமிர்தாம்பிகை வித்தியாலயம்

பிறப்பு
26.04.1968

இறப்பு
18.07.2018

திதி:- ஷஷ்டி

உன் அழகான இளமைத் தோற்றமும் புன்னகை
பூத்த முகமும் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் உயரிய பண்பு கண்டு
உன்னைப் படைத்த இறைவனே உனது வாழ்நாள்களைக் குறைத்து உன்
உயிர் கவர்ந்து தன்னடியில் சேர்த்துக் கொண்டார்
உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

பலாலி வீதி, உரும்பிராய்.

உன்னுடைய பிரிவால் துயருறும் :
மைத்துனர்.

---

## மரண அறிவித்தல்



### திருமதி செல்வமணி சிவநாதன்

48, விதானையார் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வமணி சிவநாதன் 14.08.2018 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சிவஞானம் - தங்கம் தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிவநாதனின் அன்பு மனைவியும், Sivagiri (Commercial Bank - Retired), Selvakumar (Newzealand), Sooriyakumar (Australia) ஆகியோரின் அன்புத் தாயாரும், Dunstan Prince (SLT - Batticola), Malathi (Newzealand), Rohini (Australia) ஆகியோரின் அன்பு மாமியாரும், Dilan (HSBC), Roschelle (Commercial Bank - Colombo), Vithusha, Vishala, Joyhylin, Jenita ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 19.08.2018 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11 மணியளவில் துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

48, விதானையார் வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

தகவல்
பிள்ளைகள்.

சிவாஜினி - 075 082 8308, 021 222 2607

## 5 ஆம் ஆண்டு நினைவு நாள்



மலர்வு 24.03.2002 உதிர்வு 13.08.2013

செல்வி

**ரவீந்திரன் ஹேமாவதி**

திதி – ஸப்தமி

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்



### திருமதி இராசம்மா சுப்பிரமணியம்

கேசரி வீதி, தையிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தாவடியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா சுப்பிரமணியம் நேற்று (16.08.2018) வியாழக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான வைரப்பிள்ளை - இலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான குருநாதர் - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, பாலகிருஷ்ணன் மற்றும் புவனேஸ்வரி, சிவஞானசுந்தரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான ஆச்சிமுத்து, செல்லத்துரை, பொன்னம்மா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (17.08.2018) வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியளவில் அவரின் தாவடி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுதுமலை வீதி,
தாவடி வடக்கு, கொக்குவில்.

தகவல்:
க.சிறீதரன்

021 222 6905/ 077 563 3355 (உ12914)



### நடராசா ஜெயராசா (ஜெயம் அண்ணை)

சரசாலையைப் பிறப்பிடமாகவும், இல. 71, சிவிக்சென்ரர் வட்டுக்கச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட ஜெயம் அண்ணை என அழைக்கப்படும் நடராசா ஜெயராசா நேற்று (16.08.2018) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா மற்றும் கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சண்முகநாதன் இரத்தினம் தம்பதியரின் அன்புமருமகனும் காலஞ்சென்ற தங்கராணியின் அன்புக் கணவரும் நிதர்சனா (யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடம்), குமேதினி (யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவபீடம்), சண்ஜீவராஜா ஆகியோரின் அன்புத்தந்தையும் S.N. செல்வராசா (ஓய்வுபெற்ற விவசாயப்பாட விதான உத்தியோகத்தர்), குலராசா (சட்டவாளர், லண்டன்), ஞானராசா (லண்டன்), ஜெயவதனி (லண்டன்), பகிதராசா (சிவிக்சென்ரர்) ஆகியோரின் அன்புச்சகோதரரும் தங்கேஸ்வரி, நிற்றாராணி (லண்டன்), பவானி (லண்டன்), வெற்றிவேல் (லண்டன்) ஆகியோரினதும் கதிர்காமநாதன் (கனடா), ஸ்ரீஸ்கந்தராசா (ஜேர்மனி), செல்வராணி (நெதர்லாந்து), காலஞ்சென்றவர்களான இந்திராணி, அருந்தராணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் விபூசனா, ஜதீசனா, சோபனா, சஞ்சீவன், அஞ்சலா, கேப்பிறியன், பிரணவன், பிரணவி, அபிரனா, மதுசனா ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் பாவனா, கவானா, ஆகாஸ், விகாஸ், நிகாஸ் ஆகியோரின் அன்புமாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (17.08.2018) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல தகனக்கிரியைக்காக பன்னங்கண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுகொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

## தமிழ்...

பெரும் சவாலாக அமைவோம். இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை நிராகரிப்பதற்கு இங்கிலாந்திலுள்ள போர் விவகாரங்களுடன் தொடர்புபட்ட நிபுணர்களின் ஆலோசனைகளைப் பெற்றுள்ளோம்.

இவ்வாறு உலகளாவிய தேசப்பற்றுள்ள இலங்கையர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

அந்த ஒன்றியம் ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் சந்திப்பு பொரளை என்.எம்.பெரேரா நிலையத்தில் நேற்று நடைபெற்றது. அந்த அமைப்பின் தலைவர் வசந் கீர்த்திரத்ன அதில் கருத்துத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 38ஆவது அமர்வில் கலந்து கொண்டிருந்தோம். எமது நாட்டுக்கு எதிராக புலம்பெயர் தமிழ் அமைப்புகள் எந்தளவு கெடுபிடிகளை மேற்கொண்டிருந்தார்கள் என்பதை அவதானிக்க முடிந்தது.

மனித உரிமைகள் சபை அமர்வில் கலந்து கொண்ட யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களைச் சேர்ந்த அமைப்புகள் இராணுவத்துக்கு எதிராகப் பொய்க் குற்றச்சாட்டுகளை முன்வைத்திருந்தன.

நாட்டிலுள்ள சகல மக்களும் நாட்டின் இறைமையையும் நாட்டையும் பாதுகாப்பதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும். மாறாக நாட்டையும் பாதுகாப்புத் தரப்பினரையும் காட்டிக்கொடுக்கும் நிகழ்ச்சி நிரலுக்குள் சிக்கிக்கொள்ள வேண்டாம் எனக் கேட்டுக்கொள்கிறோம்.

இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படவில்லை என்பதை நிரூபிப்பதற்கு இங்கிலாந்திலுள்ள போர் விவகாரங்களுடன் தொடர்புபட்ட நிபுணர்களின் ஆலோசனைகளைப் பெற்று நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

கடந்த அமர்வுகளின்போது விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்கள் 130 பேரை விடுவிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. அவர்களை விடுதலை செய்யக்கூடாதென நாம் கோரிக்கை முன்வைத்தோம். அந்த உறுப்பினர்களை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இலங்கைக்கு எதிராகக் குற்றச்சாட்டுகளை முன்வைக்கும் புலம்பெயர் தமிழ் அமைப்புகளிலுள்ள பலருக்கும் இலங்கைக்குமிடையில் எவ்வித தொடர்புமில்லை. தமிழ்நாட்டிலிருந்து வரும் சிலர் இலங்கைக்கு எதிரான பலமான குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றனர் - என்றார். (ரு-5.61)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மனோன்மணி சரவணமுத்து



யாழ். நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும், வவுனியா கனகராயன்குளத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மனோன்மணி சரவணமுத்து கடந்த (15.08.2018) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை சின்னம்மா தம்பதிகளின் அன்புமருமகளும், காலஞ்சென்ற சரவணமுத்துவின் அன்புமனைவியும், மகேஸ்வரி (மகேஸ், கனகராயன்குளம்), நடராசலிங்கம் (நடா, லண்டன்), றஞ்சனா (றமா, பிரான்ஸ்), பகீரதன் (ரதன், பிரான்ஸ்), வதனா (பாமா, வவுனியா குறிசுட்டகுளம் அ.த.க பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், நவரத்தினராசா (கனகராயன்குளம்), லோகேஸ்வரி (லண்டன்), ஜெயானந்தன் (பிரான்ஸ்), குகதர்சினி (பிரான்ஸ்), லக்சுமிகாந்தன் (காந்தன், அதிபர், முருகானந்தா வித்தியாலயம் ஆலங்குலம் வவுனியா) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம் (லிங்கம், கனகராயன்குளம்), செல்லம்மா மற்றும் குமாரசாமி (குமார், கற்சிலைமடு), அன்னலட்சுமி (லட்சுமி, நெடுந்தீவு), திலகவதி (குஞ்சு, ஸ்கந்தபுரம்), செகராச சிங்கம் (ராசன், மலேசியா) ஆகியோரின் பாசமிகுசகோதரியும், காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை செங்கமலம், நாகம்மா, கார்த்திகேசு, பார்வதிப் பிள்ளை மற்றும் வைத்திலிங்கம் (கனகராயன்குளம்) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், அருணோதயன் (அருண், லண்டன்), அஸ்வினி (லண்டன்), அருட்ராம் (லண்டன), அபிதா (பிரான்ஸ்), சுரேக்கா (பிரான்ஸ்), தருண் (பிரான்ஸ்), தனுஸ் (பிரான்ஸ்), அனோஜினி (பிரான்ஸ்), அனோஜன் (பிரான்ஸ்), அபிஷன் (இலங்கை), அட்சயன் (இலங்கை), அம்சவி (இலங்கை) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (17.08.2018) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பி.ப ஒரு மணியளவில கனகராயன்குளம் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுகொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
காந்தன் (பாமா, இலங்கை)
077 236 5654



பிறப்பு 20 09 1933 — இறப்பு 13 08 2018

### திருமதி அரியமலர் பாலச்சந்திரமூர்த்தி

**(அட்டாச்சி A.B மூர்த்தி அம்மா, ஓய்வு பெற்ற ஆசிரியை, யாழ். மத்திய கல்லூரி)**

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, கனடா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அரியமலர் பாலச்சந்திரமூர்த்தி கடந்த (13.08.2018) திங்கட்கிழமை Scarborough வில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பாத்துரை கனகம்மா தம்பதியரின் ஏகபுதல்வியும் கதிர்வேலு மனோன்மணி தம்பதியரின் அன்புமருமகளும் காலஞ்சென்ற பாலச்சந்திர மூர்த்தியின் அன்புமனைவியும் குகமினி (Toronto) காலஞ் சென்ற ஷியாமளன் (New Jersey), உமாமினி (Toronto), நிமலன் (Vancouver) ஆகியோரின் அன்புத்தாயும் ஜெயக்குமார் (Toronto), ஷர்மிளா (New Jersey), ரத்னராஜா (Toronto), சுகர்ணா (Vancouver) ஆகியோரின் அன்பு மாமியும் ஷிவோங்கரி, சாய்ஷரண், சாய்ஷங்கரி, ஹரிஷ்ணா, கிருஷ்ணா ஆகியோரின் அன்பு அம்மம்மாவும் ஷிவேதா, ஷாயிதா, தாட்ஷாயினி ஆகியோரின் அன்பு அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.08.2018) சனிக்கிழமை பி.ப. 5 - பி.ப 9 Chapel Ridge Funeral Home, 8911 Woodbine Ave. Markham ON L3R 5 G1, Canada. பின்னர் (19.08.2018) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 8 - மு.ப. 9.30 Chapel Ridge Funeral Home, 8911 Woodbine Ave. Markham ON L3R 5 G1, Canada பார்வைக்கு வைக்கப்பட்டு பின்னர் நண்பகல் 12 மணியளவில் Highland Hills 12492 Woodbine Ave, Gormley, ON L0H 1 Go, Canada எனும் முகவரியில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிள்ளைகள்:
குகமினி (+14163999214),
நிமலன் (+14169387863),
உமாமினி (+14167684082)

தகவல்:
குடும்பத்தினர்.


## கார் விற்பனைக்கு

Nissan B11 13 - xxxx

கார் விற்பனைக்கு.


தொடர்பு - 077 6688 927






# வியாபாரப் பொருள்கள் இறக்குமதி மீதான செலவினங்கள்

**வியாபாரப் பொருள்கள் இறக்குமதி (ஆண்டு அடிப்படை)**




**வியாபாரப் பொருள்கள் இறக்குமதி ( மாதாந்த அடிப்படை)**




*தகவல் மூலம்: இலங்கை மத்திய வங்கி, இலங்கை சுங்கம்*

## கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்கள் அதிகரித்துள்ளன

### *ஜீன் மாத உற்பத்தியில் 0.4 வீதமாகப் பதிவு*

2017 ஆம் ஆண்டு ஜீன் மாத உற்பத்திகளுடன் ஒப்பிடுகையில் நடப்பாண்டின் ஜீன் மாத உற்பத்திச் செயலாற்றுகையில் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் அளவீடு 0.4 வீதத்தால் அதிகரித்துள்ளது.

இந்த தகவலை தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரப் பணிப்பாளர் நாயகம் அமர சதரசிங்க வெளிப்படுத்தியுள்ளார்.

**கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் (2015=100)**

| மாதம்/ ஆண்டு | சுட்டெண் பெறுமதி |
|---|---|
| ஜுன் - 2017 | 104.4 |
| ஜுன் - 2018 | 104.8 |
| | |
| வருடத்தின் வருட மாற்றம் (%) 0.4 | |
| | |
| 2018, 2ஆம் காலாண்டு – 102.7 | |

2017 ஆம் ஆண்டு ஜீன் மாத மாதாந்த உற்பத்தி கொள்ளளவுடன் ஒப்பிட்டு நோக்குமிடத்து, நடப்பாண்டின் ஜீன் மாத உற்பத்திக் கொள்ளளவில், 'கோக் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள்', 'வடிவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள்', 'துணிவகை உற்பத்தி' என்பன முறையே 33.7 வீதம், 19.1 வீதம் மற்றும் 15.6 வீத வளர்ச்சியை காட்டுகின்றன.

நடப்பு வருடத்தின் ஜீன் மாத உணவு உற்பத்தி 0.8 வீத அதிகரிப்பை வெளிக்காட்டுகின்றது.

தவிர, நடப்பு வருடத்தின் ஜீன் மாதத்தில் கைத்தொழில் துறையில் உள்ளடங்கும், 'கடதாசி மற்றும் கடதாசி உற்பத்திகள்', 'மின் உபகரண உற்பத்திகள்', 'அடிப்படை மருந்துப் பொருள் மற்றும் மருந்தாக்கல் உபகரணங்கள்' என்பன முறையே 27.4 வீதம், 24.0 வீதம் மற்றும் 18.1 வீத வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளன.

உற்பத்தி கைத்தொழில்களில் 2017 ஆம் ஆண்டு இரண்டாம் காலாண்டு உற்பத்திச் செயலாற்றுகையுடன் ஒப்பிடுகையில் நடப்பாண்டின் இரண்டாம் காலாண்டுக்குரிய உற்பத்திச் செயற்பாடு 0.6 வீத அதிகரிப்பை வெளிக்காட்டியுள்ளது. (ஓ)

## பணவீக்கம் அதிகரித்துள்ளது

### *நாணயக் கொள்கை மீளாய்வு அறிக்கையில் மத்தியவங்கி சுட்டிக்காட்டு*




நடப்பாண்டின் பெப்ரவரி மாதம் தொடக்கம் ஜீன் மாத காலப்பகுதி வரை குறைந்த ஒற்றை இலக்கங்களில் தொடர்ந்தும் காணப்பட்ட ஆண்டுக்காண்டு முதன்மைப் பணவீக்கமானது எதிர்பார்க்கப்பட்டவாறு கடந்த ஜீலை மாதத்தில் அதிகரித்துள்ளது.

உள்நாட்டுப் பெற்றோலிய விலைகளின் மேல்நோக்கிய திருத்தங்கள், தளம்பலடையும் உணவுப் பொருள்களின் விலைகள் அதிகரித்தமை மற்றும் தளத்தாக்கம் என்பவற்றிலிருந்து அண்மைக்காலத்தில் தோன்றிய தற்காலிக விலை அழுத்தங்கள் போன்றனவே இதற்கான முதன்மைக் காரணங்களாக அமைந்துள்ளன.

இந்தத் தகவல்களை நாணயக் கொள்கை மீளாய்வு அறிக்கையில் மத்தியவங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும் இது குறித்து விளக்கமளித்துள்ள மீளாய்வு அறிக்கை,

"பணவீக்கமானது நடப்பாண்டின் மூன்றாம் காலாண்டு காலப்பகுதியின் இறுதிக் காலப்பகுதியில் அறுவடையின் தாக்கம் காரணமாக குறைவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. நிலையான உள்ளார்ந்த பணவீக்கமானது உறுதியான பணவீக்க எதிர்பார்ப்புகளுடன் இணைந்து மட்டுப்படுத்தப்பட்டுள்ள கூட்டுக்கேள்வி அழுத்தங்களை குறித்துக் காட்டுவதுடன் நடுத்தரகாலத்தில் நடு ஒற்றை இலக்கப் பணவீக்கம் தொடர்பில் ஆதரவளிக்கின்றது.

நாணய விரிவாக்கம் தொடர்ந்தும் படிப்படியாகக் குறைவடைகின்றது. உள்நாட்டுப் பணச் சந்தையில் நிலவுகின்ற மிகையான திரவத்தன்மை நிலமைகளுக்குப் பதிலிறுத்தும் வகையில் குறுங்கால வட்டி வீதங்கள் கீழ் நோக்கி சீராக்கமடையத் தொடங்கியுள்ளன. முதலாம் தர மற்றும் இரண்டாம் தர சந்தைகள் இரண்டிலும் அரச பிணையங்கள் மீதான விளைவுகள் அண்மைக் காலங்களில் வீழ்ச்சியடைந்துள்ளன. இத்தகைய அபிவிருத்திகளுடன் இசைந்து செல்லும் வகையில், ஏனைய சந்தை வட்டி வீதங்களும் குறிப்பாக கடன் வழங்கல் மீதான வட்டி வீதங்கள் இனிவரும் அண்மைய காலங்களில் கீழ்நோக்கிச் சீராகும் என்பதுடன் கடன் படுநர்களால் தற்போது எதிர்நோக்கப்படுகின்ற அதிகரித்த உண்மை வட்டி வீதங்கள் குறைவடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

வர்த்தக வங்கிகளால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடனின் வளர்ச்சியானது அதன் விரும்பத்தக்க மட்டங்களை நோக்கித் தொடர்ந்தும் படிப்படியாக குறை வடைந்துள்ளது. தனியார் துறைக்கான கொடுகடன் வளர்ச்சியின் வீழ்ச்சி அதே போன்று வங்கித்தொழில் துறையால் தேறிய அடிப்படையில் அரசுக்கு வழங்கப்பட்ட கொடுகடனின் குறைவு என்பவற்றுடன் இணைந்து நடப்பாண்டின் ஜீன் மாத காலப்பகுதியில் திரண்ட நாணய விரிவாக்கமும் வீழ்ச்சியடைந்துள்ளது. நாணயம் மற்றும் கொடுகடன் விரிவாக்கத்தின் இத்தகைய போக்குகள் நாணய உறுதிப்பாடுகள் மேலும் மேம்படுவதனைக் குறித்துக் காட்டுவதுடன், பொருளாதாரத்தின் எதிர்பார்க்கப்பட்ட நடுத்தர கால வளர்ச்சிப் பாதையுடன் இசைந்து செல்வதாகவும் காணப்படுகின்றது" என்றுள்ளது. (ஓ)


CSE COLOMBO STOCK EXCHANGE

கொழும்பு பங்குப்பரிவர்த்தனை - 147-2/3, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் - 0212221455

பங்குச்சந்தைத் தகவல்கள்

| 15/8/2018 www.cse.lk | | இன்று | நேற்று |
|---|---|---|---|
| சுட்டிகள் | | | |
| ASPI | -26.26 | 6,086.74 | 6,113.00 |
| S&P SL20 | -7.41 | 3,267.75 | 3,275.16 |
| வியாபாரப்புரள்வு | | 238,172,528 | 380,422,944 |
| உள்நாடு:- கொள்வனவு | | 198,148,592 | 122,212,760 |
| விற்பனை | | 72,804,664 | 234,732,416 |
| வெளிநாடு:-கொள்வனவு | | 40,623,940 | 258,210,176 |
| விற்பனை | | 165,367,872 | 145,690,512 |




| கம்பனி அதிகூடிய பங்குப்பரிமாற்றம் | குறியீடு | இறுதிவிலை | பங்குகள் | புரள்வு (Rs) |
|---|---|---|---|---|
| ஜோன் கீல்ஸ் கோல்டிங்ஸ் | JKH.N | 139.9 | 1,106,319 | 154,883,630 |
| கொமர்சியல் வங்கி | COMB.N | 123.5 | 95,105 | 11,877,813 |
| சம்பத் வங்கி | SAMP.N | 280.00 | 24,522 | 6,860,395 |
| சிற்றிசன் டெவலப்மென்ட் பைனான்ஸ் | CDB.N | 80.00 | 71,927 | 5,753,915 |
| டோக்கியோ சிமெண்ட் | TKYO.X | 25.00 | 205,212 | 5,129,779 |
| செலான் வங்கி | SEYB.X | 45.00 | 98,200 | 4,419,673 |
| ஆசிரி ஹோல்டிங்ஸ் | ASIR.N | 24.00 | 105,719 | 2,568,407 |
| அக்ஸஸ் இஞ்சினியறிங் | AEL.N | 15.4 | 127,201 | 1,966,518 |
| டயலொக் | DIAL.N | 14.3 | 130,005 | 1,858,882 |
| அனிலானா ஹோட்டேல்ஸ் அன்ட் ப்(ரொ) | ALHP.N | 1.3 | 1,524,651 | 1,829,371 |

பங்குலாபம் அறிவித்தல்
சேவ்ரோன் லூப்பிரிக்கன் ரூபா 2.25
நீங்கள் எங்கிருந்து கொண்டும் Mobile ஊடாக பங்குவர்த்தகத்தில் இணைந்து கொள்ள வாய்ப்பினை தவறவிடாதீர்கள்.
Call 0777 822 014 / 0777 105 205

| சந்தைக் குறிகாட்டிகள் | |
|---|---|
| கம்பனிகள் | 297 |
| பரிமாற்றத்தில் | 232 |
| விலை உழைப்பு | 9.6 |
| புத்தகப்பெறுமதி | 1.2 |
| பங்குலாப விளைவு | 3.3 |

# போராடினால் ராணுவத்தினரை களமிறக்கவேண்டி ஏற்படும்

## தனியார் பேருந்து சங்கங்களுக்கு அமைச்சர் நிமல் எச்சரிக்கை



போக்குவரத்து ஒழுங்குகளை மீறுவோருக்குஅதிகரித்ததண்டப்பணத்தைவிதிக்கும் சட்டத்தை எவ்வித காரணத்துக்காகவும் விலக்கிக்கொள்ளமாட்டோம். இதற்குஎதிராக தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தினர் போராடுகின்றனர். போராட்டத்தை அவர்கள் கைவிடவில்லையாயின்பொதுமக்களின் நலன் கருதி இராணுவத்தினரைப் பயன்படுத்தி போக்குவரத்துச் சேவை முன்னெடுக்கப்படும்.

இவ்வாறு போக்குவரத்து, சிவில் வானூர்திகள் சேவை அமைச்சர் நிமல்சிறிபாலடி சில்வா தெரிவித்தார்.

அவரது அமைச்சில்நேற்று இடம்பெற்றசெய்தியாளர்கள்சந்திப்பிலேயேமேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஒவ்வொருவருடைய தேவைக்கேற்பவும் நாட்டின் சட்டங்களை மாற்றியமைக்க முடியாது.

தண்டப்பணத்தைக் குறைக்கு மாறு கோரி தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தினர் வேலைநிறுத்த போராட்டத்தில் ஈடுப்பட்டுள்ளமை நியாயமற்றது. மேல் மாகாணம் மற்றும் தென் மாகாணங்களில் மாத்திரம் தண்டப்பணத்தினை குறைக்குமாறு கோரி வேலைநிறுத்த போராட்டதில் ஈடுபட்டுள்ளனர். தண்டப்பணம்அதிகரிப்புஎன்பதுகாலங்காலமாக நடைமுறையில் இருந்து வருவதாகும்.

2005ஆம்ஆண்டுமுதல்கடந்த13ஆண்டுகளாகபோக்குவரத்துஒழுங்குகளைமீறுபவர்களிடம்தண்டப்பணம்அறவிடப்பட்டுவருகின்றது. அதன் அடிப்படையில் பணப்பெறுமதியில் மாற்றம் போன்ற சில விடயங்களை கொண்டுதண்டப்பணத்தினைஅதிகரிப்பதற்கானதேவை ஏறபட்டுள்ளது.

அரசதலைவரினால்இதனைஆராய்வதற்கு குழுவொன்றும் நியமிக்கப்பட்டது. அந்தக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் தண்டப்பண அதிகரிப்புக்கு அமைச்சரவையின் அனுமதி பெற்று 2018ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அரசிதழில் பிரசுரித்திரு ந்தோம். அரசிதழ் வெளியிட்டப்போது எதிர்ப்பினை தெரிவிக்காதவர்கள் தற்போது எதிரப்பினை வெளியிட்டு ள்ளனர். எதிர்ப்புகளுக்காக நாட்டின் சட்டங்களை மாற்றியமைக்க முடியாது-என்றார். (5.31)

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 344
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 60,587,505/-
சீட்டிழுப்பு திகதி: 2018.08.16
வெற்றி இலக்கங்கள்
27 33 53 63 Q

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1492
சீட்டிழுப்பு திகதி 16.08.2018
வெற்றி இலக்கங்கள்
08 35 53 58 J
ரூ 32, 922, 380/=

සංවර්ධන වාසනාව
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் ▸ 169
சீட்டிழுப்பு திகதி ▸ 16.08.2018 நீலம்
ஆங்கில எழுத்து M
வெற்றி இலக்கங்கள் 16 57 59
விதி எண் 06
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ.10, 573, 344/=

ஸ்வர்ண திலின

| | |
|---|---|
| பொலன்னறுவை | 2209971 |
| மன்னார் | 6961323 |
| கேகாலை | 5653043 |
| குருணாகல் | 5710482 |
| களுத்துறை | 3670844 |

2018.08.18 ம் திகதி சனிக் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk

## லண்டனிலிருந்து வந்தவர் நேற்று சடலமாக மீட்பு

சாவகச்சேரி, ஓக. 17

லண்டனிலிருந்துஅண்மையில்வருகை தந்திருந்த64வயதுமூதாட்டிஅவரதுவளவுக்கிணற்றில்சடலமாகமீட்கப்பட்டுள்ளார் இந்தச்சம்பவம்நேற்றையதினம்சாவகச்சேரிசப்பச்சிமாவடியில்இடம்பெற்றுள்ளது.

அதேஇடத்தைச்சேர்ந்தயோகநாதன்புனிதவதி(வயது64)என்பவர்ஆலயவழிபாட்டுக்காக அண்மையில் லண்டனிலிருந்து வந்து தனது வீட்டில் தங்கியிருந்தார் எனவும், அயல்வீடொன்றிலிருந்து இவருக்கு மூன்று வேளை உணவு வழங்கப்பட்டு வந்ததாகவும் ,அவ்வாறே நேற்று மதிய உணவு கொண்டு சென்றவர் வீட்டில் மூதாட்டியைக்காணாததால்தேடிப்பார்த்தபோது ,கிணற்றில் சடலமாக காணப்பட்டார்எனவும்தெரிவிக்கப்பட்டது.

இந்தச்சம்பவம் தொடர்பாக கிராம அலுவலருக்குஅறிவிக்கப்பட்டு, கிராமஅலுவலர் சாவகச்சேரிபொலிஸாருக்குஅறிவித்துள்ளார். சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார், விசாரணைகளை மேற்கொண்ட பின்னர்நீதிமன்றப்பதில்நீதிவான்முன்னிலையில்அறிக்கைதாக்கல்செய்துள்ளனர் எனத்தெரிவிக்கப்பட்டது.

இவரதுபிள்ளைகள்அனைவரும்புலம்பெயர் நாடுகளில் வசிப்பதால் கணவனுடன் லண்டனில்தங்கியிருந்ததாகவும், அங்கு கணவன் சாவடையவே வருடாவருடம் சொந்த இடத்திற்கு வந்து ஆலயங்களில் திருவிழாக்கள் நடைபெறுவதால் அவற்றை பார்த்த விட்டு லண்டன் செல்வார் எனவும் அவ்வாறு அண்மையில் வந்த மூதாட்டி தனது வீட்டில் தங்கியிருந்தார் எனவும்தெரிவிக்கப்பட்டது. (9)

## குடும்ப உறுப்பினர் அல்லாத ஒருவரை வேட்பாளராக மகிந்த களமிறக்குவாரா?

### கேள்வி எழுப்புகிறது ஐ.தே.க.



கொழும்பு, ஓக. 17

அரச தலைவர் வேட்பாளராக மகிந்த அணியின் சார்பில் யாரை முன்னிலைப்படுத்த வேண்டும் என்பதில் அந்தக் கட்சியில் இன்று கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன. தனது குடும்ப உறுப்பினர்களைத் தவிர பிறிதொருவரை அரச தலைவர் வேட்பாளராகமகிந்தராஜபக்சமுன்னிலைப்படுத்து வாரா என்று ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலர்அகிலவிராஜ்காரியவசம் கேள்வியெழுப்பினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, 2020ஆம்ஆண்டுஇடம் பெறவுள்ள அரச தலைவர் தேர்தல்தொடர்பில்அரசதரப்பில் எவ்விதமானகருத்துமுரண்பாடுகளும் இல்லை. பொது எதிரணியின்சார்பில்அரசதலைவர்வேட்பாளராகபோட்டியிடுவதாககோத்தபாய ராஜபக்ச, சமல் ராஜபக்ச, மற்றும் பசில் ராஜபக்ச ஆகியோரைகளமிறக்குவதாகபொது எதிரணியின் உறுப்பினர்கள் தமதுதனிப்பட்டகருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

இவர்கள்மூவர்மாத்திரமாபொது எதிரணியில் அரசியல் ஞானம் உள்ளவர்கள். வேறொருவரும் அரச தலைவர் வேட்பாளராக போட்டியிட முன்வர தயங்குவது ஏன்? 2015ஆம் ஆண்டு குடும்ப ஆட்சியை வீழ்த்தி கூட்டு அரசு ஜனநாயகத்தைநிலைநாட்டியது. இன்றுஅனைத்துவிதமானசுதந்திரமும்மக்களுக்குமுழுமையாக எமது ஆட்சியில்வழங்கப்பட்டுள்ளது. இந்தநிலமைதொடரவேண்டுமாயின் கூட்டு அரசு தொடர வேண்டும். குடும்ப ஆட்சியை மீண்டும்உருவாக்கும்கனவிலே மகிந்த ராஜபக்ச செயற்படுகின்றார். தற்போது ஜனநாயகம் தொடர்பில்மக்கள்மத்தியில்குறிப்பிடுபவர் தனது குடும்ப உறுப்பினர்களை வேட்பாளராக முன்னிலைப்படுத்து வதாகக் குறிப்படப்படும் விடயங்களை புறம்தள்ளிதனது கட்சியின் உறுப்பினரைதான் ஆதரவு வழங்கி களமிறக்குவதாகப்பகிரங்கமாககுறிப்பிடு வாரா? என்று கேள்வி எழுப்பினார். (5.61)

மரண அறிவித்தல்

வேலுப்பிள்ளை நாகலிங்கம்

(மனேச்சர்) (புளியங்கூடல்)



புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை நாகலிங்கம் நேற்று (16.08.2018) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை கண்ணுமணி தம்பதியரின் ஏகபுதல்வனும் காலஞ்சென்றவர்களானதங்கம், அன்னக்குட்டி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற சொர்ணம்மா மற்றும் சந்திரா ஆகியோரின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான அன்னபூரணம், சோமசுந்தரம், குலசிங்கம், பொன்னம்மா, கோணேஸ்வரி மற்றும் நகுலாம்பிகை, தேவராணி சுந்தலிங்கம், சிவநாதன், செல்வநாயகம், ஜானகி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.08.2018) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் புளியங்கூடல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : சி. சிவாஸ்கரன்
(பெறாமகன்)
077 7729127

## தென்னிலங்கை...

கடந்ததிங்கட்கிழமை இரவு, நாயாற்றில்தமிழ்மீனவர்களின் 8 வாடிகள் எரியூட்டப்பட்டிருந்தன. அங்கு தங்கியிருந் தென்னிலங்கை மீனவர்கள் மீது தமிழ் மீனவர்கள் சந்தேகம் வெளியிட்டிருந்தனர். இந்தச் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தில் தென்னிலங்கையைச் சேர்ந்த 3 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இந்த விவகாரம் தமிழ் சிங்கள இனரீதியான மோதலாக மாறும் சூழல் ஏற்பட்டிருந்தது.

வடக்கு மாகாண மூத்த பொலிஸ் அத்தியட்சகர் கணேசநாதன், நாயாற்றில் தங்கியிருந்த தமிழ் சிங்கள மீனவர்களை நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார்.

சிங்கள மீனவர்கள் வெளியேறவேண்டும் என்று வலியுறுத்தியிருந்த தமிழ் மீனவர்கள், தமது பாதிப்புக்கான இழப்பீடு அவர்களிடமிருந்து பெற்றுத்தரப்பட வேண்டும் என்றும் கோரியிருந்தனர்.

இந்தநிலையில், நாயாற்றிலிருந்து தென்னிலங்கை மீனவர்கள் நேற்று மாலை தமது பொருள்களை மூட்டை முடிச்சாகக் கட்டிக் கொண்டு, படகுகளையும் ஏற்றிக் கொண்டு அங்கிருந்து வெளியேறினர். அப்போது இரு தரப்பினரிடையேயும் முரண்பாடு ஏற்படும் சூழல் காணப்பட்டது. அதனால் ஆயுதம் தாங்கிய பெருமளவு பொலிஸார் அங்கு குவிக்கப்பட்டனர். வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனும் அங்கு பிரசன்னமாகியிருந்தார். (ற-5.ரி3)

## ரவிராஜ்ுக்கு...

திறப்பதற்கு நேற்று மாலை 4.30 மணிக்கு சுகாதார அமைச்சர் ராஜித அங்கு சென்றார். குருதி சுத்திகரிப்பு நிலையத்தை திறந்து வைக்க முன்னர் சாவகச்சேரி பிரதேச செயலக முன்றலுக்குச் சென்ற அமைச்சர் ராஜித அங்குள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜின் உருவச் சிலைக்கு மலர் அஞ்சலி செலுத்தினார்.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் கே.சயிந்தன் , சாவகச்சேரி நகரசபை தவிசாளர் திருமதி சிவமங்கை, சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர் க.வாமதேவன் உட்படப் பலர் அமைச்சருடன்சென்றனர். (ற-5.9.159)

# வீட்டின் முன் நின்ற கார் தீப்பிடித்து எரிந்து நாசம்

## ஆனைக்கோட்டையில் சம்பவம்



யாழ்ப்பாணம், ஓக 17

வீட்டுக்கு முன்பாக நிறுத்தப்பட்டிருந்த கார் திடீரெனத் தீப்பிடித்து எரிந்தது. தீயைக் கட்டுப்படுத்தியபோதும் கார் முற்றாக எரிந்து நாசமானது. இந்தச் சம்பவம் நேற்று இரவு ஆனைக்கோட்டையில் நடந்துள்ளது.

ஆனைக்கோட்டையில் வசிக்கும் மருத்துவர் காரில் வெளியேசென்றுவிட்டு வந்து காரை வீட்டுக்கு வெளியே நிறுத்திவிட்டுச் சென்றுள்ளார். திடீரெனத் தீப் பிடித்துக் கார் எரிந்துள்ளது. அயலர்கள் சேர்ந்து தீயை அணைக்க முயன்றுள்ளனர். அது பயனளிக்கவில்லை.

யாழ்ப்பாணம் மாநகர சபை தீயணைப்புப் பிரிவினருக்கு இது தொடர்பாக அறிவிக்கப்பட்டது. அவர்கள் சம்பவ இடத்துக்கு வந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். எனினும் கார் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

பொலிஸாருக்கு இந்தச் சம்பவம் தொடர்பில் அறிவிக்கப்பட்டது. அவர்கள் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ந-8)

## அரசமைப்பு...

தார். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 3 அபிவிருத்தித் திட்டங்களை நேற்று அமைச்சர் ஆரம்பித்தார். அதன்பின்னர் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்தாவது

இனப் பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வருவதற்கு அனைத்துக் கட்சிகளும் சம்மதம் தெரிவித்துள்ளன. அதற்காக புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டியுள்ளது. அதைச் செய்வது மிக இலகுவான காரியம் அல்ல. இனங்களுக்கிடையிலான வெறுப்புணர்வுகளுக்கு இடமளிக்காது பிரச்சினைகளைப் பேசித் தீர்ப்பதற்கு அனைவரும் பிரதான அரசியல் நீரோட்டத்தில் இணைந்து கலந்துரையாடலுக்கு முன்வர வேண்டும்.

2015ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட எமது அரசு வடக்கில் கூடிய கவனம் செலுத்தியிருந்தது. தமிழ் மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதற்காகவே நாம் கூடிய கவனமெடுத்தோம். இதுவே எமது கொள்கை. நாம் முன்னைய அரசு போல அல்ல.

30 ஆண்டுக்குப் பின்னரான அபிவிருத்தி இந்தப் பகுதிக்கு தேவை என்பதனால் சுகாதாரத் துறையை பொறுத்தவரையில் அனைத்து உதவிகளையும் வழங்கி வடக்கைக் கட்டியெழுப்பியுள்ளோம். உதவிகளை வழங்குவதனூடாக இந்த மாகாணத்தினையும் ஏனைய மாகாணத்தை போல அவற்றின் தரத்துக்கு கொண்டு வருவதே எமது நோக்கம்.

வடக்கிலுள்ள பிரச்சினைகளை கையாள்வது தொடர்பாக நாம், ஏற்கனவே உங்களுக்கு சுதந்திரத்தையும், உரிமையையும், சுயாதீனமான செயற்பாட்டையும் வழங்கியிருந்தோம். வடக்கில் உரிமைகளைக் கோரி போராட்டம் நடத்துவதனை நான் தொலைக்காட்சிகளில் பார்த்துள்ளேன். அந்த உரிமைகள் கிடைத்தால் முதலில் மகிழ்ச்சியடைவது நானாகவே இருக்கும்.

30 ஆண்டுகளுக்குப் பின்னர் அரசுக்கு எதிராக போராட்டங்களையும், கோசங்களையும், பணிப் புறக்கணிப்புக்களையும் முன்னெடுப்பதற்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இது தொடர்பில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். ஏனெனில் முன்னர் இவ்வாறான போராட்டங்களை மேற்கொண்டால் இராணுவமும் பொலிஸாரும் அவற்றை அடக்கி விடுவார்கள். ஆனால் இப்போது சிவாஜி லிங்கம் போன்றோரின் தலைமையில் போராட்டங்கள் நடைபெறுகின்றன - என்றார். (ந-5.114.31)

## மக்கள்...

முன்னெடுத்தது. இராணுவத்தினர் அதிகளவில் கொல்லப்படவும் அது காரணமாக அமைந்தது. நாம் பொதுமக்களை கருத்திலெடுக்காது செயற்பட்டிருந்தால் எமது தரப்பில் இழப்புக்கள் குறைவாக இருந்திருக்கும். போரும் விரைவில் நிறைவுக்கு வந்திருக்கும்.

இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடகப் பேச்சாளரும், அமைச்சருமான மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வாராந்தச் செய்தியாளர் சந்திப்பு நேற்று இடம்பெற்றது. அதில் பங்கேற்றுக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது

கடந்த காலங்களில் நடந்த சம்பவங்களைக் கண்டிப்பதுடன், இனிமேல் அவ்வாறு இடம்பெறாது தடுக்கவும் நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற குரலை எப்போதும் முன்வைப்போம். இவ்வாறான குற்றங்கள் தொடர்பில் வெறுமனே விசாரணைகளை நடத்துவதில் எந்தப் பயனும் இல்லை. குற்றவாளிகளைத் தண்டிக்க வேண்டும். குற்றவாளிகளைத் தண்டிப்பதன் மூலமே நியாயம் நிலைநாட்டப்படும். பன்னாட்டுச் சமூகத்தின் அழுத்தங்களும் குறையும். அரசு தனது பொறுப்புகளில் இருந்து விலக முடியாது. குற்றவாளிகளைத் தண்டிக்கும் பொறுப்பு அரசுக்கு உள்ளது.

போர்க்குற்றங்கள் குறித்தும் கவனம் செலுத்த வேண்டும். இறுதிப் போரில் 40 ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என்ற கணிப்புத் தவறானது.

### காணாமல் ஆக்கப்பட்டோர்

காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் மிகப் பெரிய அழுத்தத்தை எமக்கு ஏற்படுத்தியுள்ளது. காணாமல் போனோர் பட்டியலில் அதிகமான பெயர்கள் உள்ளன. போர்க் காலத்தில் சரணடைந்தனர் என்று கூறப்படும் நபர்கள், காணாமல் ஆக்கப்பட்டனர் என்று கருதப்படுவது தவறு. போர்க் காலத்தில் நாட்டைவிட்டு வெளியேறியவர்களின் விவரங்கள் இல்லை.

மேற்குலக நாடுகள் தஞ்சமடைந்தவர்களின் விவரங்களை வெளியிடுவதும் இல்லை. இலங்கையிலிருந்து சென்ற பலர் பெயர்களை மாற்றிக் கொண்டு அங்கு வசிக்கின்றார்கள். மேற்குலக நாடுகளில் உள்ள இலங்கையர்களின் பெயர் விவரங்களை அந்த நாடுகள் வெளியிடவேண்டும். அதன் பின்னரே காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான உண்மையான விவரத்தை வெளியிட முடியும் - என்றார். (ந-5)

## அலங்காரக்...

அதிகாலை முதல் நடைபெற்ற பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து மு.ப. 10 மணிக்கு கொடியேற்றம் நடைபெற்றது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் நாட்டின் பல பாகங்களில் இருந்தும் வந்து கலந்து கொண்டனர்.

காலை முதல் மக்கள் அங்கப்பிரதிஷ்டை செய்தும், அடி அழித்தும், கற்பூரச் சட்டி எடுத்தும் என நேர்த்திகளைப் பூர்த்தி செய்தனர். முற்பகலில் தூக்குக் காவடிகளும் ஆலயத்தை வந்தடைந்தன.

பக்தர்களின் பாதுகாப்பை முன்னிட்டு ஆலய சூழலில் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் வகையில் ஆலய சூழலில் மாநகராட்சி மன்றத்தால் மறைகாணிகளும் பொருத்தப்பட்டிருந்தன. (ந-37.17)

## பொன்னாலை...

கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12.10 மணிக்கு கொடியேற்றம் இடம்பெற்று தொடர்ந்து 16 நாள்கள் திருவிழா இடம்பெறும். 17ஆம் நாளான எதிர்வரும் 2ஆம் திகதி தேர்த் திருவிழா இடம்பெறும்.

இதேவேளை, எதிர்வரும் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரலட்சுமி பூசை இடம்பெற்று, நூல் வழங்கலும் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-5.21)

## உலங்குவானூர்தியில்...

குடாநாட்டைச் சூழவுள்ள கடற் பிரதேசம் கடும் கொந்தளிப்பாக உள்ளது.

இந்த நிலையில் நெடுந்தீவு மகா வித்தியாலயத்தில் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கான உயர்தரப் பரீட்சை வினாத்தாள்கள், கல்வி அமைச்சின் அதிகாரிகளால் எடுத்துவரப்பட்டது. பலாலி வானூர்தித் தளத்திலிருந்து உலங்கு வானூர்தியில் பொலிஸ் பாதுகாப்புடன் வினாத்தாள்கள் அனுப்பி வைக்கப்பட்டன. நெடுந்தீவு கடற்படைத் தளத்தில் உள்ள, உலங்குவானூர்தித் தளத்தில் உலங்குவானூர்தி தரையிறங்கியது. அங்கு பரீட்சை மேற்பார்வையில் ஈடுபடும் அதிகாரிகள் வினாத்தாள்களைப் பொறுப்பேற்றனர். கடற்கொந்தளிப்பு அடங்கியமையால், விடைத்தாள்கள் கப்பல் மூலம் கொண்டு வரப்பட்டன.

உலங்குவானூர்திப் பயணத்துக்கு ஒரு லட்சத்து 60 ஆயிரம் ரூபா வரையில் செலவாகியுள்ளதாக, வான்படை வட்டாரங்கள் தெரிவித்தன. (ந-5.7.8)

## வாஜ்பாய்...

ஜூலை 11ஆம் திகதி டில்லியில் உள்ள எய்ம்ஸ் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில், அவரது உடல்நிலை நேற்றுத் திடீரென கவலைக்கிடமானது.

நேற்று மாலை 3.30 மணியளவில் எய்ம்ஸ் மருத்துவமனை வெளியிட்ட அறிக்கையில், உயிர்காக்கும் உபகரணங்களுடன் சிகிச்சை அளிக்கப்படுகின்றது என்று கூறப்பட்டிருந்தது. தொடர்ந்து உடல் நிலையில் முன்னேற்றம் வரவில்லை. மாலை 5.05 மணியளவில் அவர் உயிரிழந்தார் என்று எய்ம்ஸ் மருத்துவமனை அறிவித்தது.

வாஜ்பாய் மறைவுக்கு தலைமை அமைச்சர் மோடி தனது இரங்கல் செய்தியில், அவரது பணிகள் என்றும் மறக்க முடியாதவை. ஒரு சகாப்தம் முடிந்து விட்டது என்று கூறியுள்ளார். (ந-5.61)

## ஐந்து...

இவற்றைவிட தமிழ் ஊடகவியலாளர்கள் விவகாரம் தொடர்பில் விரைவில் விசாரணை முன்னெடுக்கப்படும்.

இவ்வாறு சட்டம் ஒழுங்கு அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர்கள் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது

லசந்த விக்கிரமதுங்க, கீத் நொயார், உபாலி தென்னகோன் உள்ளிட்ட ஐந்து ஊடகவியலாளர்கள் குறித்த விடயங்களே தற்போது விசாரிக்கப்படுகின்றன. பெரும் எண்ணிக்கையிலான ஊடகவியலாளர்களுக்கு நடந்த தொடூரங்கள் தொடர்பில் விசாரணை செய்ய வேண்டியுள்ளது. அவை தொடர்பில் முறைப்பாடுகள் இருந்தாலும் தகவல்கள் இல்லாமையால் விசாரணைகளை முன்னெடுப்பதில் சிக்கல் உள்ளது. நாம் தகவல்களைத் தேடிக்கொண்டிருக்கின்றோம்.

இந்த 5 பேரின் விவகாரங்கள் மட்டுமன்றி வடக்கு, கிழக்கில் கொல்லப்பட்ட ஊடகவியலாளர்கள், தமிழ் ஊடகவியலாளர்களின் விவகாரங்கள் குறித்தும் மிக விரைவில் விசாரணைகள் முன்னெடுக்கப்படும். இந்தச் சம்பவங்கள் தொடர்பில் அந்தந்த பொலிஸ் நிலையங்களில் விசாரணைகள் முன்னேற்றமின்றி இருக்கும் நிலையில், குற்றப் புலனாய்வுப் பிரிவு போன்ற சிறப்புப் பிரிவுகள் ஊடாக விசாரணைகள் முன்னெடுக்கப்படும் - என்றார். (ந-5.61)

## விடுதியில்...

லாவாக யாழ்ப்பாணம் வந்துள்ளனர். அவர்கள் அந்த விடுதியில் தங்கியுள்ளனர்.

இரவு நகைகள் களவு போய்விடும் கழற்றி வைத்துக் கொள்ளுங்கள் என்று விடுதி உரிமையாளர் கூறினார். அவ்வாறு நகைகளைக் கழற்றி வைத்து விட்டு உறங்கினோம். காலையில் நகைகள் பணத்தைக் காணவில்லை என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். 3 லட்சம் ரூபா பணமும், 12 பவுண் நகையும் திருட்டுப் போயுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடும் செய்துள்ளனர்.

இந்த விடுதியில் முன்னரும் பல தடவைகள் திருட்டு நடந்துள்ளது என்று கூறப்படுகின்றது. விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சந்தேகத்தின் அடிப்படையில் விடுதி உரிமையாளரைக் கைது செய்தனர். அவரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

அதேவேளை, அங்குள்ள அறை ஒன்றில் பல மருத்து வகைகள் காணப்பட்டன என்றும், அவை தொடர்பாகவும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ந-8.106)

## அனைத்தையும்...

அவர் தெரிவித்தாவது

அரச தலைவர், தலைமை அமைச்சர் பதவிகளை கைப்பற்றுவதைவிடுத்து கூட்டு எதிரணி தற்போது எதிர்க்கட்சி தலைவர் பதவியை கைப்பற்றுவதற்கு முனைகின்றது. ஆட்சியை கைப்பற்றுவோம் என்று கூறிவிட்டு எதிர்க்கட்சி தலைவர் பதவியைப் பெறும் அளவுக்கு கூட்டு எதிரணி பலவீனப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சி தனது பதவியை ஒழுங்காகச் செய்வதில்லை என்ற குற்றச்சாட்டு உள்ளது. எதிர்க்கட்சியின் பொறுப்பு என்ன?. அரசின் அனைத்துத் திட்டங்களுக்கும் எதிர்ப்பு வெளியிடுவது எதிர்க்கட்சியின் கடமையல்ல. அரசின் நல்ல திட்டங்களுக்கு ஆதரவு வழங்க வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், மக்கள் விடுதலை முன்னணியும் அரசின் வேலைத் திட்டங்களுக்கு ஆதரவும் தெரிவிக்கின்றன. 19ஆவது திருத்தச்சட்டம், தேர்தல் முறைமை, தேசிய கணக்காய்வு சட்டவரைவு போன்றவற்றுக்கு எதிரணியினர் ஆதரவு வழங்குவது அவசியமாகும். அதேபோன்று எதிர்ப்பும் வெளியிட்டுள்ளனர். கூட்டு எதிரணி கூட சில சந்தர்ப்பங்களில் எமது வேலைத்திட்டங்களுக்கு ஆதரவு நல்கியுள்ளது.

தெற்கு மக்களின் பிரச்சினை குறித்து குரல் கொடுக்காமல் இருப்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதான குறைபாடாகும். அது தொடர்பில் பலரும் குற்றம் சுமத்தியுள்ளனர். எதிர்க்கட்சிகளின் செயற்பாடுகள் குறித்தோ அல்லது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரச்சினைகள் குறித்தோ எம்மால் தலையிட முடியாது. எதிர்க்கட்சிகளின் குழறுபடிகளுக்கு நாம் பொறுப்பில்லை - என்றார். (ந-5.31)

## சமையல்...

ளது. ஒரு மாத காலத்துக்குள் அந்தப் பணிகளைப் பூர்த்திசெய்து புதிய விலைச் சூத்திரத்தை அறிமுகப்படுத்த முடியும் என்று நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

சமையல் எரிவாயு நிறுவனங்கள் விலை அதிகரிப்பு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்கு அமைவாகவே விலைச் சூத்திரம் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

விலைச்சூத்திரம் அறிமுகப்படுத்தப்பட்டதன் பின்னர் உலக வர்த்தக சந்தையில் சமையல் எரிவாயுவின் விலை மாற்றத்துக்கு இணங்க நாட்டிலும் விலை மாற்றமடையவுள்ளது.

அதேவேளை, எரிபொருளுக்கு புதிய விலைச் சூத்திரம் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டது. (5.61)



# நவிண்டில் கலைமதி இறுதிக்குச் சென்றது

யாழ்ப்பாணம். ஒக். 17

கொடுக்கிளாய் சக்திவேல் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியில் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நவிண்டில் கலைமதி அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

சக்திவேல் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் நவிண்டில் கலைமதி அணியை எதிர்த்து முல்லைத்தீவு சென். யூட்ஸ் அணி மோதியது.

முதல் பாதியாட்டத்தில் இரு அணிகளின் வீரர்களும் ஒருவருக்கொருவர் சளைத்தவர்களல்ல என்பதை நிரூபிக்கும் முகமாக ஆட்டத்தை ஆரம்பித்தனர்.

ஆட்டத்தின் 10ஆவது நிமிடத்தில் கலைமதி அணியின் பானுப்பிரியன் தனது அணியின் முதலாவது கோலைப் பதிவுசெய்தார். அடுத்த இரண்டு நிமிடங்களில் பதிலடி கொடுத்தது சென். யூட்ஸ். 19ஆவது நிமிடத்தில் கலைமதி அணியின் அபி கோலொன்றைப் பதிவுசெய்ய முதல் பாதியின் முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது கலைமதி அணி.

இரண்டாவது பாதியில் இரண்டு அணிகளும் பலமுறை முயற்சி செய்தன. எனினும் கோல் கணக்கில் மாற்றத்தை ஏற்படுத்த இயலவில்லை. முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது கலைமதி அணி. (ம-422)

# உதயதாரகை அரையிறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம். ஒக். 17

உருத்திரபுரம் விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்படும் உருத்திபுரம் நினைவுக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் கிளிநொச்சி உதயதாரகை அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

உருத்திரபுரம் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இரண்டாவது காலிறுதியாட்டத்தில் கிளிநொச்சி உதயதாரகை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து லக்கி ஸ்ரார் விளையாட்டுக் கழகம் மோதியது.

4:2 என்ற கோல் கணக்கில் உதயதாரகை விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றது. ஆட்டநாயகனாக செ.ஜெயந்தரூபன் தெரிவானர். (ம-23)





# சித்தி விநாயகர் அணி ஈகிள்ஸை வீழ்த்தியது

யாழ்ப்பாணம். ஒக். 17

தாழ்வுபாடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் ரி-20 துடுப்பாட்டத் தொடரில் சித்திவிநாயகர் விளையாட்டுக் கழக அணி 14 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

நானாட்டான் பொது விளையாட்டு மைதானத்தில் இந்த ஆட்டம் இடம்பெற்றது. இதில் சித்தி விநாயகர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மன்னார் ஸ்ரார் ஈகிள்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சித்தி விநாயகர் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப் பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 164 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக கணேஸ் 86 ஓட்டங்களைப்பெற்றார். பந்துவீச்சில் மில்ரன் 2 இலக்குகளையும். பிரியகாந், நார்த்தீபன் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

165 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மன்னார் ஸ்ரார் ஈகிள்ஸ் அணி 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 150 ஓட்டங்களை மட்டும் பெற்றது. இதையடுத்து 14 ஓட்டங்களால் வெற்றிபெற்றது சித்தி விநாயகர் அணி.

பந்துவீச்சில் பிரசன்னா 3 இலக்குகளையும் ஹரிஸ் 2 இலக்குகளையும் வீழ்த்தினர். ஆட்டநாயகனாக கணேஸ் தெரிவானார். (ம-23)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம். ஒக். 17

தாழ்வுபாடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் ரி-20 துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் நானாட்டான் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இந்து முன்னணி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. பிற்பகல் ஒரு மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஸ்ரார் ஈகிள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென். விக்டோரிஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

# திருநகர் விளையாட்டுக் கழகம் அரையிறுதிக்கு தகுதி பெற்றது

யாழ்ப்பாணம். ஒக். 17

உருத்திரபுரம் விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்படும் உருத்திபுரம் நினைவுக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் திருநகர் விளையாட்டுக் கழகம் அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

உருத்திரபுரம் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது காலிறுதியாட்டத்தில் திருநகர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கனகபுரம் விளையாட்டுக் கழகம் மோதியது. 3:0 என்ற கோல் கணக்கில் திருநகர் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றது. ஆட்டநாயகனாக தே.ஜெயதாஸ் தெரிவானார். (ம-23)



## நியூசியின் பயிற்சியாளர் ஹேரி ஸ்ரீட்



நியூசிலாந்து கிரிக்கெட் அணியின் புதிய பயிற்சியாளராக அந்த அணியின் முன்னாள் வீரரான ஹேரி ஸ்ரீட் நேற்று நியமிக்கப்பட்டார்.

நியூசிலாந்துகிரிக்கெட்அணியின் தலைமைப் பயிற்சியாளராக இருந்த மைக் ஹெஸன் கடந்த ஜூன் மாதம் தனது பதவியில் இருந்து ஒய்வை அறிவித்தார். இதையடுத்து புதிய பயிற்சியாளராக நியமிக்கப்பட்டார் ஸ்ரீட் 46 வயதான ஹேரி ஸ்ரீட்டின் ஒப்பந்த காலம் 2 ஆண்டுகள் ஆகும். எதிர்வரும் ஒக்ரோபர் மாதம்நியூசிலாந்து அணி ஐக்கிய அரபு இராச்சியத்தில் வைத்து பாகிஸ்தானை எதிர்க்கவுள்ளது. இதிலிருந்து ஸ்ரீட்டின் பயிற்சிக் காலம் ஆரம்பமாகும். (ம)

## இளைஞர் அசத்தல்

யாழ்ப்பாணம், ஒக். 17

மல்லாகம் சிறிமுருகன் ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் 45ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மின்னொளியில் நடத்தப்பட்டுவரும் கரப்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் இந்து இளைஞர் அணி நேர்செற் கணக்கில் வெற்றிபெற்றது.

ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இரவு 7 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் சண்டிலிப்பாய் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நீர்வேலி காமாட்சி விளையாட்டுக் கழக அணி மோதியது. இந்த ஆட்டத்தில் 25:08, 25:18 என்ற நேர் செற் கணக்கில் சண்டிலிப்பாய் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. (ம-23)

## வென்றது காமாட்சி

யாழ்ப்பாணம், ஒக். 17

மல்லாகம் சிறிமுருகன் ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் 45 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மின்னொளியில் நடத்தப்பட்டு வரும் கரப்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் நீர்வேலி காமாட்சி விளையாட்டுக் கழக பி அணி வெற்றிபெற்றது.

ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இரவு 8 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் நீர்வேலி காமாட்சி விளையாட்டுக் கழக பி அணியை எதிர்த்து புத்தூர் சென்றல் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதியது. 25:22, 25:23 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதலிரு செற்களையும் கைப்பற்றி 2:0 என்ற நேர்செற் கணக்கில் வெற்றிபெற்றது நீர்வேலி காமாட்சி விளையாட்டுக் கழக பி அணி. (ம-23)

# இங்கிலாந்தின் பேரெழுச்சியை இந்திய அணி சமாளிக்குமா?





இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான ஐந்து ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் மூன்றாவது ஆட்டம் நாளை ஆரம்பமாகிறது.

இந்திய அணி இங்கிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான ரி20 தொடரை இந்தியாவும், ஒருநாள் தொடரை இங்கிலாந்தும் கைப்பற்றின. இதைத் தொடர்ந்து தற்போது ஐந்து ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெற்று வருகிறது.

இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான முதலாவது ஆட்டம் விறுவிறுப்புக்குப் பஞ்சம் இல்லாமல் நடைபெற்றது. அந்த ஆட்டத்தில் 31 ஓட்டங்களால் வெற்றிபெற்றது இங்கிலாந்து. ஆனால் இரண்டாவது ஆட்டம் அப்படியே இங்கிலாந்தின் பக்கமாக அமைந்தது. அந்த ஆட்டத்தில் இன்னிங்ஸாலும் 159 ஓட்டங்களாலும் வெற்றி பெற்றது இங்கிலாந்து. ஆக, முதலிரு ஆட்டங்களிலும் வெற்றி பெற்று 2:0 என்ற அடிப்படையில் முன்னிலையில் உள்ளது இங்கிலாந்து. இதனால் அடுதத மூன்று ஆட்டங்களிலும் வெற்றிபெற்றாலேயே இந்திய அணியால் கிண்ணம் வெல்ல முடியும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. இத்தகையதொரு பின்னணியில் நாளை ஆரம்பமாகும் டெஸ்ட் ஆட்டம் மிகுந்த எதிர்பார்ப்புக்களுக்கு உரியதொன்றாக அமைந்துள்ளது. நொட்டிங்ஹாம் மைதானத்தில் இந்த ஆட்டம் இடம்பெறவுள்ளது. (ம)



## செரீனாவை வென்றார் பெட்ரா கிவித்தோவா

அமெரிக்கப் பகிரங்கத் தொடருக்கான முன்னாயத்தத் தொடராகக் கருதப்படும் சின்சினாட்டி ரென்னிஸ் தொடரில், பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட வீராங்கனையான செரீனா வில்லியம்ஸ், பெட்ரா கிவித்தோவாவிடம் தோல்வியடைந்து வெளியேறினார்.

பகிரங்கத் தொடர்களுக்கு அடுத்த நிலை அந்தஸ்தில் உள்ள தொடர்களில் சின்சினாட்டி ரென்னிஸ் தொடரும் ஒன்று. இந்தத் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் செரீனா வில்லியம்ஸை எதிர்த்து பெட்ரா கிவித்தோவா மோதினார்.

மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் கிவித்தோவா. இரண்டாவது செற்றை 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் செரீனா. முதலிரு செற்களின் நிறைவில் இருவரும் தலா ஒவ்வொரு வெற்றியுடன் இருந்தனர். மூன்றாவது செற்றில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அந்த செற் 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கிவித்தோவாவிடம் சென்றதை அடுத்து அவர் 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றார். (ம)


## பெடரர் முன்னேற்றம்

அமெரிக்கப் பகிரங்கத் தொடருக்கான முன்னாயத்தத் தொடராகக் கருதப்படும் சின்சினாட்டி ரென்னிஸ் தொடரில், ஆண்கள் ஒற்றையர் பிரிவில் மூன்றாவது சுற்றுக்கு முன்னேற்றம் கண்டார் சுவிற்சர்லாந்தின் வீரர் றோயர் பெடரர்.

ஜேர்மனிய வீரர் கொஜோவ்கியை எதிர்த்து பெடரர் இந்த ஆட்டத்தில் மோதினார். மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதலிரு செற்களையும் முறையே 6:4, 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி நேர்செற் கணக்கில் வெற்றிபெற்றார் பெடரர். (ம)

# பாண்டியா சகலதுறை வீரரல்ல என்கிறார் ஹர்பஜன்





"பாண்டியா சிறந்த சகலதுறை வீரர் அல்ல" என்று தெரிவித்தார் ஹர்பஜன் சிங். "இனி எவரும் அவரைச் 'சகலதுறை வீரர்' என்று அழைக்கக்கூடாது" என்ற கோரிக்கையையும் அவர் முன்வைத்தார்.

இங்கிலாந்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது இந்திய அணி. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையில் தற்போது ஐந்து ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெற்று வருகிறது. இந்திய அணியின் வீரர் பாண்டியா வேகப்பந்துவீச்சுடன் துடுப்பெடுத்தாடவும் கூடியவர். இதனால் அவர் இந்தத் தொடருக்கான இந்திய அணியில் பெறுமதி மிக்க வீரராக இருப்பார் என்று கருதப்பட்டது. ஆனால் பாண்டியா தொடர்ந்து தடுமாற்றத்தையே வெளிப்படுத்தி வருகிறார். இதையடுத்தே பாண்டியாவை ஒரு பிடி பிடித்துள்ளார் ஹர்பஜன் சிங்.

"பாண்டியா ஒரு துடுப்பாட்ட வீரராக தன்னை நிலைநிறுத்தவில்லை. ஒரு பந்துவீச்சாளராகவும் அணியைத் தாங்கவில்லை. இவர் இதே நிலையில் தொடர்ந்தால் சகலதுறை வீரர் என்று பாண்டியாவை அழைப்பதை அனைவரும் கைவிட வேண்டும். அத்துடன் வருங்காலங்களில் அணிக்குள் சேர்ப்பது பற்றியும் சிந்திக்க வேண்டும்" என்று ஹர்பஜன் மேலும் தெரிவித்தார். (ம)

# பன்னாட்டு கால்பந்து சம்மேளனத் தரப்படுத்தல்; முதலிடம் பிடித்தது உலகச் சம்பியன் பிரான்ஸ்

## இலங்கை 200ஆவது இடத்தில்

**பன்னாட்டு கால்பந்து சம்மேளனத்தின் தரப்படுத்தலில் முதலிடம் பிடித்தது பிரான்ஸ். ரஷ்யாவில் அண்மையில் முடிவடைந்த உலகக்கிண்ணத் தொடரில் கிண்ணம் வென்றதை அடுத்தே பிரான்ஸுக்கு முதலிட அந்தஸ்து கிட்டியது. இலங்கை 888 புள்ளிகளுடன் 200ஆவது இடத்தில் உள்ளது.**



பன்னாட்டு கால்பந்து சம்மேளனம் நேற்றுத் தனது தரவரிசையைப் புதுப்பித்தது. ஆறு இடங்கள் முன்னேறி முதலிடம் பிடித்தது பிரான்ஸ். இதன்படி அந்த அணி ஆயிரத்து 726 புள்ளிகளைப் பெற்றுள்ளது. பெல்ஜியம் ஓர் இடம் முன்னேறி இரண்டாவது இடத்தில் உள்ளது. இதன்படி அந்த அணி ஆயிரத்து 723 புள்ளிகளுடன் உள்ளது. பிரேசில் மூன்றாவது இடத்துக்குச் சரிந்துள்ளது. இதன்படி அந்த அணி ஆயிரத்து 657 புள்ளிகளைப் பெற்றுள்ளது. ரஷ்ய உலகக்கிண்ணத் தொடரில் இறுதியாட்டம் வரை முன்னேறிய குரோசிய அணி வியக்கத்தக்க வகையில் 16 இடங்கள் முன்னேறி நான்காவது இடத்தில் உள்ளது. இதன்படி அந்த அணி ஆயிரத்து 643 புள்ளிகளைப் பெற்றுள்ளது. உருகுவே ஆறு இடங்கள் முன்னேறி ஐந்தாவது இ த்தில் உள்ளது. அந்த அணி ... ரத்து 627 புள்ளிகளைப் ... ள்ளது.

இங்கிலாந்து ஆறு இடங்கள் முன்னேறி ஆறாவது இடத்திலும், போர்த்துக்கல் 3 இடங்கள் பின்னோக்கி நகர்ந்து ஏழாவது இடத்திலும், சுவிற்சர்லாந்து இரண்டு இடங்கள் பின்னோக்கி எட்டாவது இடத்திலும், ஸ்பெய்ன் ஓர் இடம் முன்னோக்கி ஒன்பதாவது இடத்திலும், டென்மார்க் மூன்று இடங்கள் முன்னோக்கி பத்தாவது இடத்திலும் உள்ளன. ஆர்ஜென்ரீன அணி ஆறு இடங்கள் சரிந்து 11ஆவது இடத்திலும், ஜேர்மனி 14 இடங்கள் சரிந்து 15ஆவது இடத்திலும், இத்தாலி இரண்டு இடம் சரிந்து 21ஆவது இடத்திலும் உள்ளது. ரஷ்யா 21 இடங்கள் முன்னேறி 49ஆவது இடத்திலும் உள்ளன. (ம)


## மரண அறிவித்தல்

### கந்தையா குமாரவேலு (ஆபிரகாம்)



தோற்றம் 02.08.1930 | மறைவு 16.08.2018

அரியாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும், அரியாலை 39, வைரவர் கோயில் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா குமாரவேலு நேற்று (16.08.2018) வியாழக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா பரமேஸ்வரி தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களானகந்தையா அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்புமருமகனும் காலஞ்சென்ற கமலாம்பிகையின் அன்புக் கணவரும் கலாராணி (கிளி), ஜெயவரதராஜா (வரதன், லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சதாசிவம், வசந்தமாலா (வவா, லண்டன்) ஆகியோரின் அன்புமாமனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், பாக்கியலட்சுமி, சிவராசா, இரத்தினசிங்கம் மற்றும் செல்வமணி, கமலாம்பிகை ஆகியோரின் அன்புச்சகோதரரும் சறோஜினி தேவி, தங்கராணி, தவமணி, கனகரத்தினம் காலஞ்சென்ற வர்களான செல்வராசா, கதிரேசு ஆகியோரின் அன்புமைத் துனரும் காலஞ்சென்ற வர்களான செல்லத்துரை, ராசலிங்கம், தர்மலிங்கம், துரைசிங்கம், குணரத்தினம் மற்றும் ஞானலட்சுமி, யோகம்மா ஆகியோரின் மைத்துனரும் திவாகரதாசன், சுபாஜினி, கஜந்தினி, நிசாந்தினி, டினேஸ், சரண்யா, இலக்ஷியா, பூஜா (லண்டன்) ஆகியோரின் அன்புப்பேரனும் ஏஞ்சலினின் அன்புப்பூட்டனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (17.08.2018) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப. 11 மணிக்கு கொழும்புத்துறை வீதி வசந்தபுரத்தில் உள்ள சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**39, வைரவர் கோயில் வீதி,**
**அரியாலை, யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 138 7708, 077 553 2867**


# ரியல் மட்ரிட்டை வீழ்த்தி அத்லெட்ரிக்கோ சம்பியன்



ஸ்பானியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான சுப்பர் கப் தொடரில் ரியல் மட்ரிட்டை வீழ்த்தி கிண்ணம் வென்றது அத்லெட்ரிகோ மட்ரிட்.

சுப்பர் கப் கிண்ணத்துக்கான இறுதியாட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. ரியல் மட்ரிட் - அத்லெட்ரிகோ மட்ரிட் அணிகள் இந்த ஆட்டத்தில் மோதின. ரியல் மட்ரிட் அணியில் இருந்து ரொனால்டோ வெளியேறிய பின்னர் அந்த அணி சந்தித்த மிகப்பெரிய தொடர் இதுவென்பதால் இந்த இறுதியாட்டத்தில் ரியல் மட்ரிட் பெரியதொரு எதிர்பார்ப்பு நிலவியது.

ஆட்டத்தின் முதல் நிமிடத்தில் அத்லெட்ரிகோவின் முதலாவது கோலைப் பதிவுசெய்தார் கோஸ்டா. 27ஆவது நிமிடத்தில் ரியல் மட்ரிட் அணிக்கான கோலைப் பதிவுசெய்தார் பென்சிமா. வெற்றிக்கான கோலும் முதல் பாதியில் பதிவாகவில்லை. 63ஆவது நிமிடத்தில் ரியல் மட்ரிட் அணியின் தலைவர் ராமோஸ் கோலொன்றைப் பதிவுசெய்தார். 79ஆவது நிமிடத்தில் கோஸ்டா கோலொன்றைப் பதிவுசெய்ய நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் இரு அணிகளும் தலா இரண்டு கோல்களைப் பெற்றிருந்தன.

95ஆவது நிமிடத்தில் நிகுஜெஸ், 104ஆவது நிமிடத்தில் கோக் ஆகியோர் அத்லெட்ரிகோவின் சார்பில் கோல்களைப் பதிவுசெய்ய முடிவில் அந்த அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது. (ம)


விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK- 550 /-Kg
கனடா-900 /-Kg
ஜேர்மனி-700 /-Kg
நெதர்லாந்து-700 /-Kg
0768226240
V2 TRAVELS



தவறிவிட்டது
சிவப்பிரகாசம் குகதாஸ் ஆகிய எனது ஆள் அடையாள அட்டை (762241285V), வாகன சாரதி அனுமதிப் பத்திரம் என்பன கஸ்தூரியார் வீதியில் 13.08.2018 திங்கட்கிழமை தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.
(தகுந்த சன்மானம் வழங்கப்படும்)
075 731 6139


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.08.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.